Annual Subscription Rs. 6 28th February 1937. Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 வாரப்பதிப்பு No. 4

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY




திருச்சி மலைக்கோட்டையின் ஒரு புதிய தோற்றம்.

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சீவி.

பாடால் பாம்

தஞ்சை திருச்சி மதுரை சேலம் ஈரோடு


IMPORTANT TO MOTHERS
WOODWARDS CELEBRATED
GRIPE WATER
ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்
வுட்வர்ட்ஸ்
கிரைப்வாடர்
இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது
IMPORTANT TO MOTHERS.
REGISTERED TRADE MARK
Nº 99.
WOODWARDS CELEBRATED
"GRIPE WATER"
INFANTS PRESERVATIVE
FOR THE DISORDERS OF CHILDREN, VIZ.-
REGISTERED TRADE MARK "GRIPE WATER" Nº 100
WOODWARD'S
GRIPE WATER
W. WOODWARD'S LTD., LONDON, ENGLAND




லாஸ் ஆஞ்சலிஸ் மிருகக் காட்சி சாலையிலுள்ள குழந்தைகளைக் காக்கும் யானை. மிருகக்காட்சி சாலைக்கு விஜயம் செய்பவர்கள் தங்களது குழந்தைகளை இங்கு விட்டுச் செல்லலாம்.

சரித்திரப்பகுதி

# கண்டராதித்தர்

—— : : ——

(தி. நா. சுப்பிரமணியன்)

சோழநாட்டில் தஞ்சையில் வீற்றிருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களுள் கண்டராதித்த சோழதேவரும் ஒருவர். இவர் முதற் பராந்தக சோழதேவருடைய இரண்டாம் புதல்வர். சோழமன்னர்கள் ஒருவர் பின் ஒருவராகத் தரித்துக்கொண்டு வந்த இராஜகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவர் இராஜகேசரி என்னும் பட்டத்தைப் புனைந்தார்.

இவருடைய தகப்பனாரான பராந்தக சோழதேவர் கி. பி. 907-ம் வருஷத்தில் சோழ சிங்காதனம் ஏறினார். அவர் பாண்டியனுடன் யுத்தம் செய்து வெற்றிபெற்று மதுரையைப் பிடித்துக்கொண்டதன்றி, அப்பாண்டிய மன்னனுக்கு உதவியாக இருந்த இலங்கை அரசனையும் முறியடித்து ஈழநாட்டையும் கைப்பற்றினார். அதனால் அவர் கல்வெட்டுக்களில், "மதிரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்று அழைக்கப்படுகிறார். அன்றி தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்த வாணர், வைதும்பர் முதலிய குறு நில மன்னர்களை வென்று அந்நாட்டையும் சோழ அரசாட்சியின் கீழ்க் கொணர்ந்தார். இங்ஙனமாக அவருடைய ஆட்சியிலேதான் சோழராஜ்யம் மிகப் பிரபலமடையத் தலைப்பட்டது. அதற்கேற்ப அவரும் நாற்பது வருஷகாலம் நாட்டை விஸ்தரித்துச் சீர்ப்படுத்தி ஆண்டு வந்தார். தங்கள் குலதெய்வமான தில்லை நாயகர் கோயிலில் 'பொன் தகடு வேய்ந்த 'தர்மசபா' என்ற பெரியதோர் மண்டபமும் அவர் சமைத்தார்.

அம் மன்னருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள் என்பது கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றது. அவர்கள் முறையே, இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிந்தமன் அல்லது அரிஞ்சயன் எனப்படுவார்கள். பராந்தக சோழதேவருடைய ஆட்சியின் அந்தியத்திலும், அவர் புதல்வர் ராஜாதித்தன் ஆட்சியிலும், சோழராஜ்யத்தின் வடபகுதியான தொண்டை நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. கன்னரதேவன் என்னும் இராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணராஜன் தொண்டை மண்டலத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டான். கி. பி. 948-ம் வருஷத்தில் த கோலம் என்னுமிடத்தில் ( வ்லூர் அரக்கோணத்திலிருந்து செங்கல்பட்டுக்குச் செல்லும் கிளைப் பாதையில் ஒரு ரயில்வே ஸ்டேஷன்) நடந்த சண்டையில் இராஜாதித்தன் கொல்லப்பட்டுவிட்டான். சோழ சாஸனங்களில் மன்னன் வெற்றியடைந்து ரணகளத்தில் யானையின்மேல் இருக்கையில் அம்பால் துளைக்கப்பட்டு இறந்தான் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதனால் அவன் "ஆனைமேற்றுஞ்சினதேவர்" என்றும் குறிக்கப்படுகின்றான். அங்ஙனம் அவனைப் போர்க்களத்தில் கொன்றவன் கன்னரதேவனுடைய சகோதரிகணவனும், மேலைக்கங்க அரசனுமான இரண்டாம் பூதுகன் என்பது ஆத்கூர் என்னும் இடத்தில் கிடைக்கும் ஒரு கல்வெட்டால் தெரிய வருகிறது.

இராஜாதித்தனுக்குப் பிறகு அவன் தம்பியான நம் கண்டராதித்த சோழதேவர் சோழ சிங்காதனத்தில் அமர்ந்தார். இவர் ஆட்சி புரிந்த காலம் மிகவும் கொஞ்சமே. இவர் காலத்தில் சண்டை ஒன்றும் நடக்கவில்லை. இழந்த தொண்டை மண்டலத்தை மறுபடியும் கைப்பற்ற இவர் முயன்றதாகவும் தெரியவில்லை.

இவர் காலத்தில் சோழர்களது ஆதிக்கம் வடக்கே பெண்ணையாறு (அதாவது தென் பெண்ணையாறு) வரையில்தான் பரவியிருந்தது. இவர் தந்தையான பராந்தக சோழதேவரால் அடக்கப்பட்ட பாண்டியர்களும் தெற்கே கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்கி வந்தார்கள். இவ்விதமாக இவர் காலத்தில் சோழநாடு சிறியதாக ஆகிவிட்டது. இவர் புறப்போர் செய்யாவிடினும் அகப்போர் செய்து ஈசுவரன் திருவடிகளைக் கைக்கொண்டவர். தெய்வ பக்திமேலிட்ட இராஜ துறவியாகவே காலங்கழித்தார்.

இவர் தமிழ்மொழியிற் சிறந்த புலமையும் சிவபெருமானிடத்துப் பேரன்பும் பெற்றவர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டுள் ஒன்பதாம் திருமுறையுள் திருவிசைப்பாவில் தில்லைச் சிற்றம்பலத்து எம்பெருமான் மீது இவர் பாடியுள்ள திருப்பதிகம் ஒன்று காணப்படுகிறது. திருவிசைப்பாப் பாடிய ஒன்பதின்மருள் கண்டராதித்தரும் ஒருவர் என்பது யாவரும் அறிந்த செய்தியே. இப்பொழுது கிடைக்கும் ஒரு பதிகத்தைத் தவிர இவர் பாடிய பதிகங்கள் பல இருந்திருத்தல் வேண்டும் என்று நாம் எண்ண இடம் இருக்கிறது. திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்தர் நம் அரசரான கண்டராதித்த சோழதேவரே என்பது திருவிசைப்பாவில் "மின்னாருருவ மேல விளங்க" என்னும் தொடக்கத்துப் பதிகத்தின் எட்டாவது பாட்டில் தம் தந்தையை

"வெங்கோல் வேந்தன்
தென்ன
னாடு மீழமுங்
கொண்டதிறற்
செங்கோற் சோழன்
கோழி
வேந்தன் செம்பியன்"

என்று குறித்திருப்பதோடு அவர் தில்லையம்பலத்திற்குப் பொன் வேய்ந்ததைக் கூறியிருப்பதாலும், பத்தாம் பாட்டில்

"காரார் சோலைக்
கோழி வேந்தன்
தஞ்சையர்
கோன் கலந்த
வாராவின் சொற்
கண்ட ராதித்தன்"

என்று தம்மையே குறித்திருப்பதாலும் நன்கு அறியலாம்.

இம் மன்னருக்கு வீர நாராயணியார், செம்பியன்மாதேவியார் என்று இரண்டு மனைவியர் உண்டு. அவ்விருவருள், வீர நாராயணியார், இவரது வாழ்க்கையின் முற் பகுதியில் இருந்தவர். இவர் தந்தையான பராந்தக சோழ தேவரது காலத்திலேயே, அதாவது கி. பி. 931ம் ஆண்டிலேயே அவ்வரசியார் பல கோயில்களை எழுப்பிப் புகழ் பெற்றிருந்தனர். ஆயினும் இம்மன்னரது வாழ்க்கையின் பிற்பகுதியில் அவ்வரசியின் பெயர் காணப்படவில்லை. பதிலாகச் செம்பியன் மாதேவியார் பெயரே காணப்படுகிறது. அன்றியும், அவ்வம்மையார் உடைய பிராட்டியார் என்று கூறப்படுவதால், வீர நாராயணியார் முன்னமே இறந்து விட்டனர் என்பதும் தெரிய வரும்.

செம்பியன் மாதேவியார் மழவரையன் மகள் என்பதை "மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார்" என்று கல் வெட்டுக்களில் குறிக்கப்படுவதால் அறிகிறோம். இவருக்கு மதுராந்தகன் என்ற உத்தம சோழன்



பாசியன் "பாரதி" சங்கத்தின் சார்பில் தைப்பூச தினத்தன்று உடல் வலிமைக் காட்சிகள் செய்து காண்பித்தவர்கள்.

என்ற ஒரு பிள்ளை உண்டு. அதனாலே கல்வெட்டுக்களில் இவ்வரசியார் "உத்தம சோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் ஸ்ரீ பிராந்தகன் மாதேவடிகளாரான செம்பியன் மாதேவியார்" என்று அழைக்கப்படுகிறார்கள். புதல்வர் பிறந்தவுடன் அரசர் வானுலகம் சென்றார் என்று செப்புப் பட்டயங்களில் கூறப்படுகின்றபடியாலும், இவ்வரசியார் தம் நாயகர் இறந்த பிறகு நீண்டகாலம், அதாவது சற்றேறக்குறைய நாற்பத்தைந்து வருஷங்கள் உயிருடன் இருந்திருக்கின்றாராகையாலும், கண்டராதித்த சோழதேவர் தம் தேவியின் செம்பியன் மாதேவியாருடன் அதிக காலம் இவ்வுலக வாழ்க்கை நடாத்தி இன்புற்றிருக்கவில்லை யென்று தெரிகின்றது.

இம்மன்னரும் இவர்தம் இரு தேவியாரும் பல கோயில்கள் எடுப்பித்து அவற்றிற்குப் பல நிலங்கள் அளித்திருக்கின்றார்கள். இவ்வரசர் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்ற ஒரு ஊரைக் காவிரி நதியின் வடகரையில் தம் பெயரால் அமைத்தார். அதுவே இப்பொழுது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கண்டராதித்தம் என்னும் ஊர் போலும். (இவ்வூர் கொள்ளிடத்தின் வடகரையில் திருமழுவாடிக்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலும், திருவையாற்றுக்கு எதிராகவும் உள்ளது). செம்பியன்மாதேவியார் தஞ்சை ஜில்லாவில், அய்யம்பேட்டைக்குப் பக்கத்தில் உள்ள திருக்குரங்காடு துறை, மாயவரம் தாலூகாவில் உள்ள திருமணஞ்சேரி முதலிய இடங்களில் உள்ள கோயில்களைக் கற்றளிகளாக எடுப்பித்தார். திருவாரூர், திருநறையூர், சித்தீச்சுரம், முதலிய ஊர்களில் வேண்டிய நிபந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார். இப்பொழுது கோனேரிராஜபுரம் என்று வழங்கப்படும் திருநல்லத்தில் இருந்த கோயிலைப் புதுப்பித்துநிபந்தங்கள் கொடுத்ததோடு, அந்தக் கோயிலுக்குக் கண்டராதித்தம் என்னும் பேருமிட்டார். அங்கே அவ்வரசியார், மன்னர் பிள்ளை ஆகிய மூவரும் கடவுளை வழிபடுவதாகக் கல்லில் பதுமங்கள் செதுக்கியுள்ளார். இவ்விதமாகத் தஞ்சை ஜில்லாவில் உள்ள பல கோயில்களுக்கு இவர்கள் உதவி செய்திருக்கிறார்கள்.

இவ்வரசர் நாட்டை நீண்ட காலம் அதாவது பதினேழு வருஷங்கள் ஆண்டு வந்தார் என்று ஒரு சாராரும், இரண்டு மூன்று மாதங்களே ஆண்டு வந்தார் என்று மற்றொரு சாராரும் அபிப்பிராயப்பட்டு வந்தார்கள். இவ்விரு சாரார் கூறுவதும் சரியல்ல. கி. பி. 948-ம் வருஷத்தில் நடந்த தக்கோலத்துச் சண்டையில் இராஜாதித்தன் இறந்தவுடன், கண்டராதித்த சோழதேவர் சிங்காதனம் ஏறி ஏழுவருஷ காலம் ஆண்டுவந்தார் என்று கூறுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன. இவரது ஆட்சியின் கடைசிக் காலத்தில் பாண்டியர்கள் சோழநாட்டைத் தாக்கிச் சில பாகங்களைப் பிடித்துக்கொள்ள முயன்றார்கள். பாண்டியர்களுடன் நடந்த போரில் சோழன் தலையைக் கொண்டதாகப் பெருமை கொள்ளும் வீர பாண்டியன் என்பவனால் இவர் கொல்லப்பட்டார் என்றும் சிலர் கருதுகிறார்கள். இங்ஙனம் நாம் நிச்சயமாகக் கூற முடியாது. வீரபாண்டியனால் கொல்லப்பட்டவன் இவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த இவரது தம்பியான அரிஞ்சயனேயாவன் என்பது ஆராய்ச்சிகளால் தெரிய வருகின்றது.

நாம் மேலே கூறியபடி இவர் இறந்தபொழுது இவருடைய பிள்ளை மதுராந்தகன் சிறு குழந்தையாக இருந்தபடியால் முடி சூட்டிக்கொண்டு அரசு புரிவதற்கு ஏற்ற பருவத்தினனாக இல்லை. ஆதலால், இவருடைய தம்பியான அரிஞ்சயன் என்பவன் இவருக்குப்பின் ஆட்சி புரியத்தொடங்கினான். அரிஞ்சயனும் அவனுடைய புதல்வன் சுந்தர சோழனும், அரசாண்ட பின்னரே உத்தம சோழன் ராஜ்யபாரம் வகிக்கலானான். அவ்விருவரும் ஆண்ட காலங்களில் உத்தமனே இளவரசாகக் கருதப்பட்டு வந்தாலும், சுந்தர சோழன் தனது ஆட்சியின் இறுதியில் தன் பிள்ளையான ஆதித்தனுக்கு இளவரசுப்பட்டம் கட்ட விரும்பினான். அதனால் நாட்டிற் சிறிது குழப்பம் ஏற்பட்டது. அதனால் சுந்தர சோழன் காலத்திற்குப் பிறகு சோழசிங்காதனம் ஏறிய ஆதித்தன் கொல்லப்படவே, சோழ ராஜ்யம் முழுமையும் உத்தமசோழன் வசமாயிற்று.

அக்காலங்களில் தஞ்சையை ஆண்டுவந்த சோழ மன்னர்களைப் பற்றிய உண்மைகள் நமக்கு விவரமாகத் தெரியாதபடியால், கண்டராதித்த சோழ தேவரைப் பற்றி நாம் அதிகமாகக் கூற முடியவில்லை. இவர் சிவ பக்தியிலும், தர்ம சிந்தையிலும் சிறந்தவர் என்பதும், நாட்டை ஆண்டு வந்த சிறிது காலத்திலும் குடிகளைத் தம் கண்ணும் ஆவியுமாகக் கருதி நீதி வழுவாது ஆண்டு வந்தார் என்பதும் நாம் முக்கியமாகக் கருதவேண்டியவைகளாகும். இன்றைக்கும் நம் கண்டராதித்த சோழதேவர் சைவ நாயன்மார்கள் அறுபத்துமூவருடன் ஒருங்கு வைத்து வணங்குவதற்கு உரியாராகப் புகழுடம்புடன் வாழ்ந்து வருகிறார்.


மருவுகள், பருவுகள்
முதலிய தோல் வியாதிகள்
ஸ்திரீகளின் அழகைக்
கெடுக்கின்றன.

தெளிவும், மிருதுவும், மேன்மையுமான தோல் அதிக மனோகரமானதென்று ஒவ்வொரு ஸ்திரீக்கும் தெரியும். இந்தகாரணத்தினாலேதான் ஆயிரக்கணக்கானவர்கள் குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகிக்கிறார்கள். குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகித்தால் அது தோலைச் சுத்தமாக்குவதுமல்லாமல் அழுக்கைநீக்கி, வேர்க்குரு பருவுகள் முதலிய அவலக்ஷணங்களை போகச் செய்யும்.




இந்த செழிப்புள்ள நோய் தடுக்கும் நுரை நல்ல வாசனையாயும், உல்லாசமாயுமிருப்பதுமன்றி திரேகமுழுதற்கும் சவுக்கியத்தைக் கொடுக்கும். ஊக்குகரப்பானாவது மற்ற எந்த தோல்நோய்களினாலாவது கஷ்டம் வந்தால் குடிகூரா தைலத்தை (Cuticura Ointment), சோப்புக்கட்டியால் கழுவுமுன் உபயோகிக்கவேண்டும். அது தோலைத் தேற்றி ஆற்றி தெளிவாக்குகிறது.

குடிகூரா சோப்புக்கட்டி
CUTICURA SOAP


குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.



கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசல்ப்
கொனேகான்
வெள்ளை, வெட்டைக்கு
பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)



THIS IS NOT A HAIR-DYE




உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா?—அதனால் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தென்படுகிறதா?—அப்படியாயின் உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக் காள்ளாதீர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ். வி. ஜே. சேட், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, பெங்களூர் சிடி கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ப-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொளும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO, P.O. Box No. (M)5506. Bombay, 1

**நமது தொடர் கதை.**



# ராதா

**(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை)**

### முன் கதைச் சுருக்கம்

பாற்கடல் நந்தகோப முதலியார் மகேந்திரத்தில் காட்டு இலாகாவில் உத்தியோகத்திலிருந்தார். அவருடைய குமாரி ராதாவிற்கு அமரேசன் படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தார். நச்சுமுதலி நந்தகோபருக்கு மைத்துனன் முறை. தண்டபாணியின் சிற்றப்பன் நச்சுமுதலி.

நந்தகோபர் மனைவி அனந்த கல்யாணியின் பேச்சுக்குப் புறம்பாக நச்சுமுதலியின் சூது காரணமாக ராதாவிற்கும் தண்டபாணிக்கும் விவாகம் நடைபெறுகிறது. அனந்த கல்யாணி ஒரு பிள்ளையைப் (மாதவன்) பெற்று இறந்துபோகிறாள். நச்சுமுதலி தன் குமாரியான காளத்தியை நந்தகோபருக்கு விவாகம் செய்து வைக்கிறார்.

நச்சுமுதலியின் துஷ்கிருத்தியங்களுக்காக அவர் சிறைத் தண்டனையடைகிறார். சிறையிலிருந்து வெளிவந்தபின் தனக்குக் கீழ்ப்படியாத தண்டபாணியைச் சதிசெய்து கொன்றுவிட ஏற்பாடு செய்தார். காளத்தி நந்தகோபருடன் சண்டையிட்டுப் பிறந்தகம் சென்றாள்.

டாக்டர் நாயனார் சென்னைப் பத்திரிகையொன்றின் ஆசிரியர். அவர் தமது சுற்றுப்பிரயாணத்தில் கொத்துவால் தோப்பிற்கு வந்தார். அங்குதான் தற்சமயம் நந்தகோபர் தமது வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுக் குடும்பத்துடன் வசித்து வந்தார். நந்தகோபர் வீட்டிலில்லாத சமயம் மாதவனுக்கு நோய் உண்டாயிருந்தது. அதை நாயனார் குணப்படுத்தினார். பின்னிட்டு அவர் அவ்வீட்டு ரகஸியங்களை அறிகிறார்.

ராதாவிற்கு சென்னையிலிருந்து நந்தகோபர் எழுதிய ஒரு கடிதம் வருகிறது. அதில் அவர் தமது காணாமற்போன சகோதரி தம்பதிகளுடன் மறுநாள் வீடுவருவதாக எழுதியிருக்கிறார்.

## 17. புதுக் காதல்

சாதாரணமான மற்ற நாட்களில், தன் பாட்டிமார் நித்திரை செய்த பின்பு இரவு நெடுநேரம்வரை எதேனும் வாசித்துக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியாய்ப் படுத்துக்கொள்ளும் வழக்கமுடைய ராதா அன்று வெள்ளிக்கிழமை யிரவில், தன் அத்தையையும் அம்மானையும்பற்றிய எண்ணம் ஒன்றையே கொண்டவளாய்த் தன் புத்தகங்களை மறந்துவிட்டாள். பாட்டிமாரும் தம்பியும் படுத்துக்கொள்ளவே, தானும் படுக்கையை விரித்துவிட்டு, ராதா வெளிவராந்தாவில் வீணில் எரிந்துகொண்டிருந்த தூக்கு விளக்கை அணைப்பதற்காக வெளியே சென்றபொழுது, வராந்தா ஜன்னலிலிருந்த டாக்டர் நாயனாருடைய தபாலைக்கண்டு, "பாட்டீ, சந்தனம் இன்னும் பால்வாங்க வரவில்லையோ?" என்று கேட்க, பூசையாச்சி இந்நேரத்துக்கு மேல் வரமாட்டான்; தெற்குத்தோப்பிலும் இன்று ஆளரவத்தைக் காணவில்லை; பாலில் உறையை விட்டுவிடு" என்றாள்.

உடனே ராதா, ஜன்னலிலிருந்த தபால்களைக் கையிலெடுத்துக்கொண்டு, லாந்தலை அணைத்து, பாலுக்கு உறையூற்றிவிட்டுத் தன் அறைக்குட்போய்ப் படுத்துக்கொண்டாள். படுத்தவள் தற்செயலாய் அந்தத் தபாலில் என்னென்ன பத்திரிகைகள் வந்திருக்கின்றனவென்று பார்த்ததில், சென்னை இந்து, மெயில், முதலிய இங்கிலீஷ் பத்திரிகைகளும் மித்திரன் முதலிய தமிழ்ப் பத்திரிகைகளும், இங்கிலீஷும் தமிழும் தெலுங்கும் கலந்த சைனாபஜார் என்ற ஒரு பெரிய பத்திரிகையும், வேறு சில்லரையான குட்டிப் பத்திரிகைகளும், வட தேசத்து மாதாந்தப் புத்தகப் பத்திரிகைகளும் இருந்தன. ராதா அவற்றின் மேற்புறத்தில் அச்சிடப்பட்டிருந்த மேல்விலாசங்களைப் பார்த்துக்கொண்டே வரும்பொழுது, சிலவற்றில் டாக்டர் நாயனார் என்றும், சிலவற்றில் டாக்டர் அ. நாயனார் என்றும், வேறு சிலவற்றில் டாக்டர் அமரேச நாயனார் என்ற முழுப்பெயரும் போடப்பட்டிருந்ததைக் கண்டாள்! காணவே, ராதா நினைத்திராத ஆச்சரியத்துடன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்துகொண்டு, சைனாபஜார் என்ற பத்திரிகையைப் புறட்டிப் புறட்டிப் பார்த்ததில், அதில் "டாக்டர் அமரேச நாயனார், பத்திராதிபர்" என்று இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு மூன்று பாஷையிலும் போடப்பட்டிருந்தது. இதைக்காணவும் ராதா அடைந்த ஆச்சரியத்திற்களவில்லை.

"இதென்ன விந்தை! விந்தையின்மேல் விந்தையாயிருக்கின்றதே! இன்றுதினமே ஒரு ஆச்சரிய தினமாயிருக்கின்றதே! அப்பாவுடைய கடிதமே பெரிய ஆச்சரியமாயிருந்தது. அந்த ஆச்சரியத்தை முற்றும் காணுமுன், அதினும் பெரிய ஆச்சரியம் ஒன்று தோன்றியிருக்கிறதே! இவையெல்லாம் நிஜமோ பொய்யோ! ஒருக்கால் நினைவின் மிகுதியாலேற்பட்ட கனவின் தோற்றமோ! அமரேசரைப்பற்றி இன்று நான் நினைக்கவுமில்லையே!" என்றெண்ணிக்கொண்டே, ராதா பத்திரிகைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, அவற்றுடன் வந்திருக்கும் கடிதங்களைப் பார்த்தாள். அவற்றுள், சில வடஇந்தியாவிலிருந்தும், இன்னும் சில அமெரிக்கா முதலிய தூரதேசங்களிலிருந்தும் வந்த கடிதங்களென மேல்விலாஸங்களில் தோன்றின. ஒன்றுமட்டிலும் மகேந்திரம் பெண்பாடசாலை எட்மாஸ்டர் மரியதாஸரிடமிருந்து வந்த கடிதமாய்த் தெரிந்தது. இந்தக் கடிதத்தைக் காணவே, ராதா ஏதோ காண்டற்கரிய அதிசயத்தைக்கண்டவள்போலவும், கிடைத்தற்கரிய புதையலை எடுத்தவள் போலவும் ஆச்சரியம், வியப்பு, ஆனந்தம், பச்சாத்தாபம், வியசனம் வெட்கம் முதலிய எண்ணற்ற உணர்ச்சிகளாற் பீடிக்கப்பட்ட மனத்தினளாய், பிரமித்து உட்கார்ந்தபடியேசற்று நேரம் அசைவற்றிருந்தாள்; உயரே பார்த்தாள்; பூமியை நோக்கினாள்; நாடியை நிமுட்டினாள். "அவர்தானா இவர்?" என ஐயுற்றாள். "அந்தப் பெயருடையவர் வேறா?" எனத் தனக்குள் வினவினாள். இவருடைய பிரசங்க சக்தியைப் பற்றி ஊரார் சொல்லிக்கொள்வதையும், பேப்பர்களில் காணும் விலாஸத்தையும் இணைத்து நினைத்தால், "அவரே இவரென்பதில் ஐயமில்லை" என நிச்சயித்தாள். "அதனால்தான் பாட்டியிடம் இவ்வளவு விசாரணையும் செய்தார்போலும்" என்று அந்த நிச்சயத்தை உறுதிசெய்தாள்.

"ஆகவே, நான் இன்னாள் என்பதைக் கண்டுகொண்டாரோ! நான்தான் ராதாவென்ற சந்தேகத்தினால் பாட்டியிடம் இவ்வளவும் வினவினாரோ அல்லது அவள் வாய்மொழியினால்தான் என்னை முதன்முதல் இனங்கண்டாரோ தெரியவில்லையே? ஆகா! இதுவென்ன புதுமை! அவர் எங்கேயுள்ளவர்? நாமிருப்பதெந்த மூலை? அவரைக்கண்டுவருஷமும் ஆறேழாயிற்றே? கண்ணுக்கும் காதுக்கும் எட்டாமல் எங்கேயோ இருந்தவர், முடிவில் இதோவிருக்கிற தெற்குப் பங்களாவிற்கே வந்துவிட்டாரே! ஏன்; நம்முடைய வீட்டிற்கே வந்துவிட்டாரே! இரண்டு முறை வந்தாரே! எனது அருமைத் தம்பிக்கு நேர்ந்த ஆபத்தையும் நீக்கினாரே! வைத்தியர்களும் கைவிட்டு, நானும் "இனிப் பிழைப்பானா" வென்றெண்ணி வருந்தியழுத, என் செல்வச் சகோதரனுக்கு உயிர்ப்பிச்சை தந்தாரே! ஆகா! அந்த நாட்களில், என்னுடைய அறியாமையென்னும் மடநோய் திருமாறு ஞானமென்னும் அருமருந்தூட்டி என்னை ரக்ஷித்த மகானுபாவரே, நேற்றிரவு என் தம்பியின் உடல்நோய் திருமாறு மருந்தூட்டி அவனையும் அவனையே கதியென்று நம்பியிருக்கும் என்னையும் ரக்ஷிக்கும்படி நேர்ந்ததே! அதுவே விந்தையினும் விந்தை! அந்தோ! அந்த நாட்களை யெண்ணும்பொழுதும்—அவர் மகேந்திரத்தில் மேற்கே பார்த்த முன் வராந்தாவில் நாற்காலியில் வீற்றிருந்து, நீதி நூலில் புருட பாரியரியல்பைப்பற்றி, நானும் என் அன்னையும் கேட்டானந்திக்கும்படிச்செய்த பிரசங்கத்தையும், அவருடைய இனிய குரலையும் ஊன்றி நினைக்கும்பொழுது—என் உடல் சில்லென்று புல்லரிக்கின்றதே? நேற்று நடந்ததுபோல் தோன்றுகிறதே! அவருடைய பழைய உருவம் இம் மனக்கண்களுக்கு

**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937; ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.



ராதா:—இதென்ன விந்தை......டாக்டர் அமரேச நாயஞர்...... அவர்தாஞ இவர்?

நன்ருய்த் தெரிகின்றதே! அந்த உருவம் இப்பொழுது எப்படியாய்விட்டது! மதனும் நாணியொதுங்கும் வசீகரம் பொருந்தியிருந்த அவருடைய திருமுகம் இப்பொழுது சாக்ஷாத் சிவபிராஞுடைய திருமுகம்போல்லூப்பற்ற ஞானகம்பீரத்துடன் விளங்குகின்றதே! எழுவருஷத்திற்குள் எவ்வளவு மாறுதல்! எத்தனே பேதம்! கேவலம் காலபேதம் எத்தனே பேதங்களே விளேக்கின்றது!

ஏ! காலமே, உனக்கு இத்தனே சக்தியுமுண்டா? அவருடைய பூத சரீரமே இத்தனே பேதமடைந்துவிட்டதாஞல், அதனுண்ணின்று அதை யியக்கும் அவருடைய மனம் எத்தனே பேதமடைந்திருக்கின்றதோ! சரீர நிலேமைக்குத் தக்க வண்ணமே அவருடைய மஞேநிலேமையும் மாறுபட்டுத்தானேயிருக்கும்! அந்த நாட்களில் இல்லறத்தின் பெருமையை வியந்து கூறும் இயல்புடைய அவருடைய திருவுள்ளம் இப்பொழுது துறவறத்தைப் பற்றி நிற்பதாகவே அவருடைய வெளித்தோற்றம் காட்டுகின்றது. மனேவிமக்களுடன் இல்லறத்தில் வாழும் சாமான்ய புருஷரின் முகத்தைப்போல் அவர் திருமுகம் தோன்றவில்லேயே! தன் அழகை அந்நிய புருஷர் காணப்படாதென்று அஞ்சிய ஓர் கற்புடை மாது முக்காடு முதலிய உபாயங்களால் தன் முகத்தை மறைத்துக் கொள்வது போல், எனது அமரேசரும் தன் பேரழகை மாதரே காணக்கூடாதென விரும்பியவர் போல், தன் இளமுகத்தைச் சிகையிஞல் மறைத்திருக்கின்ருரெனத் தோன்றுகின்றதே! இவர் என்போன்ற ஓர் மங்கையை மணந்து வாழ்பவராயிருப்பின், இந்தக்கோலம் என் பூணுகின்ருர்? அங்ஙனமாயின், எல்லாப் பெருமையும் பொருந்திய எனது சற்குருநாதன் அமரேசர் இவ்வாறு துறவறத்தை நாடற்கு உற்ற காரணம் யாதோ? யௌவனம், அழகு, கல்வி, ஞானம், ஒழுக்கம் முதலிய சாதாரண புருஷ லக்ஷணங்களும், வாக் சாதுர்யம், நாவன்மை, கம்பீரம், வசீகர சக்தி முதலிய எண்ணற்ற விசேஷ லக்ஷணங்களும் பொருந்திய எனது அன்பர் அமரேசர் துறவறம் பூண்டமாயமென்ன?

இவ்வுலகில்—அல்ல, இந்த இந்தியா தேசத்தில்—பெண் ஜென்மம்—அதாவது மனித ஜாதியில் பெண் ஜென்மம்—பெற்ற ஒரே வகுப்பாருக்கு மட்டும்தானே அந்த ஜெகதீசன் ஸ்வாதீனம் என்னும் விலே பெற்ற இன்பம் கிடையாதென மறுத்துவிட்டார்! அல்லால், ஆணேப் பிறந்த சிங்கங்களுக்கு ஸர்வ ஸ்வாதீனமும் அளித்திருக்கின்ருரே! ஸ்வாதீனக்குறைவிஞல், என்போன்ற பெண்ணேப் பிறந்த பாபாத்மாக்கள் துன்பத்தையடைவதும் இயல்பு; அது பற்றியே நாம் துறவு பூணுவதும் முறையாகும். ஆஞல், எனது அமரேசர்—எனது குருநாதன் அமரேச நாயஞர்—இந்த யௌவன பருவத்தில்—தேவ கன்னியருங்கூட எனக்குஎனக்கென்று ஆசைகொள்ளும் இணேயற்ற பேரழகைப் பெற்றிருந்தும்—இக்கொடிய தவ வேடம் பூண்டிருக்கின்ருரே! என்ன காரணம்! என்னமாயம்! என்ன விந்தை! என்ன ரகஸ்யமென்று தெரியவில்லேயே! நல்லது; நமது அமரேசர் உள்ளபடித் துறவறம் பூண்டது உண்மையாயின், அவருடைய பாததூசியின் ஒரு அணுவின் விலேயும் பெருத என்போன்றவர்களின் ஞாபகம் அவருக்கெப்படி இருந்தது? எழு வருஷத்திற்கு முன் ஏகதேசமாய்ப் பழகியறிந்த என் பழக்கம் இந்நாள் வரையும் தங்கியிருத்தற்கு அவருடைய திருவுளத்தில் இடமிருந்த விதமென்ன? அவரால் அளவற்ற நன்மையையடைந்தவளாகிய நான், அவரை மறவாதிருந்ததும் இருப்பதும் இயல்பும் முறையுமாகும். ஆஞல், என்னேப்போன்ற எண்ணற்ற சிட வர்க்கத்தாருக்குக் கல்வி கற்பித்து, எண்ணற்ற பேருடன் பழகியிருக்கும் எனது நாயஞர், என்னிடமிருந்து யாதொரு நன்மையும் பெருதவராயிருந்தும், என்னேயும் ஒரு பொருளாய் நினேத்து, என் குடும்பத்தைப்பற்றி இரண்டு மணிநேரம் என் பாட்டியுடன் சம்பாஷிக்கும்படித் தூண்டியது அவர் என்பாற்கொண்ட கருணேயா அல்லது அன்பா அல்லது வேறெது? அவர் எனக்குக் கல்வி கற்பித்த காலத்தில், அமங்கலி சுமங்கலியென்ற இருவகைப் பெயரும் பேதமுமற்று, இரண்டிற்கும் பொதுவான அல்

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப்சந்த்
175 சைஞ பஜார். மதராஸ்

மாதிர் பிரதி இரும்
கலியுகம்
ஆபீஸ் சென்னே



ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி. சொற்பன மிரட்சி சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திரவிருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1 க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னே.

ந...கையான இடம்.

மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.

நீரிழிவு, மதுமேகம்
முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்
மயூரகாய கற்பம்
ஒரு தெய்வீக சஞ்சீவி!!
இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளேக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு
இன்றே எழுதுங்கள்.
ஸ்கந்தாசிரமம்
தபால்பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

லது இரண்டுமற்ற—கன்னிகையென்ற குற்றமற்ற பெயரோடிருந்த நான், இப்பொழுது அவர்க்குக் குற்றேவல் செய்து அவர் உச்சிட்டத்தைப் புசித்து வாழ்கின்ற அடிமையாயிருந்தற்குக்கூட யோக்யதையற்ற அமங்கலியென்னும் கொடிய பாதகப் பெயர் பெற்றிருக்கின்றேனென்பதை அவர் அறியவில்லையோ? நான் உண்மையில் அமங்கிலியல்லேனாயினும், உலகவழக்கின்படியேனும் அந்த இழிந்த பெயரை இடையிலுள்ளோர் எனக்கு இட்டுவிட்டார்களே! அந்த ஜெகதீசனறிய, ஒரு புருஷனுடைய கரமேனும் என்னைத் தீண்டியிருப்பதில்லை; ஒரு புருஷனுடைய சுவாசமேனும் என் மேற்பட்டிருப்பதில்லை; ஆயினும், பெயரளவில், ஒரு புருஷனால் உமிழ்ந்து கக்கிக் கழிக்கப்பட்ட உச்சிட்டமென்ற பொல்லாப் பெயரைப் பெற்றேனே! தெய்வமே!" எனத் தன் மனம்போன வழியெல்லாம் ராதா சிந்தித்தாள்; மருண்டாள்; மயங்கினாள்.

தன்னையறியாமலே தன்னுள் நுழைந்து தன்னை இப்படி வருத்தும் நோய் இன்னதென்பதை ராதா சிறிதும் உணரவில்லை; தன் உள்ளத்தில் நிகழும் எண்ணற்ற எண்ணங்களின் உட்கருத்தின்னதென்பதை அவளே யறியவில்லை. அன்று மாலை நான்கு மணிவரை யாதொரு சலனமின்றி அமைதியாயிருந்த ராதாவின் ஆழ்ந்த மனக்கடலில் நிறைந்திருந்த ஞானமென்னும் தெளிந்த ஜலமானது சென்னைக் கடிதமென்னும் ஆச்சரிய ஆனந்தக் காற்றினால் சிறிது அசைந்து நாற்புறங்களிலும் சந்தோஷமென்னும் சிற்றலைகளை; வீசி அமரும் சமயம், இரவு பதினொரு மணிக்கு, டாக்டர் அமரேச நாயனுரைப் பற்றிய எண்ணமென்னும் வலிய புயற்காற்றால் பலமாய் மோதப்பட்டு அடியோடு கலங்கிவிட்டது; அவள் மனக்கடலின் அடிவாரத்தில், அநேக வருஷங்களுக்கு முன்னமே படிந்து உறைந்து கிடந்த காதல் என்னும் சேற்றை அப்புயற்காற்று கிண்டிக் கிளைத்துக் கலக்கிவிட்டது; மேலே தெளிந்து நின்ற ஞான நீரும் அடிவாரத்திலிருந்து கிளம்பிய காதலென்னும் பழஞ்சோறும் ஒன்றாய்க் குழம்பி இரண்டறக் கலந்து விட்டது! என்ன செய்வாள் ராதா! நெடுநேரம் உட்கார்ந்தபடியேயிருந்தாள்; நீண்ட பெருமூச்சுடன் எங்கிக்கொண்டு படுத்தாள்; பத்திரிகைகளையும் கடிதங்களையும் மாறிமாறி யெடுத்துப் பார்த்தாள்; பின்னும் படுத்தாள்; தான் வாசித்த மேல் விலாஸங்களில் ஏதேனும் எழுத்துப் பிழைகளிருந்தனவோ என்னவோவென்று சந்தேகத்துடன், பின்னுமெழுந்து பேப்பர்களையெடுத்துத் தீபத்தண்டை நெருக்கிப்பிடித்து ஒவ்வொரு எழுத்தாய் எண்ணியெண்ணிப் படித்தாள். எல்லாச் சந்தேகங்களையும் தீர்த்துக்கொண்டு மறுபடியும் படுத்தாள்; தன் கண்களை மூடி மூடிப் பார்த்தாள்; நித்திரையை விரும்பி விரும்பியழைத்தாள்; அந்தோ! என்ன செய்வாள் ராதா! மற்ற நாட்களிலெல்லாம், அன்றிலும் பேடுமென, ஒன்றையொன்று இணைபிரியாது வாழுமியல்புடைய-இரவு; நித்திரை-என்னும் இரண்டினுள், அவ்வெள்ளிக்கிழமையன்று நித்திரை என்பது இரவைமட்டும் ராதாவுடனிருக்கும்படித் தனியாய் விட்டுவிட்டு, தான் எங்கேயோ சென்று ஓடியொளித்துக் கொண்டது. தன் பிரியாத்துணையைப் பிரிந்து வாடித் தன்னிடம் அடைக்கலம் புகுந்த இரவும் தன்னைப்போலவே தனிமையென்னும் நோயால் வருந்துமென்று மனமிரங்கியவள் போல், ராதா அவ்விரவை அன்பாய் வரவேற்றாள். தனிமையே இன்பமெனவும், தனிமையே ஞானமார்க்கத்துக்கியைந்த வாழ்வெனவும், அவ்வரிய தனிவாழ்வு தனக்குக் கிடைத்ததே தன் பாக்கியமெனவும் அன்றுவரை—அன்றிரவு பதினொரு மணிவரை—எண்ணி வாழ்ந்து கொண்டிருந்த ராதாவுக்கு அந்தத் தனிமையே ஒரு கொடிய நோயாய் மாறிவிட்டது; தனிமையினும் மரணமே இனியதெனத் தோன்றி விட்டது! என்ன புதுமை! இவ்வாறு, அவ்வெள்ளிக்கிழமையிரவு, தனியென்னும் நோயால் வாடிய ராதாவுக்கு மேற்கூறிய தனியிரவுதான் ஓர் தனித் துணையாய் நின்றுதவியது.

தன் கட்டையும் காவலையுமீறி இழுத்துக்கொண்டு செல்லும் தன் மனத்தை—அந்த மனப்பேயை—அதனிஷ்டப்படியே காலோய ஓடி விளையாட விடுவதற்கு அன்று வந்த

(35-ம் பக்கம் பார்க்க)

இந்தியா கவர்ன்மெண்டு வைத்திய பட்டதாரியும், கவர்ன்மெண்ட் இந்தியன் மெடிகல் ஸ்கூல் ஹாஸ்பிடல் இவைகளின் நிர்வாஹ கவர்னிங்பாடி, மெடிகல் அட்வைஸரி கமிட்டி, & ஸெண்ட்ரல் போர்டு இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலையின் மெடிகல் டிப்ளோமா பட்ட பரீக்ஷைகளுக்கு பரீக்ஷாதிகாரியுமான,

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1-க்கு 0-8-0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**மஹா பில்வாதி தைலம்:**—நேத்திர ஸம்பந்தமான எல்லா ரோகங்களையும் கண்டித்து, கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய அப்பியங்கன தைலம். 6 அவு. கொண்ட சீசா 1-க்கு ரூ. 2. வி.பி.வேறு.

**ஆனந்த படை நிவாரணி:**—இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி. பி. வேறு.

**பிரமதாரோக பஞ்ஜனி:**—மூத்திர நாளத்தின் எரிச்சல், வெள்ளை முதலிய வெட்டை ஸம்பந்தமான துஷ்டரோகங்களைக்கட்டாயம் தீர்க்கும். சீசா 1-க்கு ரூ. 3. வி. பி. வேறு.

**ஆனந்தாஞ்சனம்:**—ஸகலவிதமான வலிகளுக்கும், கீல்பிடிப்புகளுக்கும், தேவாமிருதம் போன்றது. சீசா 1-க்கு அணு 8. வி. பி. வேறு.

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

நஞ்சன்கூடு பல்பொடி ஃபாக்டெரியின்

ஜீ ஆர் **கூலாயில்** வை ல்

சிறந்த ஸ்நானத் தைலம்

அணு 3 யூனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ். ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்)

தாது புஷ்டியைக் கொடுப்பதில் சிறந்தது




சி.எம். சாமி

**மன்மதக் குளிகை**

இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப்படுத்தி இரத்த விருத்தியையும் வீரிய விருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும்.

20 குளிகை ரூ 2/-



பிராஞ்சு:—1/54. அருணசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.



"வைரத்தைப்போல் கடினமானது" என்று ஒரு கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

"வைரத்தைப்போல் கடினமானது வைரத்தைப் பெறுவதே என்று எல்லா ஸ்திரீகளுக்கும் தெரியும்."

* * * *

கோர்ட்டில் பிரதிவாதி:—நான் குடித்தவன் என்று கான்ஸ்டபிள் சொன்னல் அவருக்கு அதில் அதிகப் பழக்கமாகையால் என்னைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும்.

இப்படி அறியாமல் குற்றத்தை ஒப்புக்கொள்வதும் உண்டு.

* * * *

"இத்தாலியில் மனிதர்களுக்குத் தீங்கில்லாமல் அவர்களை பிறருக்குத் தெரியாமல் செய்யும் கிரணம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்."

"தங்களையும் பிறரையும் அறியாமல் சதா தொணதொணவென்று பேசிக்கொண்டிருப்பவர் மறைந்து போவதற்கான கிரணம் கண்டுபிடித்தால் இதைவிட அதிக உபயோகமாகவிருக்குமல்லவா!

* * * *

சிறுமி சர்க்கரையை எடுத்து சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். தாய் இதைப் பார்த்துவிட்டாள். "உன் பொம்மை முகத்தில் சர்க்கரை இருந்தால் என்ன சொல்வாய்?"

சிறுமி, "சாப்பிடு. உடம்புக்கு ஒன்றும் செய்யாது" என்று சொல்லுவேன்.

* * * *

பிரசுரம் செய்பவர்:—உங்கள் நாவல் சுமாராகவிருக்கிறது. ஆனல் நோபிள் பரிசு கிடைக்காது.

நாவல் எழுதியவர்:—எனக்கு நோபிள் பரிசு வேண்டாம். படிப்பவர்கள் 'இந்த நாவலுக்கு ஏன் நோபிள் பரிசு அளிக்கப்படவில்லை' என்று சொன்னல் போதும். இதற்கு ஏன் நோபிள் பரிசு அளித்தார்கள்' என்று சொல்வதை நான் விரும்பவில்லை.

* * * *

சாமு:—நீ விடியற்காலையில் ஸ்நானம் செய்து வருகிறுயாமே. பிரதிதினம் இந்தப் பழக்கத்தை அனுஷ்டிக்கிருயோ?

சீனு:—ஆமாம். சிலநாள் குளிர்ந்த ஜலத்திலும் சில நாள் வெந்நீரிலும் ஸ்நானம் செய்வேன். ஸ்நானம் செய்ய ஒழியாது போனல் ஸ்நானம் செய்ததாக நினைத்துக்கொள்வேன்.

* * * *

நாவலாசிரியர்:—இந்தப் பெரிய பங்களாவைப் பற்றி வேறு ஏதாவது சொல்ல முடியுமா?

"ஏன், நீங்கள் வாங்கப் போகிறீர்களா?"

"இல்லை. நீங்கள் அதைப் பற்றிச் சொல்லும் வர்ணனையை என் அடுத்த நாவலில் உபயோகித்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்"

* * * *



கைதி (முன்பு ரெயில்வேயில் டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தாவாகவிருந்த) வார்டர் திடீரெனத் தலை நீட்டியவுடன் — எந்த ஊருக்குப் போகவேண்டும்?

சிறுவன்:—இன்று நாம் போகும் விருந்தில் மாம்பழம் கொடுத்தால் ஒரு கையால் சாப்பிடுவதா இரண்டு கையால் சாப்பிடுவதா?

தாய்:—ஒரு கையால்தான் சாப்பிடவேண்டும்.

சிறுவன்:—அப்படியானல் அதற்கு நான் பழக்கம் செய்து கொள்ளுகிறேன். அப்பா நேற்று வாங்கி வந்த மாம்பழத்தில் ஒன்று கொடு.

* * * *

புதிதாக விவாகம் செய்து கொண்ட ஒரு தம்பதிகளுக்குள் பின் கண்ட சம்பாஷணை நடைபெற்றது:—

மனைவி:—நான் செய்வது எதையும் நீங்கள் கவனிப்பதேயில்லை.

கணவன்:— பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே! நேற்று இரவெல்லாம் உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?

"நேற்று மாலை நீ தயாரித்துக்கொடுத்த டிபனில் இவ்வளவு கற்களை எப்படி நீ சேர்த்திருக்கக்கூடுமென்று மனதிற்குள்ளேயே சர்ச்சை செய்து கொண்டிருந்தேன்."

* * * *


**ரூ. 500 இனும்!**

**திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும்.**

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதனல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota. Bengal.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

**குமார சஞ்சீவினி**

ரிஜிஸ்டர்ட்

குழந்தைகளின்

**ஈரல்-குலை-ஜுரக்கட்டி**

வியாதிகளுக்கு

நிகாற்ற குணமுடையது

வைத்தியர், அண்ணாமலை முதலியார்

வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

எவரு மனகு ஸமான மிலலோ நிந்துலார நேடு—பளி பளி! (எவரு)

அநுபல்லவி

அவநி ஹரிஹரப்ரம்ஹாதி ஸுருலாஸசேமோஸ போயிரி—கனு கனு (எவரு)

சரணம்

நலுவதனயபை மோஹமு ஜெந்தினுடித கிலிபோயே
முத்து லோலுகு ஸ்ரீ ஹரிவலசுசு ப்ருந்தா லோலுடை போயே
சிலுவ பூஷணுடு தாருகாவனபு செலு பாலாயே—கோ
குல முன த்யாகராஜனுதுடு மன வலல தகிலி போயே கனு கனு (எவரு)

II

| | |
|---|---|
| இந்துலார | —ஸகிகளே! |
| நேடு | —இன்று |
| இலலோன் | —இந்தப்பூமியில் |
| எவரு மனகு ஸமானமு | —நமக்கு ஸமானமானவர்கள் யாரிருக்கிறார்கள்? |
| பளி பளி! | —பேஷ், பேஷ்! |
| அவனி | —இப்பூவுலகில் |
| ஹரிஹர ப்ரம்ஹாதி ஸுருலு | —விஷ்ணு, சிவன், பிரமன் முதலிய தேவதைகள் (கூட) |
| ஆஸசேமோஸ போயிரி கனுகனு | —ஆசையினால் மோசம் போனார்களல்லவா? |
| நலுவ | —ப்ரம்ஹாவானவர் |
| தனயபை | —தாம் ச்ருஷ்டித்த பெண்ணின் மேலேயே |
| மோஹமு ஜெந்திநடு | —மோகமுற்றார். |
| தகிலி போயே | —அகப்பட்டுக்கொண்டார். |
| ஸ்ரீஹரி | —ஸ்ரீமந் நாராயணன் |
| முத்து லோலுகு விலசுசு | —அழகிய கன்னங்களுக்கு ஆசைப்பட்டு |
| ப்ருந்தா லோலுடைபோயே | —ராதா லோலனாய்விட்டார். |
| சிலுவ பூஷணுடு | —சிரமாலையணிந்த சிவபெருமான் |
| தாருகா வநபு | —தாருகாவனத்தில் |
| செலுல பாலாயே | —பெண்களின் வசமானார் |
| | (அவ்வாறே) |
| த்யாகராஜனுதுடு | —தியாகராஜனால் கொண்டாடப்பட்ட க்ருஷ்ண பரமாத்மா |
| கோகுலமுன | —கோகுலத்தில் |
| மன வலல | —நம் வலையிலே |
| தகிலி போயே கனுகனு | —அகப்பட்டுக்கொண்டாரல்லவா? |

(ஆகையால், நமக்கு ஸமானமானவர்கள் ஒருவருமில்லை.)

III

இந்தக் கீர்த்தனம் ஸ்வாமிகளியற்றிய நௌகா சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவோடு கூடிக்களித்த கோபிகா ஸ்த்ரீகள் தங்கள் பாக்கியத்தைப்பற்றித் தமக்குள்ளேயே பேசிக்கொள்வதாக இக்கீர்த்தனம் அமைந்துள்ளது.

**நலுவதநயபை மோஹமு ஜேந்திநடு:**—ப்ரம்ஹா ஜகத்தைச் சிருஷ்டித்தது பற்றிப் பலவித வரலாறுகள் வழங்குகின்றன. மனுஸ்மிருதியில் ஒருவிதமாகவும், ராமாயணத்தில் வேறொரு விதமாகவும் கூறப்படுகிறது. மூன்றாவதாக வழங்கும் ஒரு வரலாற்

(10-ம் பக்கம் பார்க்க)

Broadcast

வெளியிடப்பட்டது! வந்துவிட்டது!

# வெகுநாட்களாய் எதிர்பார்த்த ரிகார்டுகள்!

செம்மங்குடி
சீனிவாசய்யர்



R. T. 2422

மாருபல்க பாகம் 1 & 2 } ஸ்ரீ ரஞ்ஜனி

புதிய வெளியீடு

தஞ்சாவூர்
கல்யாணராமய்யர்



G. R. 2417

நருசிரி; கிரியன் — செஞ்சுருட்டி
என்று தணியும் — ராகமாலிகை

இச்சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அவர்களை


## பிராட்காஸ்ட் புதிய ரிகார்டில் கேளுங்கள்

R. 4086

பழைய ரிகார்டுகள்

R. 4059
மதுரா நகரிலோ — ஆ-பைரவி
ராமா நீபை தனக்கு — கேதாரம்

R. 4060
எமி நேரமு — சங்கராபரணம்
பாகம் 1 & 2



R. 4086 { ஹெச்சரிக காராரா — யதுகுல காம்போதி
துளஸி ஜகஜ்ஜநநி — சாவேரி

R. 4006
மரியாத காதய்யா — பைரவி
நீ வண்டி தெய்வமு — தோடி

R. 4004
மாமயிலே — ஹம்ஸநந்தி
வள்ளிமணவாளா — ஹரிகாம்போதி

## பக்க வாத்தியங்களின் இனிய அமைப்பைக் கவனிக்கவும்!

## தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

313, எஸ்பிளனேட் - மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி கட்டிடம், பிரன்ட் தெரு, கொலம்பு.

12, வாடர்லூ தெரு, கல்கத்தா.

16, ராமபார்ட் ரோ போர்ட், பம்பாய்.

F. M. S. & S. S.க்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—

தி இண்டியன் பிலிம் ஏஜன்ஸி, பினாங்—சிங்கப்பூர்.

தில் ஸர்வேச்வரன் முதலில் எல்லாவற்றையும் ஜலமயமாக்கி ஒரு விதையில் அடக்கிவைக்க, அவ்விதை ஒரு பொன் முட்டை வடிவாயிற்றென்றும், அதிலிருந்து தாமே ப்ரம்ஹா என்ற ரூபத்துடன் வெளிவந்து, உடைந்த முட்டையின் ஒரு பாகத்தை உலகமாகவும் மற்ருென்றை ஆகாயமாகவும் ஆக்கினரென்றும், அதன் பிறகு தம்மைத்தாமே ஆணுகவும் பெண்ணுகவும் ஸிருஷ்டித்துக் கொண்டு ஸிருஷ்டி காரியத்தைத் தொடங்கினரென்றும் கூறப்படுகிறது. ஆனல் மற்றுமொரு வரலாற்றில், ப்ரம்ஹா முதலில் ஸரஸ்வதியைச் ஸிருஷ்டித்து, அந்தக் கிருத்தியத்தால் தன் மகளென்று கூறத்தக்கவளான அவளையே பார்யையாகக் கொண்டு ப்ரபஞ்சத்தைச் ஸிருஷ்டித்தாரென்று கூறப்படுகிறது. அதனல்தான் ப்ரம்ஹா தம் மகளையே கண்டு காமுற்றதாக ஸ்வாமிகள் கூறுகிறர்.

முத்துலோலுகு:—என்பதற்கு, ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு என்னும் பொருள் கொள்ளல் சாத்தியமே. எப்படியெனில் 'லோலா' என்ற ஸமஸ்க்ருத பதத்திற்கு 'லக்ஷ்மி' என்று அர்த்தம் உண்டு. ப்ருந்தாலோலுடு—என்பதற்கு 'துளஸீலோலன்' என்றும் அர்த்தம் பண்ணலாம்.

IV

### தேவகாந்தாரி — ஆதி தாளம்

இது 72 மேளகர்த்தா முறைப்படி 29-வதான (தீர) சங்கராபரணத்தில் ஜன்யம். பாஷாங்க ராகம். வக்ர ஸம்பூர்ணம்-ஸரிகரி மபதநிஸ்-ஸ்நிதப மகரிஸ என்று நடை. ஸரிமபதநிஸ்-ஸநிதப மகரிஸ என்று சில நூல்களில் காணப்படுகிறது. தநிஸ்ா என்றும் பல ஸமயங்களில் பிரயோகிக்கப்படுகிறது. இதனல் ராகக்களை கெடுவதில்லை. ஸரிமபதஸ்-ஸ்நிதப மகரிஸா-என்றே பிரயோகிக்கப் புகுந்தால் பெரும்பாலும் ஆரபியாகவே விளங்கும்; இது பாஷாங்க ராகமாகையால், ஸரிஸநிதா நிதப; என்பது போன்ற பிரயோகங்களில் முதல் நிஷாதம் காகலியாகவும், இரண்டாவது கைசிகியாகவும் பேசும். ஆரோஹணத்தில் நிஷாதம் வரும்போது காகலியாகவேயிருக்கும். 'ஸரிகம' என்று தாரஸ்தாயியில் வரும் பிரயோகம் அவ்வளவாகச் சாஸ்திர ஸம்மதமானதில்லையாயினும், ராகக்களையை நன்கு புலப்படுத்தும். அவரோஹணப் பிரயோகங்களில் 'ஸ்தா' என்பதுபோல் அடித்துப் பிடித்துப் பாடினல் அழகாக இருக்கும். மத்யமம் தீர்க்கமாகப் பிடிக்கப்பட வேண்டும். நிஸரீ-மபதா-நிஸ்ரீகரீ என்பது ஒரு விசேஷப் பிரயோகம். இந்த ராகம் வேங்கடமகியின் சம்ப்ரதாயத்தில் தேசிய தேவகாந்தாரி என்று வழங்கப்படுகிறது. அனுபவத்தினலேயே இந்த ராகத்தைப் பிழையின்றிப் பாடலாகும்.

#### பல்லவி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ; ; * | பா தா பா | தா தா பா | மா பா ; மா | காரீ ரீ ; | ரீ ; ரீ | பா ; மா | காரீ | ரீ ; ; ; | ரீ மா பா தா |
| ; ; * | எ வ ரு | ம ந கு | ஸ மா ; ந | மில லோ ; | நிந் ; து | லா ; ர | னே | டு ; ; ; | பனி பனி |
| ; ; * | ஸ்ா நீ தா | தா தா பா | மா பா ; மா | காரீ ரீ ; | ரீ ; ரீ | பா ; மா | காரீ | ரீ ; ; ; | ரீ மாபா தா |
| ; ; * | எ வ ரு | ம ந கு | ஸ மா ; ந | மில லோ ; | நிந் ; து | லா ; ர | னே | டு ; ; ; | பனி பனி |
| ; ; * | ஸ்நிஸ்ரிஸ்ா | ஸ்நிதாதா | தா பா ; மா | காரீ ரீ ; | ரீ ; ரீ | பா ; மா | காரீ | ரீ ; ; ; | ரீமா பாதா |
| ; ; * | எ வ ரு | ம ந கு | ஸ மா ; ந | மில லோ ; | நிந் ; து | லா; ர | னே | டு ; ; ; | பனி பனி |
| ; ; * | | | | | | | | | |
| ; ; * | (எவரு மநகு) | | | | | | | | |

#### அனுபல்லவி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ; ; * | பா பா பா | தா தா ஸ்ா ஸ்ாரீ | ம்ா ; க்ாரீ | ஸ்ாஸ்ா | தாரீஸ்ாதா ; | தாதா பா | பா ; பாபா | பாமா பாதா |
| ; ; * | அ வ நி | ஹ ரி ஹ ரப்ரும் | ஹா ; தி | ஸுரு | லா ஸ சே ; | மோ ஸ | போ ; யிரி | கது கது |
| ; ; * | பா பா பா | தா தா ஸ்ா ஸ்ாரீ | மா ; காரீ | ஸ்ாஸ்ா | தாரீஸ்ா | ஸ்நிதாதா-தாபா | பா ; பா பா | பாமா பாதா |
| ; , * | அ வ நி | ஹ ரி ஹ ரப்ரும் | ஹா ; தி | ஸுரு | லா-ஸ | சே மோ ஸ | போ ; யிரி | கது கது |
| ; ; * | | | | | | | | |
| ; : * | (எவரு மநகு) | | | | | | | |

#### சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா பா பா | பா பா பா பா ; | பா ; மா கா | கா ரீ ரீ ; | தாரீஸா | ஸ்நிதாதா-ரீஸா | ரீ ; ; ; ; ; ; | |
| ந ஆு வ | த ந ய பை ; | மோ ; ஹ மு | ஜெ நந் தி ; | நாடு | த கிலி-போ | யே ; ; ; ; ; ; ; | |
| தா தா பா | தாதா பா-தாபா | தா ; பா மா | கா ரீ ரீ ரீ | ஸாரீரீ ; | மாகாரீரீ | ஸாரீ | மா காரீ ; ; ; |
| மு த் து | லோ லு-கு | ஸ்ரீ ; ஹ ரி | வ ல சு சு | ப்ருந்தா ; | லோ லுடை | போ... | யே ; ; ; |
| தா தா தா | ஸ்ா ; ஸ்ா ஸ்ா ஸ்ா | ஸ்ா ; நி தா ; | தா தா பா | தாதா தாதா ; | பா தா ; | ஸ்ா ; ; ; ; ; | ஸ்ா ; |
| கி லு வ | பூ ; ஷ ணு டு | தா ; கு கா ; | வ ந பு | செலுல பா ; | லா ; | யே ; ; ; ; ; | கோ ; |
| ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா | நீ தா ஸ்ா ரீ | ம்ா ; க்ா ரீ ஸ்ா | நீ தா தா | தாரீஸ்ா- | ஸ்ாநீதா-தாதா | பா ; ; ; | பாமா பாதா |
| கு ல மு ந | த்யா......க | ரா ; ஜ நு து | டு ம ந | வலல | தகிலி-போ | யே ; ; ; | கது கது |
| ; ; * | | | | | | | |
| ; ; * | (எவரு மநகு) | | | | | | |






ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அர்மேனிக்காரத் தெரு, மதராஸ்.

பூரா திருப்தியும், ஜயமும், உத்திரவாதமும் செய்யபபடும்.
விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

## மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.



இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம் நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமையுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரமமைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக் கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினல், ஒரே வினடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணு 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.

## கண்ணோட்டம்

### சர்க்கரை காப்பு வரி போர்டு அங்கத்தினர்கள்



லெ: ஜியாப்ரே பிராக்கன்
(அக்ராசனா)



ஜனாப் பஸலிப் ரஹீம் ரஹிப்துல்லா



டாக்டர் எல். டி. ஜெயின்



மிஸஸ் மாணக்லால் பிரேம்சந்த் சர்வதேச ஸ்திரீகள் சபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தப் பதவி வகிக்கும் முதல் இந்திய ஸ்திரீ இவர்தான்.



விழுப்புரத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஆரம்பக் கல்வி பொருட்காட்சி சம்பந்தமாக நடந்த சிறுமிகள் சங்கீதப் போட்டியில் முதல் பரிசு பெற்ற முனிஸிபல் கமிஷனர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸாச்சாரியார் குமாரி ஸ்ரீமதி லக்ஷ்மி.

## பிரமுகர்கள்



வேலூர் சங்கீத சபையினுதரா வில் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் வாய்ப்பாட்டிற்காகத் தங்கப் பதக்கமளிக்கப்பட்ட ஸ்ரீமதி வி. கற்பகம்.



ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தி சமீபத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.




ராஷ்டிரபதியார் பட்டமளிக்கப் பெற்ற சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் ஸமஸ்கிருத பண்டிதர் ஸ்ரீமான் எஸ். கே. பத்மநாப சாஸ்திரியார்.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

மஹாமஹோபாத்யாய

# தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர்

(கே. எஸ். ஆர்.)



**"தில்லைவாழ் அந்தணர்கள்"**

சிதம்பர க்ஷேத்திரத்தில்
வித்யாதானம் செய்துவரும்
மஹாமஹோபாத்யாய தண்ட
பாணி ஸ்வாமி தீக்ஷிதரை சம்
ஸ்கிருத உலகு நன்கு அறியும்;
தற்காலத்திய வித்வங்மணிக
ளின் சபையில் இப்பெரியார்
விலையிலாப்பூஷணமாகத் திகழ்
கின்றார். இவருக்கு எச்சமய
மும் சித்சபேசனைப் பஜிப்
பதே பிரதான காரியம். மஹா
மஹோபாத்யாய தீக்ஷிதரவர்
கள் 1874-ம் வருஷத்தில்
ஸ்ரீ சிவகாமி வல்லப தீக்ஷித
ரவர்களின் புத்திரராக,
"தில்லைவாழ் அந்தணர்கள்"
என்று பெரிய புராணம் வாயி
லாகவும் பிரசித்தி மிகுந்த
ஸ்ரீ தீக்ஷிதாள் வமிசத்தில் பிறந்
தனர். இவருடைய மூதாதை
களுள் ஒருவரான ஸ்ரீ மீனாக்ஷி
நாத தீக்ஷிதர் 200 வருஷங்க
ளுக்கு முன்பு வாழ்ந்து, தமது
ஆச்சரியமான வித்வத்தின்
மஹிமையினால் தஞ்சை ராஜா
முதலியோரால் மிகப் பஹு
மானிக்கப்பட்டவர். அவர்
தான் "சிதம்பர தத்துவ நிர்
ணயம்" என்ற கிரந்தத்தை
எழுதியவர்.

இவர் சுமார் 10 வயது பரி
யந்தம் சிதம்பரம் ஆறுமுக
நாவலரின் சைவப் பிரகாச
வித்யாசாலையில் தமிழ், சம்ஸ்
கிருதம், பால பாடங்கள்
முதலியவை நன்கு கற்று,
பரீக்ஷைகளில் சில பரிசுகளை
யும் கவர்ந்து கொண்டார்.
1883-ல் புதிதாக ஸ்தாபிக்கப்
பட்ட "வேத சாஸ்திர தாங்
கிணி" என்ற ராம. சு. வித்யா
சாலையில் தமது மாதுலரான
சந்திரசேகர தீக்ஷிதர்களிட
மும் அவருடைய சிஷ்யர்
களான பரமேஸ்வர
தீக்ஷிதர், வெங்கடேச தீக்ஷிதர்
ஆகியவர்களிடமும் காவிய
பாடம் படித்தார். (இவரது
மாதுலர் மன்னார்குடி ராஜு
சாஸ்திரிகளின் சிஷ்யர்; தவிர
பல பெரிய யக்ஞங்களைச் செய்
தவர்; சிதம்பரத்தில் மஹா
கும்பாபிஷேகத்தை முறைப்
படி நடத்திவைத்தவர்.) பின்பு
அங்கேயே செ. வைத்தீஸ்வர
சாஸ்திரிகளிடம் சம்பூ நாடக
அலங்காரங்களையும் வியாகர
ணத்தில் சித்தாந்த கௌமுதி
யையும் பூரணமாகப் படித்
தார். பின்பு 1890-ல் சிதம்
பரம் பொன்னம்பலம் பிள்ளை
சம்ஸ்கிருத பாடசாலையில் பிர
தான பண்டிதராகவும், வியா
கரண சாஸ்திரத்தில் அசாதா
ரண பாண்டித்தியத்துடன்
இருந்து, பின்பு புதுக்கோட்
டை மஹாராஜா சம்ஸ்கிருத
பாடசாலையின் பிரதான ஆசிரி
யராகவும் விளங்கிய திருவை
யாறு கோபால சாஸ்திரிகளி
டத்தில் வியாகரண பாடத்
தைப் பூராவும், பூர்வ மீமாம்
ஸையில் சில பாகங்களையும்
அதிகரித்தார். 1893-ல் திரு
வாங்கூர் மஹாராஜா ஸ்ரீ மூலம்
திருநாள் துலாபார மஹோத்
ஸவ சமயத்தில் நடைபெற்ற
வித்வத் ஸபையில் பரீக்ஷையில்
விசேஷ சம்மானத்தை ஸ்வீ
கரித்தனர். 1894-ல் திருவல்
லிக்கேணி வேதவேதாந்த
வர்த்தனி ஸபையார் நடத்திய
பரீக்ஷையிலும் தேறி முதல்
சம்மானத்தையும் அடைந்
தார். இதே வருஷம் புதுக்
கோட்டை மஹாராஜா வித்
வத் ஸபையில் திவான் ரீஜண்
டாக விளங்கி வந்த ஸர் ஏ.
சேஷய்யா சாஸ்திரியாரின்
முன்னிலையில் நடைபெற்ற பரீ
க்ஷையிலும் முதல்வராகத்
தேறியதுடன், எல்லோரும்
மெச்சத்தக்க விதமாக வாக்கி
யார்த்தங்களும் நிகழ்த்
தினார் இவர். இது முதற்
கொண்டு இவர் அவ்விடத்திய
வித்வத் ஸபா அத்யக்ஷகராக
வும் பரீக்ஷாதிகாரியாகவும்
வீற்றிருந்து அத்வைத மதசம்
பந்தமான உபந்நியாசங்களைப்
பிரதி வருஷம் செய்து வரு
கிறார்.

**பல ஸ்தலங்களில் வாக்கியார்த்தம்**

1896-ல் கோபால சாஸ்திரி
களுக்குப் பின்பு பொன்னம்
பலம் பிள்ளை பாடசாலை தலை
மை பண்டிதராக இவர் நியமிக்
கப்பட்டார். 1906 வரையில்
இவர் வியாகரணம் அலங்கா
ரம் முதலிய பகுதிகளை அநே
கருக்குப் போதித்து வந்தார்.
இதே காலத்தில் இவர் மெ.
ச. வித்யாசாலையில் பிரதம
பண்டிதராக விருந்து வந்து
சதுஸ்சாஸ்திரங்களில் நல்ல
ஞானத்துடனிருந்து மைசூர்
முதலியவிடங்களில் பிரசித்தி
வாய்ந்த மஹாமஹோபாத்
யாய திருக்கோஷ்டியூர் ஸ்ரீ
ஹரிஹர சாஸ்திரிகளிடம்
நியாய வேதாந்த சாஸ்திரங்
களைப் பூரணமாகக் கிரஹித்
துக்கொண்டார். பின்பு
மஹாமஹோபாத்யாய ராஜு
சாஸ்திரிகள் சிதம்பரம் விஜ
யஞ் செய்தபோது இவர் வாக்
கியார்த்தம் சொல்ல, அவரும்
மிகச் சிலாகித்தார். இதே
சமயம் ராமநாதபுரம் ராஜா
ஸ்ரீ பாஸ்கர சேதுபதியவர்
களால் வித்வத் சபைக்கு வர
வழைக்கப்பட்டு, தமது திற
மை மிகப் புகழப்பட்டு, தோ
டா முதலிய சன்மானங்க
ளால் கௌரவப்படுத்தப்பட்
டார்.

1906-ல் கோபால சாஸ்திரி
கள் புதுக்கோட்டைக்குச்
செல்ல, இவர் உடனே அவ
ருக்குப் பதிலாக, தாம் முன்பு
படித்த ரா. ம. சு. வித்யா
சாலையின் பிரதான பண்டிதர்
ஸ்தானத்தை அடைந்தார்.
கவர்ன்மெண்ட் ப்ரவேசப் பரீ
க்ஷை, ப்ரைவேட் சிரோ
மணி பரீக்ஷை, மைசூர்
புதுக்கோட்டை முதலிய
ராஜ சபைகளில் நடக்கும்
பரீக்ஷைகள், இவைகளில் சிஷ்
யர்கள் சிறப்பாகத் தேறும்
படிச் செய்து வந்தார். அநே
கர் இவர்கீழ் படித்து, மிகக்
கௌரவத்தைச் சம்பாதித்
துக் கொண்டனர்.

1911-ல் காஞ்சிபுரத்தில்
ஒரு பெரிய பண்டித சதஸ்,
ஜஸ்டிஸ் ஸர் சுப்ரமணிய அய்
யர் தலைமையின் கீழ், மகா
கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ
சாஸ்திரிகள், ராவ்பஹதூர்
புரொபஸர் எம். ரங்காசாரி
யார் முதலியோருடைய உதவி
யின் மூலம் நடத்தப்பட்டது.
அப்போது இவரும் அச்சமு
கத்திற்கு வரவழைக்கப்பட்
டார். அத்வைத மத விசா
ரத்தை உத்தேசித்து, அங்கே
கூடிய பண்டிதர்கள் எல்லோ
ரும் இவரையே தங்கள் பிரதி
நிதியாகத் தேர்ந்தெடுத்தனர்.
இவரும் அதிகப் பெருமை
யுடன் நடந்துகொண்டார்.
1915-ல் இவர் பெங்களூரி
ஸ்ரீ உத்தராதி மடாதிபதி
களான மத்வாச்சார்யஸ்வாமி
நடத்திய வித்வத் சபைக்குப்
போய், தமது சிஷ்யர்களுக்

மின்சாரரசம்
சகல வியாதிகட்கும்
தேவாமிருதம்
போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம்
கம்பெனி, (லிட்)
சேலம்,

கும் தமக்கும் அங்கு நிகழ்த்திய சாஸ்திரீய விசாரணை, வாக்யார்த்தம் ஆகியவை மூலம் கியாதியைச் சம்பாதித்துக் கொண்டதுடன், ஸ்வாமிகளின் பஹுமானத்தையும் அடைந்தனர். உடனே காளஹஸ்தியில் குருவாடா ஸ்ரீராகவய்யர் அவர்களால், கனம் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யரின் அக்ராஸனத்தின் கீழ் அத்வைத ஸபா வித்வத் சமாஜம் கூட்டப்பட்டது. அப்போது இவர் ப்ருமஹாநந்தீயம், நியாயேந்து சேகரம் முதலிய கிரந்தங்களில் வாக்கியார்த்தம் சொல்ல, ஸர் சிவஸ்வாமி அய்யர் முதலான பலரும் சந்தோஷசாகரத்தில் ஆழ்ந்தனர். ஒரு தோடாவும் இவருக்கு வழங்கப்பட்டது.

### மஹாமஹோபாத்யாயர் பட்டம்

1916-ல் இவருக்கு இந்தியா கவர்ன்மெண்டாரும் "மஹாமஹோபாத்தியாயர்" பட்டத்தை வழங்கினர். மற்றவர்களைப் போலல்லாமல் இப்பட்டம் இவருக்கு வெகு சீக்கிரத்திலேயே கிடைத்தது இங்கு அவசியம் குறிப்பிடத் தக்கது. டிசம்பர்மாதம் பாரத தர்ம மஹாமண்டலத்தார் இம்மஹா மஹோபாத்யாயருக்கு "சாஸ்திராச்சார்யர்" என்ற பிருதுவையும் அளித்தனர்.

சிதம்பரம் ரா. ம. சு. வித்யாசாலை அதிகாரியாகவிருக்கையில் தமது ஓய்வு நேரங்களில் அத்வைத வேதாந்த சாஸ்திரத்தைப் பிரசாரம் புரிவதற்காக, பிரதியை அபேக்ஷிக்காமல், பல சிஷ்யர்களுக்குத் தமது கிருஹத்திலேயே பிராசீன குருகுலவாச முறைப்படிப் போஜனம் முதலான பல சௌகர்யங்களையும் செய்து கொடுத்தும், பல ஆஸ்தீகர்களின் திரவிய ஸஹாயத்தைக் கொண்டும், வேதாந்த பாடத்தைப் பிரவசனம் செய்து வந்தார். ஸர் சிவஸ்வாமி அய்யர், ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் போன்ற பிரமுகர்கள் இவரது முயற்சிகளைச் சிலாகித்திருக்கின்றனர். ஸ்ரீசிருங்கேரி ஜகத்குருக்கள் பிக்ஷாண்டார் கோவிலுக்கு விஜயஞ் செய்த போது, ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவ சமயத்தில், அந்த சன்னிதானத்தில் ஆநந்தமலாதிகாரணத்தில் வாக்யார்த்தம் பண்ணி, மஹாஸ்வாமிகளின் அனுக்கிரஹ பூர்வமாகத் தோடா சால்வைகள் வெகுமானமாக வழங்கப்பட்டார். திருவாவடுதுறை பண்டார ஸன்னிதி அம்பலவாண தேசிகரின் ஆதீன வித்வானாகவும் இருந்து இவர் வித்வத் சபைகளில் விசேஷ சன்மானம் வழங்கப்பட்டு வருகிறார். சம்ஸ்கிருத பாட புத்தகம் நிர்ணயம் செய்யும் சென்னை சர்வகலாசாலை "போர்ட் அப் ஸ்டடீஸ்" மெம்பராக 9 வருஷகாலம் இவர் நியமிக்கப்பட்டார்.

### மத துவேஷம் இல்லாதவர்

சீர்காழி சமீபத்திலுள்ள நெப்பத்தூர் கிராமத்தில் பெரிய மிராசுதாராகவிருந்த ஸ்ரீரங்கநாதய்யரவர்கள் இவரைக் கொண்டு வேதாந்த சாஸ்திர ப்ரவசனம் செய்யுமாறு ஏற்பாடுகள் செய்தனர். இவருக்கு அத்வைத வேதாந்தப் பிரசாரத்தில் விசேஷ விருப்பம் இருக்கின்றபோதிலும் இதர மதங்களில் சிறிதுகூடத் துவேஷ புத்தியே கிடையாது. இக்காரணம்பற்றியே மத்வாச்சார்யாளான உத்தராதி மட ஸ்வாமிகள் பல தடவைகள் இவரைத் தமது சபைக்கு வரவழைத்து மரியாதை செய்திருக்கிறார்கள். மற்றுமொரு சமயம் ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்த அதிகாரிகளான ஸ்ரீ அஹோபில மடாதிபதிகள் திருப்பனந்தாள் ஆதீனத்திற்கு விஜயஞ் செய்தபோது இவர் சாஸ்திர விசாரம் செய்வதற்காக வரவழைக்கப்பட்டார். இவரது சாஸ்திர பாண்டித்தியம் மிகப் பாராட்டப்பட்டு சால்வை முதலானவை வழங்கப்பட்டன. கொடியாலத்தில் ஸ்ரீமான் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார் பிரதி வருஷம் நடத்தி வந்த பண்டித பரிஷத்திற்கு இவர் சென்று உசிதப்படி சன்மானிக்கப்பட்டார். இவர் பிரதிவருஷம் காலடியில் ஸ்ரீசங்கர ஜயந்திமஹோத்ஸவ சமயத்தில் நடைபெறும் அத்வைத சபையில் பரீக்ஷகராகவும், சிலகாலம் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகவும் இருந்து காரியத்தை நிறைவேற்றி வைத்துள்ளார். பின்பு 2 மாதகாலம் உத்திர தேச யாத்திரை செய்து அங்குள்ள பண்டிதர்களுடன் ஸல்லாபம் செய்தனர். தமது ஆச்சார்யாளான மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ஹரிஹர சாஸ்திரிகளின் ஞாபகார்த்தமாக ஸ்ரீ ஹரிஹர வேதாந்த பாடசாலையொன்றை பிரதிகாலை ஒருமணி காலம், தகுதியுள்ளவர்களுக்கு உபநிஷத் பாஷ்யம், ப்ரகரணங்கள் முதலியவற்றை இவர் இன்னும் பாடம் சொல்லி வருகிறார்.

### ஸ்ரீமீனாக்ஷி சம்ஸ்கிருத காலேஜ்

ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ மீனாக்ஷிசம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபாலாக 1924-ம் வருஷம் ஜூலைமாதம் இவர் நியமிக்கப்பட்டார். 1929-ம் வருஷம் ஜூன் மாதம்வரையில் மஹா மஹோபாத்யாய தீக்ஷிதரவர்கள் கலாசாலையைத் திறமையுடன் நடத்தித் தமது மாணாக்கர்களுள் மூவர் ராஜதானியில் முதலாவதாகத் தேறிப் பதக்கம் பெறும் பாக்கியத்தை அடைந்தனர். கல்வியைப் பரப்புவதில் இந்த ஐந்து வருஷகாலமாக இவர் மேற்கொண்ட சிரத்தாபக்தியும் ஊக்கத்தின் மேன்மையும், உழைப்பின் பெருமையும், கலாசாலைக்கு அவ்வப்போது விஜயஞ் செய்த பிரமுகர்களால் தகுந்தவாறு கோஷிக்கப்பட்டுள்ளன. "இந்த ஸ்தாபனத்தைப் பார்த்து மிக்க சந்தோஷமடைந்தேன். தமது பாண்டித்தியம் குணவிசேஷங்கள் ஆகியவைபற்றி எங்கும் வியாபித்த கீர்த்தியையுடைய இப்பிரதான போதகாசிரியரைத் தமது ஸ்தாபனத்திற்காகச் சம்பாதித்துக் கொண்டதற்காக, நாம் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரைப் பாராட்டவேண்டும்" என்று அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்யக்ஷகரான மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் குறிப்பிட்டார்.

"சதுஸ் சாஸ்திரங்களிலும் சமர்த்தர்" என்று இவரைப் பற்றி மஹாமஹோபாத்யாய டி. கணபதி சாஸ்திரிகளும் எழுதினார். தவிர மஹாமஹோபாத்யாய திராவிட லக்ஷ்மண சாஸ்திரியார், கல்கத்தா சர்வகலாசாலை சம்ஸ்கிருத அத்யாபகர் மஹாமஹோபாத்யாய அநந்தகிருஷ்ண சாஸ்திரியார், அலகாபாத் மஹாமஹோபாத்யாய கங்காநாதஜா, மஹாமஹோபாத்யாய வித்யாவாசஸ்பதி எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள், ஸர். ஆர். வெங்கடரத்னம் முதலிய பலரும் கலாசாலையின் பாடபோதனை முறை ஆகியவற்றை வெகுவாக சிலாகித்து எழுதியுள்ளார்கள். இவர் தமது சேவையின் சிறப்பின் மூலம் இந்த சம்ஸ்கிருத கலாசாலையின் பெயரும் புகழும் எங்கும் மணத்துடன் வீசுமாறு செய்தனர்.

இதேகாலத்தில் இம்மஹாமஹோபாத்யாயர் சென்னை சர்வகலாசாலையார் நடத்தும் சிரோமணி பரீக்ஷை போர்டில் சுமார் எட்டு வருஷகாலம் பரீக்ஷாஸ்தானத்தை வஹித்தும் சிலகாலம் அதே போர்டின் சேர்மனாகவும் இருந்து, திருப்திகரமாக நிர்வாஹத்தை நடத்திவந்தார். மூன்று வருஷகாலம் இவர் சென்னை யூனிவர்ஸிடி கீழ்நாட்டு பாஷா ப்ராவீண்ய சங்கத்தின் மெம்பராகவும் ஸ்தானம் வஹித்தார். மைசூர் சமஸ்தானத்தில் நவரா விழாவின் போது நடத்தப்படும் வித்வத் பரீக்ஷையின் பரீக்ஷகராக இவர் நியமிக்கப்பட்டு, பிரச்ன பத்திரிகை தயார் பண்ணி அனுப்பி வந்துள்ளார்; பல சந்தர்ப்பங்களில் வாசக பரீக்ஷைக்காக அங்கு இவர் நேராகவும் சென்று வந்ததுண்டு. மைசூர் மஹாராஜாவும் ஒரு சமயம் இவரை சாஸ்திர பாண்டித்தியத்தின் காரணமாகத் தமதருகே வரவழைத்து ஒரு மணிகாலம் ஸல்லாபம் செய்தார்.

1929-ம் வருஷம் ஜூலை மாதம் அண்ணாமலை சர்வக


அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய்தான்

(தபால்செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்திகரிப்பைத் தரும் கிருமி நாசனி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.





உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும், காமினியா ஸ்னோவின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பில் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ் சேட் & கம்பெனி

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

சாலை சம்ஸ்கிருத போதகாசிரியராக இவர் நியமிக்கப்பட்டார். தவிர சர்வகலாசாலை சம்ஸ்கிருத "போர்டு அப் ஸ்டடீஸ்" மெம்பராகவும், பரீக்ஷக சமாஜ மெம்பராகவும் இவர் இருந்து வருகிறார். 3 வருஷகாலம் செனெட் சபையிலும், அக்கடமிக் கவுன்ஸிலிலும் இவர் அங்கத்தினர் பதவியை வஹித்துவந்தார். இன்னும் நம் மஹாமஹோபாத்தியாயர் இச்சர்வகலாசாலையின் வியாகரண சாஸ்திரத்தை மாணாக்கர்களுக்குப் போதித்து, சம்ஸ்கிருத கலையின் கடினமான பகுதியை அபிவிருத்தி செய்து வருகிறார்.

## சிதம்பரம் அத்வைத சபை

இம் மஹா மஹோபாத்யாயர் ப்ரமாதிவருஷம், ஆருத்ரா தர்சன மஹோத்ஸவ சமயத்தில் பிரதிவருஷம் நடைபெறும்படி தமது கிருஹத்தில் ஓர் அத்வைத சபையை. அந்த வேதாந்த பாட ப்ரவசனத்தை மிக்கவும் உத்தேசித்து ஆரம்பித்து நடத்திவருகிறார். இதற்கு அநேகம் ஆஸ்திகப் பிரமுகர்கள் உதவினர். இன்றுவரையில் இவரே இந்த சபையின் காரியதரிசியாக விருந்து வருகிறார். இந்த சபைக்காகப் பல வருஷங்கள் பல ப்ரதேசங்களிலிருந்து பிரசித்த பண்டிதர்களை உபந்யாஸம் புரிவதற்காக வரவழைத்து, பண்டிதர்களின் யோக்யதைகளுக்குத் தக்கபடி சன்மானங்களும் இவர் செய்து வருகிறார். இவர் சுமார் 10 வருஷகாலமாக பிறருடைய திரவிய ஸஹாயத்தை எதிர்பாராமல், தமது சொந்தச் செலவிலேயே இந்த சபையின் நிர்வாகத்தைப் பலரும் ஆநந்திக்கும்படியாக சிறந்த வித்வான்களைக் கொண்டு நடத்தி வருகிறார். உபந்யாஸகர்களுக்கு இவரே தமது செலவில் சன்மானங்களும் செய்து வருகிறார். இந்த அத்வைத சபைக்கு மஹாமஹோபாத்யாயர்களான பஞ்சாபகேச சாஸ்திரியார், வெங்கடசுப்பா சாஸ்திரிகள், சுப்பராய சாஸ்திரிகள், வைத்தினாத சாஸ்திரிகள், கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், புரொபஸர் எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள் முதலான பெரிய பண்டித சிகாமணிகளை வரவழைத்து, இவர் பிரதிவருஷம் சிறப்பாக நடத்தி வருகிறார். தமது ஆச்சார்யரான மஹாமஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள் அவர்களின் அபிப்பிராயப்படி தென் தேசத்தில் ஆத்ம வித்யை எனப்படும் அத்வைத மதத்தைப் பரவச் செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சபை மேன்மேலும் அபிவிருத்தியடைந்து வருகிறது.

ஸ்ரீ தீக்ஷிதாளுடைய பிள்ளைகளுக்கு ஸம்ஸ்கிருதம், தமிழ் இவைகளில் பயிற்சியும், ஸ்ரீ நடராஜமூர்த்தியை ஆராதனம் செய்வதற்குரிய மூன்றுவேதங்கள், சாஸ்திரங்கள், பூஜாவிதானம் முதலியவற்றைப் போதிப்பதற்கும் மிக முயற்சி செய்து, தேவக்கோட்டை மு. ரா. ம. சு. ப. ஸ்ரீ சுப்பிரமணிய செட்டியாரவர்களின் திரவிய சகாயத்தைக்கொண்டு பிரபவ வருஷம் முதல் "ஸ்ரீ தீக்ஷித சமுதாய பாடசாலை"யை ஏற்படுத்தி அதில் இவர் பிரஸிடெண்டாகவும் இருந்து, பாடபோதனையை நடத்தி வருகிறார்.

## கிரந்தங்கள்

இவை தவிர மஹாமஹோபாத்தியாய தீக்ஷிதர் சில கிரந்தங்களையும் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இவர் ஸ்ரீ நடராஜ ஸஹஸ்ர நாமங்களுக்கு ஓர் பாஷ்யம் ஸ்வயமாகவே எழுதியிருக்கிறார். இது கூடிய சீக்கிரத்தில் பூர்த்தியடைந்து அச்சிட்டு வெளிவரலாம். புண்டரீகபுர மாஹாத்மியம் என்று சிதம்பர புராணங்களில் ஒன்றாகிய புஸ்தகத்தை இவரே பரிசோதனம் செய்து அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இவரது பூர்வீகரும் மஹா வித்வானுமாகிய ஸ்ரீ மீனாக்ஷிநாத தீக்ஷிதர் அவர்கள் இயற்றியதும் சிதம்பரத்தில் நடைபெறும் ஸ்ரீ நடராஜப்பெருமானின் பூஜை வைதீகம் என்பதை அநேக பிரமாணங்களால் ஸ்தாபனம் செய்வதுமான ஸ்ரீ சிதம்பர தத்துவ நிர்ணயம் என்னும் ஓர் பெரிய கிரந்தத்தை தேவகோட்டை ஜமீன்தாரின் உதவியைக் கொண்டு இவர் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

இவரிடம் வியாகரண வேதாந்த சாஸ்திரங்களை நன்றாகப் படித்து, புதுக்கோட்டை மைசூர் சமஸ்தானங்களில் பரிக்ஷையில் தேறியும், சென்னை சர்வகலாசாலை சிரோமணி பரிக்ஷையில் பெரும்பாலும் முதலாவது இரண்டாவது வகுப்புகளில் தேர்ச்சி பெற்றும் இப்போது அநேக வித்யாஸ்தானங்களில் பாடப்ரவசனம் செய்து படிப்பவர்கள்பலர். தவிர இவரது சிஷ்யர்களான பல வியாகரண சிரோமணிகளும் வேதாந்த சிரோமணிகளும் இத்தென்தேசத்தில் இருக்கும் பல பள்ளிக்கூடங்களில் சமஸ்கிருத பண்டிதர்களாகவிருந்து அவர்களும் பல சிஷ்யர்களுக்குப்பாடம் போதித்துவருகின்றனர். அவர்கள் அனைவருடைய பெயர்களையும் இங்கு குறிப்பிடவியலாத காரியமாகும்.

நம் தீக்ஷிதருடைய ஆச்சார்யரின் ஆச்சார்யரான மஹாமஹோபாத்யாய வியாகரணம் சுப்பராயாச்சார், இவர் வியாகரணபாடம் சொல்லும்போது யதேச்சையாகக் கவனித்து, இவரது ப்ரவசன முறையைச் சிலாகித்ததுடன், இவருக்கு மேன்மேலும் பெருமை உண்டாகுமாறு பிரார்த்திப்பதாகக் கூறினர்.

ஹரிகதாகாலக்ஷேபத்தில் பிரசித்திபெற்ற சிதம்பரம் எம்பார் பாகவத சிகாமணி ஸ்ரீரங்காச்சாரியார் அவர்களுடைய குமாரர் வேதாந்த சிரோமணி விஜயராகவாச்சாரியார் ஆகிய பல வைதிக லௌகிகர்களும் இவரிடம் முறையே படித்து சிறப்புற்றிருக்கின்றனர். இவருடைய சிஷ்யர்களுள் ஒருவரான குறிசேரி ஹரிஹர சாஸ்திரிகள் இவரைக் குறித்தும் இவரது ஆச்சார்யரான கோபால சாஸ்திரிகளைக் குறித்தும் முறையே "வேதசாஸ்திர தரங்கிணீவிலாஸம்" "ஆசார்யஸ்தவ ரத்னமாலா" என்ற இருகாவியங்களை இயற்றிப் பிரசுரித்திருக்கிறார்.

இவரது ஷஷ்டியப்தபூர்த்தி மஹா வைபவ சமயத்தில் இவரது சிஷ்ய, ப்ரசிஷ்ய கோடிகளால் இயற்றி வாசிக்கப்பட்ட ஸ்தவமாலை அநேகம் ஒன்று சேர்த்து கூடியசீக்கிரம் அச்சிடப்படக்கூடும்! அகால மரண முற்ற இவரது சிஷ்யர்களான பரமேஸ்வர சாஸ்திரிகளும் வெங்கடராம சாஸ்திரிகளும் பிரசித்த வித்வான்களாக விளங்கியவர்கள். இவ்விருவரும் வியாகரண வேதாந்த பகுதிகளில் விசேஷ ஞானத்துடன் தங்களது ஆச்சார்யரான இவரது பெருமையைப் பதின்மடங்குப் பிரபலப்படுத்தியவர்கள்.

1928-ல் மதுரையில் ராவ் ஸாஹேப் நடேச அய்யரின் பங்களாவில் நடந்த அகில (திருநெல்வேலி மதுரை ராமநாதபுரம் ஜில்லா) பிராம்மண சம்மேளனத்திற்கு, பல சனாதனப் பிரமுகர்களால், அக்ராஸனராக வரவழைக்கப்பட்டார். அச்சமயம் புரிந்த தமது அரிய உபந்யாஸத்தில் இவர் தற்காலத்திற்குகந்த சில ருசிகரமான ஆலோசனைகளை எடுத்துரைத்துச் சோபித்தார். கோவிலூர் தேவாலயத்தில் ஸ்ரீமான் அழகப்பசெட்டியாரால் தமது ஷஷ்டி பூர்த்தி வைபவத்தின் சமயம் கூட்டுவித்த வித்வத் சபையில் எல்லோரும் சந்தோஷமடையும்படி இவர் பிரசங்கங்கள் புரிந்தார்.

நம் மஹாமஹோபாத்யாய தீக்ஷிதரவர்களின் சரித்திரத்தில் ஒரு ருசிகரமான விஷயத்தை இங்கு அவசியம் குறிப்பிடவேண்டும். ஆரம்பம் முதல் வித்யாப்யாஸத்தின் பொருட்டோ அல்லது உத்யோகம் பொருட்டோ இதுவரை இவர் தமக்கு ஜன்ம க்ஷேத்ரமான சிதம்பரத்தை விட்டு அகலாது அங்கேயே இருந்து வருகிறார். சகல வித்தைகளையும் அங்கேயே கற்று அங்கிருந்தே பலருக்கும் தமது ஞானத்தை இவர் உபதேசித்து வருகிறார். மைசூர், புதுக்கோட்டை, கல்கத்தா, காசி முதலியவிடங்களில் பெரிய ஸ்தானங்களுக்கு இவர் வருமாறு மிக வேண்டப்பட்டும் அவற்றையெல்லாம் மறுத்துவிட்டார்.

## ஸ்ரீசங்கர பகவத்பாதாளின் அனுக்ரஹம்

சிதம்பர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபார பக்தியில் இவர் ஈடுபட்டிருப்பதே இவைகளுக்குக் காரணமாகும். தமது பிரதேசத்திலிருந்துகொண்டே எல்லா மேன்மைகளையும் இப்பெரியார் அடைந்து வருவதற்கு, அம்மூர்த்தியின் அருள் பிரவாகமே காரணமாம்! இவருடைய ஷஷ்டி பூர்த்தி சமயத்தில், இவரது உத்கிருஷ்டமான தேவதாபக்தி ஆராதனம் முதலியவற்றைக்கண்டு சந்தோஷித்த ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தம்மால் பூஜிக்கப்பட்டு வந்த ஸ்ரீ சந்த்ர மௌலீஸ்வர மரகத லிங்கம் ஒன்றை பட்டு பீதாம்பரம் முதலியவைகளுடன் அனுப்பி வைத்து அதை ஆராதித்து இஷ்ட சித்திகளையடையும்படி அனுக்கிரஹித்தார்.

மிக நுட்பமாகவும் கடினமாகவுமுள்ள சாஸ்திரங்களில் உள்ள முடிச்சுகள் போன்ற பல சிக்கலான விஷயங்களைத் தமது புத்தி வன்மையினால் மிக்க தெளிவுபடுத்தி பலவிதமான திருஷ்டாந்தங்களுடன் சிஷ்யர்களுடைய மனதில் அதிசுலபமாகப் பதியும்படிச் செய்வது என்கிற இவரது குணவிசேஷமானது இவரது சிஷ்யர்களை எக்காலமும் இவரிடம் வசியப்படுத்துவதாகின்றது. சித்சபேசனுடைய கிருபையினால் நம்மஹாமஹோபாத்யாய சாஸ்திராச்சார்ய தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் திடகாத்திரராகவும் மனஸ் சந்துஷ்டராகவும் சகல பாக்யங்களுடனும் ஜீவித்து இப்பாரத கண்டத்தின் புராதனப் பெருமையை மேன்மேலும் விருத்தி செய்ய வேண்டுமென்று பிரார்த்திப்போமாக. (அண்ணாமலை சர்வகலாசாலை ஸீனியர் சம்ஸ்கிருத லெக்சரர் ப்ரும்மஸ்ரீ எஸ். ராமசுப்பா சாஸ்திரிகள் இச்சரித்திர விஷயமாக எனக்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளார்கள்.)

* * * *


## HAVE A SOUND SLEEP



By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

| | Ordinary. | Superior. | Best | |
|---|---|---|---|---|
| 6' x 3½' x 3½' Rs. | 1- 0 | 1- 4 | 1- 8 | each |
| 6' x 4' x 4' „ | 1- 4 | 1- 8 | 1-12 | „ |
| 6½' x 4½' x 4½' „ | 1- 8 | 1-12 | 2- 0 | „ |
| 7' x 5' x 5' „ | 1-12 | 2- 0 | 2- 4 | „ |
| 7½' x 6' x 6' „ | 2- 0 | 2- 4 | 2- 8 | „ |

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free. POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazar,
CALCUTTA.



சென்னை ஸ்ரீ சாரதா வித்யாலயத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சென்னை கவர்னர் மனைவி லேடி மார்ஜொரி எர்ஸ்கின் தலைமையில் நடைபெற்றது.

மற்ற பக்கங்களில்


கண்டராதித்தர் (சரித்திரப்பகுதி) 2
ராதா (தொடர்கதை) 4
விநோதக்கொத்து 7
ஸங்கீதப்பகுதி 8
கண்ணோட்டம்-பிரமுகர்கள் 11
தென்னிந்தியப் பிரமுகர்கள் 12
காணமற்போன வைரங்கள் (சிறு கதை) 17
டில்லியில் அகில இந்திய சாரணர் கூட்டம் 23
பிரபஞ்ச வர்த்தமானம் 25
கனகத்திற்கு நேர்ந்த ஆபத்து (ஹாஸ்யப்பகுதி) 27
இது என்ன தோற்றம்? 29
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி 30
நவநாகரீகம் 31
தவளை கன்னிகை (சிறுவர் பகுதி) 33
உலகப் போக்கு 38
கையில் கிரஹ நிலை அறியும் விதம் (ரேகை சாஸ்திரம்) 39


# இந்திய வர்த்தமானம்

## சென்னை தேர்தலில் காங்கிரஸ் வெற்றி

சென்னை ராஜாங்க சபைத் தேர்தல் முடிவுகள் இப்பொழுது வெளியாகியிருக்கின்றன. இச்சபையில் மொத்தம் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஸ்தானங்கள் 46. இவற்றில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ஸ்தானங்களைச் சேர்த்துக் காங்கிரஸ் 27 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியார் இத்தேர்தலில் 15 பேர்களை நிறுத்தினர். அவர்களில் நான்கு பேர் வெற்றியடைந்திருக்கின்றனர். ஜன நாயகக் கட்சியில் ஒருவரும் வெற்றி பெறவில்லை. மேற்சொன்ன 46 தேர்தல் ஸ்தானங்களைத் தவிர்த்து 8 அல்லது 10 ஸ்தானங்களுக்குக் கவர்னர் நியமனம் செய்வார்.

ஜனப் பிரதிநிதி சபையில் மொத்தம் 215 ஸ்தானங்களிருக்கின்றன. இவற்றில் 139 ஸ்தானங்களுக்குக் காங்கிரஸ் அபேக்ஷகர்களை நிறுத்தியிருக்கிறது; வியாழக்கிழமை காலை வரை கிடைத்த விவரப்படி காங்கிரஸ் 85 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

* * * *

## அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ராஜாஜிக்கு ஸ்தானம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் மெம்பர் ஸ்தானம் பெறுவதற்காக இராமனாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீமான் கே. எஸ். முத்துசாமி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தமக்குள்ள மெம்பர் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

* * * *

## பதவி ஏற்பதுபற்றி ஜவஹர் எச்சரிக்கை

பண்டித ஜவஹர்லால் நேரு உத்தியோக ஏற்புப் பிரச்னை சம்பந்தமாகப் பத்திரிகைகளுக்குப் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:— பதவி ஏற்புப் பிரச்னை சம்பந்தமாக நாம் அனுஷ்டிக்கவேண்டிய முறையை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிர்ணயிக்கும். அதுவரை நம் சார்பாக சர்க்கார் பிரதிநிதிகளுடனோ அல்லது இதர கோஷ்டிகளின் பிரதிநிதிகளுடனோ நாம் எவ்வித சம்பாஷணையும் செய்ய முடியாதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சில நியூஸ் எஜன்ஸிகளும் பத்திரிகை நிருபர்களும் ஜனப் பிரதிநிதி சபைகளில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்துள்ள மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபையை ஏற்படுத்துவது பற்றித் தங்கள் யோசனா சக்தியைக்கொண்டு எல்லாவிதமான கதைகளையும் கட்டிப் பரப்பி வருகிறார்கள். அவர்கள் மந்திரிகளாக வரக்கூடியவர் பெயர்களையும் சொல்லிவருகிறார்கள். யோசனா சக்தியைக்கொண்டு உண்மைக்குச் சம்பந்தமில்லாத கதைகளை எவ்வளவு தூரம் கட்டிவிட முடியுமென்பதைக் காண ஆச்சரியமாகவிருக்கிறது.

* * * *


## இந்தியப் பெண்மைக்கு அவமானம்

ராணி லக்ஷ்மீபாயின் சகோதரர், அவரது குமாரர் ஆகியோர் சார்பாக ராணி லக்ஷ்மீபாயைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதிய பிலிப் காஸ், லண்டன் அன்வின் கம்பெனியார், பம்பாய் தாபூர் வாலா கம்பெனியார் ஆகியோருக்கு டாக்டர் ஹரிசிங்கவர் ஒரு நோட்டீஸை அனுப்பியிருக்கிறார். அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:—

"படையெடுத்து வந்த எதிரியின் கையிலகப்பட்டுக்கொண்டு அவமானமடைவதைவிட உயிரைத் தியாகம் செய்தல் மேல் என்ற நோக்கத்துடன் இந்திய மாதர் தீக்குளித்தல் வழக்கம். மானத்தைக் காப்பதற்காகவே ஸ்திரீகள் சககமனம் செய்வர். இந்தியப் பெண்டிர் உயிரினு மானமே பெரிதென மதிப்பவர்கள். ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய் மேஜர் எல்லிஸிடம் த... தேகத்தை ஒப்படைக்க இ...ந்ததாய் அவரே கூறுவதாக சொல்லியிருப்பது வெறுக்க... தகுந்த விஷயம். இக்கூற்... இந்தியப் பெண்மைக்கே அ... மானம் தருவது. ராணி லக்ஷ்மீ... பாயின் வம்சமான கராட... பிராமணகுலத்திற்கு இ... வைச் சேர்ப்பது; ஹிந்துக்... ளுக்கே அவமானம்; அவ்வ... மையாரைத் தெய்வமாக கொண்டாடுகிறவர்கள் ம... தைப் புண்படுத்தக்கூடிய... இவ்வவதூறு கேவலம் கற்ப... யேயன்றி சரித்திர பூர்வமா... தல்ல.

'வேசை' என்று ராணி லக்ஷ்... மீபாயைப் பிறர் திட்டுவதா... ஒரு பகுதி புத்தகத்தி... காணப்படுகிறது. இது பி... திட்டுவதாகச் சொல்லப்ப... டிருந்தபோதிலும் ராணி லக்ஷ்... மீபாய்க்கு அவமானத்...


உத்தரவாதமான
பொன், வெள்ளி நகைகளுக்கும்,
பலஊர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்
ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரிஸ் லிமிடெட்.
109, சைனு பஜார் ரோட், மதராஸ்.



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவரது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் இவ்வாரம் நடைபெற்றது.

யுண்டுபண்ணுவதாகும். இதன்றியும் ராணியின் தந்தையையும் பாட்டனையும் குறித்துப் பொய்ச் செய்திகள் காணப்படுகின்றன. ஆதலால் இந்த நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்ட 65 நாட்களுள் புத்தகப் பிரசுரத்தை நிறுத்துவதுடன் மன்னிப்பும் கேட்கவேண்டும்; ரூ. 10000 வாதிகளின் இஷ்டப்படி தர்மத்திற்காகக் கொடுக்கப்படவேண்டும். இல்லையெனில் ஒரு லக்ஷ ரூபாய்க்கு நாகபுரி ஸிவில் கோர்ட்டில்வழக்குத் தொடரப்படும் என்பதை அறியவும்.''

* * * *

## வர்த்தகர்களின் பயத்திற்குக் காரணமில்லை

பம்பாய் ஜனப் பிரதிநிதி சபைக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட வர்த்தகத் தொகுதி அபேக்ஷகர் ஸ்ரீமான் பி. அர்ஜுன் கிம்ஜியைப் பாராட்ட வர்த்தகர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் ஸர்தார் படேல் தலைமைவகித்துப் பின்வருமாறு பேசினார்:—

தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றியடைந்துவிட்டது பற்றி பல பெரிய வர்த்தகர்கள் பயப்படுகிறார்களென்று நான் கேள்விப்படுகிறேன். தங்களுடைய சொந்த ஜனங்களிடத்திலேயே இவர்கள் பயப்பட வேண்டிய காரணமென்னதென்றும் பிரதேசத்தாரின் உதவியையும் பாதுகாப்பையும் என் நாட வேண்டுமென்றும் எனக்குத் தெரியவில்லை. இது மிகவும் மானக்கேடான நிலைமைதான். நமது சொந்த ஜனங்களைக் கண்டு நாம் என் பயப்பட வேண்டும்?

இந்தியாவில் உணவுக்குத் திண்டாடும் கோடிக் கணக்கான மக்களுக்காகவே காங்கிரஸ் போராடுகிறதென்பதை வர்த்தகர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். கோடிக் கணக்கான மக்கள் பட்டினி கிடந்து வாட ஒரு சிலர் சௌக்கியமாக உண்டு களித்திருப்பது பாவம் என்பதை வர்த்தகர்கள் உணர வேண்டும்.

பட்டினி கிடக்கும் தேச மக்களுக்கு உணவும் உடையுமளிக்க வழிதேடுவது ஒவ்வொரு இந்தியனுடைய கடமையுமாகும். விதேச ஆதிக்கத்தினின்று தேசத்தை விடுவிக்கக் காங்கிரஸ் செய்யும் வேலையில் நீங்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம். சட்ட சபைகளில் பிரவேசித்துவிட்டதால் பிரமாதமாக எதுவும் நடைபெற்றுவிடப் போவதில்லை. தேச மக்கள் மீது சுமத்தப்பட்ட சீர்திருத்தம் உபயோகமற்றதென்பதை நிரூபிப்பதற்கே காங்கிரஸ் சட்ட சபை புகத் தீர்மானித்தது. ஒட்டாவா ஒப்பந்தம் மோடி—லீஸ் ஒப்பந்தம் ஆகியவற்றால் நமது தேசத்தாரில் சிலர் தேச நலத்திற்கு விரோதமாக நடந்த காலம் போய்விடுமென்றும் தேசியப் போராட்டத்தில் வியாபாரிகள் தகுந்த பங்கு எடுத்துக்கொள்வார்களென்றும் நம்புகிறேன்.

* * * *

## தங்கப் பார்சல் களவு

கான்பூரிலிருந்து பம்பாய்க்கு அனுப்பப்பட்ட 54,000 ரூபாய் பெறுமான தங்கம் அதிசயமாகக் களவு போயிருக்கிறது. தங்கம் வைக்கப்பட்டிருந்த பெட்டி பம்பாய் வந்து சேரவும் அதைத் திறந்து பார்க்கும்போது தங்கத்திற்குப் பதிலாக இரும்புக் காறுப் பாள்களே காணப்பட்டன. சார்டர்ட் பாங்கியின் கான்பூர் கிளை ஆபீஸ், பம்பாய் கிளை ஆபீஸிற்குத் தங்கத்தை அனுப்பியிருந்தது. பெட்டிவந்து சேரவும் அதன் பளு அதிகமாக இருந்ததைக் கண்டு சந்தேகம் உண்டாயிற்று. உடனே பெட்டி திறக்கப்படவே, தங்கத்திற்குப் பதிலாக இரும்புத்துண்டுகளே வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. பெட்டி வந்து சேரும்போது ஸீல்கள் குலைபடாமல் அப்படியே இருந்ததால், இவ்வித மாறுதல் எவ்விதமேற்பட்டிருக்குமென்பது ஆச்சரியமாகவே இருக்கிறது.

* * * *

## அந்தகச் சிறுவன் தற்கொலை முயற்சி

“எனக்கு வேண்டிய ஆகாரத்தை நான் சம்பாதிக்க முடியவில்லை. ஏழு தினங்கள் பிச்சை யெடுத்தும், எனக்கொன்றும் கிடைக்கவில்லை. ஆகவே, எனது வாழ்க்கையை முடித்துக்கொள்ள நான் அபினியை உட்கொண்டேன்.''

ஜலந்தரில் ஒரு அந்தகச் சிறுவன்மீது தற்கொலை புரிய முயற்சித்ததாகக் கொண்டு வந்த வழக்கில், அவன் மேற்கண்டவாறு மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவித்தான்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு, ஒன்று வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கப்படவேண்டும் அல்லது ஆகாரம் கொடுக்கவேண்டும்; இல்லாவிடில் லாகூர் மேயோ ஆஸ்பத்திரியில் கண்ணுக்கு வைத்தியமாவது செய்யவேண்டும்; இல்லாவிடில் தம்மை விடுதலை செய்யும் பக்ஷத்தில் ரெயில்வே தண்டவாளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதானென்றும் அவன் வேண்டிக்கொண்டான்.

மாஜிஸ்டிரேட் சிறுவனின் துர்ப்பாக்கிய நிலைமையில் இரக்கம் கொண்டு ஆறுமாத சிறைத்தண்டனை விதித்தார். சிறை வைத்தியர்கள் அவன் கண்ணுக்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

* * * *

## காளி விக்ரஹத்தின் தலையைக் காணோம்

பாரஹீகஞ் கடைத்தெருவிலுள்ள காளிகோயிலுக்குள் சில அனுமதேயப் பேர்வழிகள் நுழைந்து விக்ரஹத்தை நாசமாக்குந் தூளாக உடைத்துவிட்டனர். விக்ரஹத்தின் தலையை இன்னுங் காணோம். இது சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

* * * *

## உல்லாச யாத்திரையில் மரணம்

பாட்னு எஞ்ஜினியரிங் காலேஜில் மூன்றாவது வருஷ காரிடினேட் வகுப்பு மாணவர்களில் ஐந்து பேர்கள் கங்கையில் படகில் உல்லாச யாத்திரை சென்றபோது அவர்களிருந்த படகு புயலில் அகப்பட்டுக் கொண்டு படகு கவிழ்ந்தது. இருவர் நீந்திக் கரையேறினர். மூவர் மாண்டு போயினர்.

* * * *

## அஸ்ஸாமில் புயல் சேதம்

சென்ற வாரத்தில் கௌஹாத்திக்குச் சமீபமாயுள்ள ஜான்ஜி நதிக்கரையில் பெரும் புயலடித்தது. இதனால் இரண்டு கிராமங்களில் பெரும் சேதமேற்பட்டிருக்கிறது. பல வீடுகளும் பெரிய மரங்களும் வீழ்ந்து விட்டன. பயிர்கள் நாசமடைந்து விட்டன. 500 குடும்பங்கள் பரிதவிக்கின்றன.

* * * *

## போலீஸார் கொலை

ஹௌரா ஜில்லாவிலுள்ள போலீஸ் அவுட் போஸ்டைச் சார்ந்த ஒரு ஹவில்தாரும், ஒரு கான்ஸ்டேபிளும் தங்களுடைய விடுதிகளில் படுத்து தூங்கிக் கொண்டிருக்கும்போது சென்ற 18-ந்தேதி அதிகாலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்கு தூங்கிக் கொண்டிருந்த மற்றும் 3 கான்ஸ்டேபில்களும் படுகாயப் படுத்தப்பட்டனர். அங்கு டியூடியிலிருந்த ஆயுதந் தாங்கிய படைக்காவலாள் ஒருவன் கண்டபடிச் சுட ஆரம்பித்தானென்றும், அந்தச் சமயத்தில் படுத்துறங்கிக் கொண்டிருந்த 5 பேரைக்குண்டுகள் தாக்கினவென்றும் சொல்லப்படுகிறது. குற்றத்திற்குக் காரணம் தெரியவில்லை. படைக்காவலாள் கைது செய்யப்பட்டிருக்கிறான்.


* * * *

ஆபரேஷன் தேவையில்லை.
டெஸ்டிக்யூர்

ஆரை வீக்கம், குத்தல், குடைச்சல் பொறுக்க முடியாத நோய் முதலியவைகட்கு சிறந்த ஔஷதம். மூன்றே வேளை மருந்து சாப்பிட்டவுடன் குணம் தெரியும். விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாடுகளுக்கு அனுப்ப முன்பணம்தேவை.

மாடர்ன் ரெமிடீஸ் கம்பெனி,
96, தைப்பப்ப முதலி தெரு,
ஜி. டி. மதராஸ்

காங்கிரஸ் மகா சபை சரித்திரம்
3—பாகம்
விலை ரூபாய் 6.
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.



ஜப்பானில் குஸ்திச்சண்டை இப்பொழுது பிரபலமடைந்து வருகிறது.

நமது சிறுகதை

# காணமற்போன வைரங்கள்

(விஜயராம் எழுதியது)

காலை சுமார் மணி 10 இருக்கலாம். சென்னையில் பெரிய ட்ராங்கரும் லக்ஷாதிபதியுமான அம்பலவாண முதலியார், மயிலையில் உள்ள தமது பங்களாவின் ஓர் அறையில், சஞ்சலத்துடன் யோசித்தவண்ணம் ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவருக்கு வயது சுமார் 42 அல்லது 43 இருக்கும். ஆனால் அவருடைய தேகக்கட்டானது அவரது தேக பலத்தையும், மனோ பலத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டிற்று. இப்படி யோசித்துக்கொண்டிருந்தவர், திடீரென்று ஓர்வித முடிவுக்கு வந்தவரைப்போல் எழுந்து, டெலிபோனில் யாருடனோ ஐந்து நிமிஷ நேரம் பேசிவிட்டுத் திரும்பினார். அப்பொழுது அவருடைய முகத்தில் சந்தோஷத்திற்கான குறிகள் தென்பட்டன.

சுமார் கால் மணி நேரங் கழித்து, அம்பலவாணரின் அறையில் அவரும் அவருடைய சினேகிதரின் பிள்ளையான சுந்திரமும் பேசிக்கொண்டிருந்தனர்.

அம்பலவாணர்:—நண்பரே! இந்தக்கடிதத்தைப்படித்தால், நான் அழைத்ததின் காரணம் விளங்கும்—என்று சொல்லிக்கொண்டே ஓர் கடிதத்தை சுந்திரத்தினிடம் கொடுத்தார். அந்தக் கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"முதலியாரே!

உம்முடைய வருடப் பூர்த்திக் கொண்டாட்டத்தின் போது உம்மிடமிருக்கும் அதிசய வைரங்கள் களவாடப்படும். அன்று என்னை ஏமாற்றவோ, பிடித்துக் கொடுக்கவோ முயற்சி செய்தால், நீர் உயிரிழப்பது திண்ணம்; ஜாக்கிரதை!

வீரன்"

இதைப் படித்த சுந்திரம் நகைத்துக்கொண்டே, "இந்த மிரட்டலுக்கா பயப்படுகிறீர்" என்றார்.

அம்பலவாணர்:—அப்பா சுந்திரம்! உமக்கு விஷயம் தெரியாது. அந்த வைரங்களை ஓர் பெரிய கோடீஸ்வரர் என்னிடம் பாதுகாப்புக்கு வைத்திருக்கிறார். அப்படியிருக்க அவைகள் திருடப்பட்டால் என்ன நினைப்பார்கள்?

சுந்திரம்:—நண்பரே! வீரன் சாமானியமான திருடனல்ல. அவனைப் பிடிக்கப் போலீஸார் எவ்வளவோ பாடுபட்டும் இன்னும் பிடிக்க முடியவில்லை. அவனை ஏமாற்றினாலொழிய நாம் ஜயிக்கமுடியாது. தவிர அவன் எந்த வேஷத்தில் வருவான் என்பதையும் சொல்ல முடியாது. ஆகையால் நான் சொல்கிறபடி நடந்தால், வைரங்களைக் காப்பாற்றுவதுடன் அவனையும் பிடித்துவிடலாம்.

அம்பலவாணர்:—நான் எப்படி நடக்க வேண்டும்?

சுந்திரம்:— அம்பலவாணரின் காதில் ரகஸியமாகச் சில வார்த்தைகளைச் சொன்னான். இதைக் கேட்ட அம்பலவாணரும், "சரி! அப்படியே செய்கிறேன்" என்று தலையசைத்தார்.

பிறகு சுந்திரம் அங்கிருந்து புறப்பட்டு அம்பலவாணரின் ஒரே மகளும், சுந்திரத்தின் காதலியுமான லீலாவினறைக்குச் சென்றான். அங்கு சென்றவன் சற்று நேரம் லீலாவுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுப்



அற்புதமாக இல்லையா?

ஆம், அற்புதமே!!

"புரொபஸர்—இன்னவர்—மாயா மந்திரக்காரர் அமெரிக்காவிலிருந்து வந்திருப்பவரின் மாயா சக்தி இதோ இருக்கிறது! அறபுத வேலை செய்வது—உண்மையானது. உங்கள் மனோபீஷ்டங்கள் யாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மாய மோதிரம்

1½ வருஷத்திற்குள் 1,27,00ர் மோதிரங்கள் விற்பனையாகிவிட்டன இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மூலை முடுசெகுக்கு மட்டுமென்றி, வெளி நாடுகளுக்கும் இது சென்றிருக்கிறது.




விலை ரூ. 2-தான்

இனாம் ரூ. 100

3 மோதிரமாக வாங்கினால் ரூ 5; 6-க்கு ரூ. 8; 12-க்கு ரூ 14. தபால் & பாக்கிங் செலவு தனி. உபயோகிக்கும் முறை பார்சலுடன் வரும். உபயோகித்துப் பலனில்லையெனக்கண்டால் நிரூபிப்பவர்களுக்குப் பூராகிரயமும் ரூ.100-ம்இனாம்

(உங்கள் திருப்திக்காக இதோ சில நற்சாக்ஷிகள்)

1. பண்டித என். கிஷோர் சர்மா, போஹம்பூர் ரோட், சித்தாமன் ஸ்டேட், மத்திய இந்தியா எழுதுவதாவது:- "தங்கள் மாய மோதிரம் நல்ல பலனளித்தது. இன்னொன்று அனுப்பவும்."

2. டாக்டர் எச் கோஸ்வாமி, P. O. நல்பாரி, குதியா சத்ரா கிராமம், அஸ்ஸாம் எழுதுவதாவது: "தங்கள் மாய மோதிரத்தின் உதவியால் லாட்டரியில் எனக்கு ரூபா 1500 கிடைத்தது. என் உத்தியோக விஷயத்திலும் நல்ல வேலை செய்கிறது.

3. டாக்டர் டின் அலி சாஹிப்,டாமா டிஸ்பென்சரி, P. O. கைகட்டா, ஜெஸ்ஸோர்எழுதுகிறார்:-'கோரிய பலன்கள் கிடைத்தன. என் மனைவி நீண்ட காலமாகக் காச நோயால் கஷ்டப்பட்டாள்; இப்பொழுது, ஒன்றுமில்லை. மலடி ஒருத்தி மகவைப் பெற்றாள்.

4. டாக்டர் பினய் பூஷண முகர்ஜி P. O சதாயி, பெல்டங்கா மார்க்கம், கிழக்கு வங்காள ரெயில்வே எழுதுவதாவது:- "மாய மோதிரம் ரொம்ப உபயோகப்பட்டது அதன் துணையால் நான் வைத்தியப் பரீட்சையில் முதலில் தேறினேன்."

5 வியூன் பூகான் c/o எ. எஸ். வாட்சன் & கம்பெனி லிமிடெட், அலெக்ஸாண்டிரியா, ஹாங்காங் எழுதுகிறார்:- "இத்துடன் ரூபா 2-8க்கு மணியாடர் அனுப்பியிருக்கிறேன். மோதிரம் ஒன்று அனுப்பவும.

6 மிஸ்டர் ப்ரேம் பீஹாரிலால், மத்தூர் கத்தியார் ரைஸ் & ஆயில் மில்ஸ், P. O. கத்தியார் மில்ஸ பூர்னியாஜில்லா எழுதுவதாவது:- "தஙகள் மாய மோதிரத்தால் நல்ல பலன் கண்டேன் எனவே என் நண்பர் ஒருவருக்கு இன்னொன்று அனுப்பிவைக்கவும்."

மொத்த ஏஜண்டுகள் :

BENGAL MESMERISM HOUSE,
No. 29, Panchpota, BENGAL.

பிறகு தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றான்.

* * * *

வருடப் பூர்த்திக் கொண்டாட்டமும் வந்தது. அன்று காலைமுதல் அம்பலவாணரின் உறவினரும், ஊரிலுள்ள பல பிரமுகர்களும் வந்துகொண்டிருந்தனர். அன்று மாலை சகலரும் விருந்துண்டு ஹாலில் உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், திடீரென்று பரபரப்புடன் அம்பலவாணர் ஹாலுக்குள் நுழைந்தார். வந்தவர், அங்கு இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சென்று தம்முடைய வைரங்கள் திடீரென்று காணாமற் போய்விட்டன என்று தெரிவித்தார். இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் உடனே சில கான்ஸ்டேபிள்களை மயிலை அம்பலவாணரின் பங்களாவுக்கு அனுப்பும்படிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்துவிட்டுத் திரும்பி வந்தார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்:— முதலியாரே! நீர் கடைசியாக அந்த வைரங்களை எப்பொழுது பார்த்தீர்?

அம்பலவாணர்:—அரைமணி நேரத்திற்கு முன்பு எடுத்து, அப்பொழுதுதான் ரங்கூனிலிருந்து வந்த என் பால்ய சிநேகிதர் அருணாஜலத்துக்குக் காண்பித்துவிட்டு இந்த இரும்புப் பெட்டியில் வைத்தேன். பிறகுதான் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தோம். சற்று நேரத்திற்கு முன்பு பார்த்தபோது அதைக் காணவில்லை என்று வருத்தத்துடன் கூறினார்.

இவைகளைக் கேட்ட இன்ஸ்பெக்டர் அவ்வறையையும் பெட்டியையும் சோதித்தார். சுமார் அரைமணி நேரம் சோதித்தும் ஒரு புலனும் அகப்படவில்லை. அப்பொழுதே அங்கு வந்த சுந்திரம் விஷயத்தை அறிந்துகொண்டு புன்சிரிப்புடன் இன்ஸ்பெக்டரிடம் சென்று அவருடைய காதில் 'குசு குசு' வென்று சில வார்த்தைகளை ரகஸியமாகச் சொன்னார். இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் சுந்திரத்துடன் ஹாலுக்கு மறுபடியும் வந்து அங்கிருப்பவர்களை நோக்கி, "கனவான்களே! இப்பொழுது இங்கிருக்கும் அம்பலவாணருடைய வைரங்கள் களவுபோயிருக்கின்றன. களவு இப்பொழுது நடந்திருப்பதாலும், கள்ளன் வெளியில் போகவில்லை என்று நான் அபிப்பிராயப்படுவதாலும், உங்களைச் சோதிக்க வேண்டியவனாகிறேன். அதனால் ஏற்படும் கஷ்டத்திற்கு என்னை மன்னிக்கவும்" என்று சொல்லிவிட்டு, இரண்டு கான்ஸ்டேபிள்களுடன் எல்லாரையும் சோதித்தார். ஆனால் களவுபோன வைரங்கள் ...ரிடமும் இல்லை. கடைசியில் முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு தமது இடத்தில் உட்கார்ந்தார்.

உடனே எழுந்த சுந்திரம் அங்கு இருப்பவர்களை நோக்கி, "கனவான்களே! இப்பொழுது நான் என்னுடைய பழய நண்பரும், இவ்வைரங்களைக் களவாடியவருமானவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்" என்று கூறிவிட்டு, அம்பலவாணரின் நண்பரும், ரங்கூனிலிருந்து வந்திருப்பவருமான அருணாஜலத்தைச் சுட்டிக்காட்டி இன்ஸ்பெக்டரிடம், "இவரிடம்தான் களவுபோன வைரங்கள் இருக்கின்றன" என்றார்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட சகலரும் சுந்திரத்துக்குப் பிரமை பிடித்துவிட்டதென்றே நினைத்தார்கள்.

இன்ஸ்பெக்டர்:—சுந்திரம்! இப்பொழுதுதானே நான் அவரைச் சோதித்தேன்.

சுந்திரம்:—இருக்கலாம். ஆனால் வைரங்கள் அவரிடம்தான் இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்—என்று சொல்லிக்கொண்டே அருணாஜலத்திடம் சென்று இமைப்பொழுதில் அவர் தலையிலிருந்த பொய் டோபாவையும் மீசையையும் இழுக்க, இரண்டும் கையுடன் வந்துவிட்டன.

இதை எல்லாரும் ஆச்சரியத்துடன் பார்ப்பதற்குள், இருகைகளிலும் இரு ரிவால்வாகளுடன் அங்கிருப்பவர்களை நோக்கி போலி அருணாஜலம், "கனவான்களே! இப்பொழுது உங்களில் யாரேனும் உங்கள் இடம்விட்டு அசைந்தாலும் கையை அசைத்தாலும் அற்பநாயைச் சுடுவதுபோல் சுட்டுத்தள்ளுவேன். ஜாக்கிரதை" என்று சொன்னான். இந்த ஆச்சர்ய சம்பவத்தை கண்ட சகலரும் ஆடாமல் அசையாமல் பயத்துடன் பதுமைகள்போல் இருந்தனர். மறுநிமிடம் அவன் சுந்திரத்தையும் இன்ஸ்பெக்டரையும் நோக்கி, "நல்லது. இப்பொழுது சென்று வருகிறேன். மற்றொரு சமயம் பேசிக்கொள்ளலாம். ஆனால் வீரனைப் பிடிப்பது அனுபவ சாத்தியமில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்" என்று கூறி முடித்தான்.

இதைக்கேட்ட சுந்திரம் கலகலவென்று நகைத்தான். மறுவினாடி பின்னாலிருந்து யாரோ வீரனுடைய கால்களை இழுக்கத் தடாலென்று கீழே வீழ்ந்தான். இமைப்பொழுதில் சுந்திரம் அவன் மேல்பாய்ந்து இரு துப்பாக்கிகளையும் பிடுங்கி எறிந்துவிட்டுக் கைகளுக்கு விலங்கை மாட்டினான். அப்பொழுது சகலரும் இப்படி சமயத்தில் வந்து உதவியது யாரென்று பார்க்க அம்பலவாணரின் புதல்வியாகிய லீலாவதியேயென்று அறிந்தனர். சுந்திரம் லீலாவதியை


(24-ம் பக்கம் பார்க்க)












மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியின் நடிகர்


## மிஸ் விர்ஜினியா ப்ரூஸ்.

# ஸோவியத்தின் புதிய




சமீபத்தில் ஹேர் ஹிட்லர் ஜெர்மன் பார்லிமெண்டில் பேசியபோது எடுத்தபடம். இக்கூட்டத்தில்தான் ஐரோப்பிய சமாதானத்திற்கான நிபந்தனைகளை ஹிட்லர் தெரிவித்தார்.







சமீபத்தில் இங்கிலாந்தில் கடுமையான பனி பெய்ததன் காரணமாக ஒரு மோட்டார் ஓர் என்ற கிராமத்தில் பனியில் அ
காட்சிகளையும் காணலாம். மோட்டாரிலிருந்த 5 பிரயாணிகளும், டி

# ஆகாயப்படை விமானம்




ஸோவியத்தின் புதிய ஆகாயப்படை விமானம். திடீரெனப் போர்க்களத்தில் காலாட்படைகளை இறக்குவதற்கு இந்த விமானங்கள் பெரிதும் பயன்படுமாம்.





ுகப்பட்டுக் கொண்டது. மோட்டார் முதன் முதலில் சென்ற வழியும் பனி நின்ற பிறகு மோட்டார் காணப்பட்ட இரு
ரைவரும் மோட்டாரிலிருந்து இறங்கிக் கிராமத்திற்குச் சென்று தங்கினர்.


# டில்லியில் அகில இந்திய
# சாரணர் கூட்டம்



சென்னைச் சாரணர் படையைச் சேர்ந்த சிலர் விவாக கோஷ்டியினர்போல் வேஷம் தரித்துக்கொண்ட காட்சி.



சென்னைப் படை முகாமின் வாசல்.




சென்னை சாரணர் படைத் தலைவர் திவான்பகதூர் ஸி. எஸ். ரத்னசபாபதி முதலியார். சென்னை முகாம் வாயிலில் எடுத்த படம்.



உலகப் பிரதம கமிஷனர் லார்ட் பேடன் பவல்.

# டில்லியில் அகில இந்திய சாரணர் கூட்டம்

—[ o ]—

## நடைபெற்ற விவரங்கள்

(எஸ் ஆர்.)

கி. பி. 1911-ம் வருஷம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டிக் கொண்ட இடத்திற்கு அருகில் சுமார் 4000 சாரணர்கள் வந்து கூடி இருந்தனர். இங்கு சுமார் 600 கூடாரங்கள் அடிக்கப்பட்டன. சாரணர்களின் சிறு நகரமொன்று இங்கு தோன்றிவிட்டதாகக் கூறலாம். இம்மாதிரியான சாரணர்களின் அகில இந்தியக் கூட்டம் கூடியது இதுதான் முதல் தடவை.

அஸ்ஸாம், காஷ்மீர், பம்பாய், சென்னை இவ்வாறு இந்தியாவிலுள்ள மாகாணங்கள் ஒவ்வொன்றிலிருந்தும், பர்மா, சிலோன் முதலிய தூரதேசங்களிலிருந்தும் ஒவ்வொரு சாரணர் படை வந்திருந்தது. எல்லோரும் ஜாதிமத வித்தியாசமின்றி ஒருவருக்கருகே இன்னொருவர் கூடாரமடித்துக்கொண்டு தங்கினர். சாப்பாடு ஒவ்வொருபடையினராலும் தனித்தனியாக, அவர் அவர்கள் இஷ்டம்போல் சமைக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாணத்தினரும் தங்கிய இடத்தில், தம் தம் தேசத்திற்கேற்றவாறு, வாயிற் படிகள் அமைத்தனர். சென்னையின் படை தங்கிய இடத்தில், ஒரு கோவில் கோபுரத்தைப்போல் வாயிற்படி அமைக்கப்பட்டு, அதன் இருபுறங்களிலும் வாழை மரங்கள் கட்டப்பட்டன. பம்பாயின் வாயிற்படி "கேட்வே ஆப் இந்தியா" வைப்போல் அமைக்கப்பட்டிருந்தது. அதன் வலது புறத்தில் பம்பாய் இராஜதானியின் படமும், எந்த எந்த ஊர்களிலிருந்து சாரணர்கள் வந்திருக்கிறார்களென்றும் குறிக்கப்பட்டிருந்தது. இவ்வளவு தூர தேசங்களிலிருந்து, பதினொரு வயதிலிருந்து, நாற்பது, ஐம்பது வயதுள்ள சாரணர்கள் வந்திருப்பதின் காரணம், தமது தலைவராகிய பேடன் பவல் பிரபுவைக் காண்பதற்கே. பிப்ரவரி மாதம் 22-ம் தேதி இவருடைய பிறந்த தினம். அன்று இவருக்கு 80 வயதாகிறது. தமது பிறந்த தினத்தை இந்தியாவில் கொண்டாடவேண்டுமென்று, சீமையிலிருந்து அவர் இவ்வளவு தூரம் வந்திருக்கும்போது, அவரைத் தரிசிக்க, எல்லா மாகாணங்களிலிருந்தும், டில்லிக்குச் சாரணர்கள் வந்தது ஆச்சரியமா?

பிப்ரவரி மாதம், மூன்றாம் தேதி வைசிராய் பிரபு விஜயம் செய்து, ஜம்பூரியைத் திறந்து வைத்தார். அப்போது 4000 சாரணர்களும், இந்தியாவின் படத்தைப்போல், ஒவ்வொரு மாகாணத்தினரும் தம்தம் தேசம் இந்தியா படத்தில் இருக்குமிடத்தில் நின்று, வைசிராய்க்கும், சாரணர் தலைவருக்கும், வந்தனமளித்தனர். இதில் 19 பிரிட்டிஷ் மாகாணத்தினரும், 38 இந்திய ஸமஸ்தானங்களின் சாரணர்களும் கலந்துகொண்டனர்.

மறுநாள் இரவு கூடாரங்களின் எதிரில் தீமூட்டி, அதைச் சுற்றி, ஒவ்வொரு மாகாணத்திலும் வழங்கப்படும் நர்த்தனங்களை வேஷந்தரித்துக் கொண்டு ஆடிக்காட்டினர். இதில் அஸ்ஸாம் தேசத்தினர் ஆடிய நாகா நர்த்தனம் மிகவும் சிறந்ததாக இருந்தது.

6-ம் தேதி சனிக்கிழமையன்று, சாரணர் தலைவரெதிரில், மிகவும் அழகிய கேளிக்கை நடந்தது. அதில் ஒவ்வொரு மாகாணத்தினரும் ஒவ்வொரு விதமாக வேஷம் தரித்துக்கொண்டனர். நமது சென்னைப் படையினர், விவாகம் நடப்பதுபோல், மணமகனாகவும், மணமகளாகவும், புரோகிதராகவும் வேஷம் தரித்தனர். இராஜபுதன ஸமஸ்தானங்களிலிருந்து வந்தவர்கள், இராஜபுத்திர வீரர்களைப் போல் வேஷமணிந்து போரில் கத்தி கேடயத்துடன் சண்டையிடுவதுபோல் காண்பித்தனர். இலங்கையிலிருந்து வந்தவர்கள் சிங்களத்தினரின் வேஷம் அணிந்திருந்தனர். மற்றும் சிலர் ஒட்டகங்களின்மீது குருக்ஷேத்திரத்திற்கு யாத்திரை செல்வதுபோல் சென்றனர்.

நமது சென்னை வாசிகள் ஓலையின் கீற்றினால் அரைமணி நேரத்திற்குள் ஒருசிறு குடிசையை எழுப்பிவிட்டனர். வட இந்தியாவில் இக்கீற்றுகள் அகப்படாவாகையால், வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் இது மிகவும் ஆச்சரியத்தை அளித்தது.

இதன் இறுதியில் பேடன் பவல்பிரபுவிற்குத் தந்தத்திலும் வெள்ளியிலும் அநேக சாமான்களும், அவர் மனைவிக்கு பவுடர் டப்பா முதலியவைகளும், அவர் பெண்ணிற்குபட்டுப்புடவைகளும், பரிசாக அநேக சாரணர்களால் அளிக்கப்பட்டன. இவைகளை அன்புடன் ஏற்றுக்கொண்டு, சாரணர்களுக்குச் சில நல்மொழிகளை பவல் பிரபு உபதேசித்தார்.

இந்த ஜம்போரியில், கவி ரவீந்திர நாத் தாகூரின் அழகிய பாடலொன்று, எல்லா பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பாடப்பட்டது. இந்த ஐந்து நாட்களிலும் எல்லா மாகாணத்தின் சாரணர்களும் ஒருவரோடொருவர், பாஷை தெரியாவிடினும், சங்கோஜமின்றிக் கலந்து, மிகவும் இனிமையாக பொழுதுபோக்கினர்.

ஒவ்வொரு வருஷமும் இக்காலத்தில் டில்லியில் குளிர் மிகவும் , அதிகமாயிருக்கும். அவ்வாறின்றிச் சீதோஷ்ணஸ்திதி மிகவும் சுகமாயிருந்தது தெய்வகடாக்ஷமே.

சுமார் 30 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் ப்ரௌன்ஸீ தீவில் பவல் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம், நாளடைவில் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. இந்தியாவில் இது முதன்முதலாக 1915-ம் வருஷம்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது இத்தேசத்தில் 3,50,000 ஆண் சாரணர்களும் 48,000 பெண் சாரணர்களும் இருக்கின்றனர்.

* * * *


## பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

### ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

சேலவுகுப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M BHATTACHARYYA & Co.

Economic Pharmacy, 84, Clive Street. CALCUTTA

அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr N V ஸ்ரீராமச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.

30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915 ஸு) 289, எஸ்பிளநேட் மதராஸ்.



### தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக பொருட்காட்சிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்கு கனத்தில குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது.

நாகரீகத்திற்கேற்ற நானாவித கல மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,

77, சைனாபஜார் ரோட், மதராஸ்.

## காணமற்போன வைரங்கள்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி, "லீலா! நான் சொன்ன பிரகாரம் சமயத்தில் வந்து உதவியதற்கு நிரம்ப வந்தனம்" என்று சொல்லிவிட்டு, "இன்ஸ்பெக்டர்! முதலியார்வாள்!! நீங்கள் இருவரும் காணமல் போன வைரங்களைப்பற்றிக் கலவரப்படுகிறுற்போல் தெரிகிறது. இதோ அவைகளிருக்குமிடத்தைக் காண்பிக்கிறேன்" என்றுகூறித் தன்பையிலிருந்து ஒரு ஸ்க்ரூடிரைவரைஎடுத்தான். இதைப் பார்த்த சகலரும் 'இதை வைத்துக்கொண்டு இவன் என்ன செய்யப்போகிறுன்?' என்று ஆச்சரியப்பட்டனர்.

சுந்திரம் ஒரு மந்திரவாதியைப்போல் கையில் ஒரு ஸ்க்ரூடிரைவருடன் கைதியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். ஒரு சேவகனைக் கொண்டு வீரனுடைய பூட்ஸைத் திருப்பச் சொல்லி, அதன் அடிபாகத்திலிருந்து இரண்டு ஸ்க்ரூக்களைக் கழற்றியவுடன் அதன் அடிப்பாகம் முழுவதும் ஓர் சிறு அறையைப்போல் திறந்துகொண்டது. சுந்திரம் அதில் அடக்கம் செய்யப்பட்டிருந்த வைரங்களை எடுத்து அம்பலவாணரிடம் கொடுத்தான். எலக்டிரிக் வெளிச்சத்தில் அந்த வைரங்கள் நக்ஷத்திரங்களைப்போல் மின்னின. வைரங்களைக்கண்ட அம்பலவாணரின் முகம் சூர்யனைக்கண்ட புஷ்பம்போல்மலர்ந்தது. இன்ஸ்பெக்டர் தம்முடைய கைதியைத் தக்க பாதுகாப்புடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டுச் சுந்திரத்தை நோக்கி "நண்பரே! இதை நீங்கள் எவ்விதம்கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டார்.

உடனே சுந்திரம் அம்பலவாணருக்கு கடிதம் வந்ததையும் மற்ற விஷயங்களையும் தெரிவித்துவிட்டு, அம்பலவாணரின் கடிதத்திலிருந்தும் அவன் வருஷக் கொண்டாட்டத்தன்று வரப்போகிறுன் என்பதிலிருந்தும், அனேகமாக விருந்தினர் ஒருவருடைய வேஷத்தில்தான் வருவான் என்றும் ஊகித்தேன். பிறகு நான் லீலாவைக்கொண்டு புதிய தோட்டக்காரனின் நடவடிக்கைகளைக் கவனித்து வரும்படி எச்சரித்தேன். அம்பலவாணரின் அழைப்புக் கடிதங்களில் ரங்கூனிலிருந்து அவருடைய பால்ய நண்பரான அருணஜல முதலியார் என்பவர் வருகிறுரென்றும், அவரை அம்பலவாணர் பார்த்து வெகு வருடங்களாயின என்றும் அறிந்துகொண்டேன். அன்று துறைமுகத்திற்குச் சென்று அவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். என்னைப்போலவே ந்துகொண்ட வீரனும் மாறு வேஷத்தில் அங்கு வந்து அவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

கடைசியாக கப்பலிலிருந்து அருணஜலமும் இறங்கிவந்தார். உடனே வீரன் அவரிடம் சென்று தான் அம்பலவாணரிடமிருந்து வந்திருப்பதாயும், கார் தயாராயிருக்கிறதென்றும் சொல்லி, அவரைத் தன்னுடைய காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். நானும் என்னுடைய காரில் பின் தொடர்ந்தேன். முன் காரில் சென்றவர்கள் அருணஜலத்துக்கு மயக்கம் கொடுத்து, அவரை தங்களுடைய ஓர் வீட்டில் சிறைவைத்தனர். நான் வீட்டின் அடையாளத்தைக் குறித்துக்கொண்டுவந்துவிட்டேன். பிறகு வீரன் அருணஜலத்தைப்போல் மாறு வேஷம் போட்டுக்கொண்டு அம்பலவாணரிடம் தானே அருணஜலம் என்று சொல்ல, அவரும் வெகுநாட்களாகப் பார்க்காததால் நம்பிவிட்டார்.

இதற்கிடையில், புதிய தோட்டக்காரனும், வீரனின் ஆளுமான கந்தன், இரும்புப்பெட்டி சாவிமாதிரி மற்றொன்று தயார் செய்து வீரனிடம் அளித்துவிட்டான். வீரனும் அம்பலவாணருக்குச் சந்தேகமுண்டாகாமல் நடந்துகொண்டு அவர் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் வைரங்களைக் களவாடி, தான் முன்யோசனையுடன் கொண்டுவந்திருந்த தன்னுடைய பூட்ஸின் கள்ள அறையில் அடக்கம் செய்துவிட்டான். இதை நான் அவனறியாமல் அவனுக்குப் பத்தடி தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன்.

இன்ஸ்பெக்டர்:—அப்படியானல் அப்பொழுதே அவனை பிடித்துக் கைதுசெய்திருக்கலாமே!

சுந்தரம்:— இன்ன்பெக்டர், நான் இப்பொழுது சொன்னபோதே முதலில் நீங்கள் நம்பவில்லையே. அப்பொழுது சொன்னல் என்ன நினைப்பீர்கள்? மேலும், நான் அப்பொழுது இருந்த இடத்திலிருந்து வெளிவரக் கூடாமலிருந்தேன். அப்படி ஏதாவது அசட்டுத்தனம் செய்திருந்தால்வீரன் என்னைச் சுட்டு விட்டு வெளியேறியிருப்பான். அவன் வைரங்களுடன் அவ்விடத்தைவிட்டு வெளியேறியவுடன் லீலாவிடம் சென்று நான் செய்யப்போவதைச் சொல்லிவிட்டு நமக்கு ஏதேனும் அபாயம் ஏற்படாமலிருக்க அவளைச் சமயத்தில் வந்து உதவச் செய்தேன். பிறகு என்னுடைய இரண்டு ஆட்களைக்கொண்டு அம்பலவாணரின் புது தோட்டக்காரனும், வீரனின் உள் ஆளுமான கந்தனைக் கால் கைகளைக் கட்டி ஒரு அறையில் போட்டுப் பூட்டிவிடச் செய்தேன். பிறகு நடந்தது உங்கள் எல்லாருக்கும் தெரியும். நான் நினைத்தபடியே சகலமும் நடந்தது. அப்பொழுது சமயத்தில் லீலா வந்து ஆச்சர்யகரமாய்உதவிநம்மைக் காப்பாற்றினுள்" என்று கூறிவிட்டு லீலாவைப் புகழ்ந்தான்.

இவ்வரலாற்றைக் கேட்ட சகலரும் சுந்திரத்தையும் லீலாவதியையும் கொண்டாடினுர்கள். பிறகு இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் விடைபெற்றுக்கொண்டு சென்றனர். அன்று இரவே அம்பலவாணரின் பால்ய நண்பரான அருணஜலம் விடுவிக்கப்பட்டு வந்து சேர்ந்தார்.

* * *

அன்று இரவு மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அம்பலவாணருடைய தோட்டம் அழகுபெற்று விளங்கியது. சந்திரன் தன்னுடையகுளிர்ந்த கிரணங்களால் அதைப் பன்மடங்கு அழகு செய்து கொண்டிருந்தான். அந்த இரவில் தோட்டத்தில் லீலாவும் சுந்திரமும் சந்தித்தனர். லீலாவைக் கண்டவுடன் சுந்திரம் புன்சிரிப்புடன் அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். சுந்திரத்தைக் கண்டவுடன் லீலா, (பரிகாஸமாக) "அன்பரே! என்ன அப்பொழுது முதல் தோட்டத்திலேயேஇருக்கிறீர்களே; என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

சுந்திரம்:—கண்ணே! வேறொன்றுமில்லை. இங்கு ஒருவர் வருவார். அவர் வந்ததும் அவரைக் கைதுசெய்ய வேண்டும். அதற்காகத் தான் இருக்கிறேன்.

லீலாவதி:—அவர் யார்? என்ன குற்றம் செய்தார்?

சுந்திரம் (பரிகாஸச் சிரிப்புடன்):—அவள் என் ஹிருதயத்தையே திருடிக்கொண்டுவிட்டதால், அவளை எனது அன்பைக்கொண்டு கைது செய்த பிறகே புறப்படப் போகிறேன்" என்றுன்.

மறுவாரம் சுந்திரத்திற்கும் லீலாவதிக்கும் வெகு விமரிசையாய் மணம் நடந்தேறியது.




போலிகளைக் கண்டு உஷார் !!!





அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா,




10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்களை

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.

187, சைன பஜார் ரோட், ஜ் டி மதறாஸ்



இண்டோர் மஹாராஜாவின் ரெயில்வே ஸலூனின் உட்புறத் தோற்றம். இது இங்கிலாந்தில் 15,000 பவுன் செலவில் கட்டப்பட்டது.

# பிரபஞ்ச வர்த்தமானம்

### தென்னுப்பிரிக்காவில் இந்தியருக்கு இடையூறு

தென்னுப்பிரிக்கா யூனியன் பார்லிமெண்டில் தென்னுப்பிரிக்கா இந்தியருக்கு இடையூறு விளைவிக்கத் தக்க மூன்று மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஐரோப்பியரும் ஆசியாக்காரரும் மணம் புரிந்துகொள்வதைத் தடுப்பதே இதன் நோக்கம். தென்னுப்பிரிக்காவில் ஐரோப்பியரல்லாதார் ஐரோப்பியரை வேலைக்கு வைத்துக்கொள்வதைத் தடுக்க மாகாணசபைகளுக்கு அதிகாரம் கொடுப்பதாக மற்றொரு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூன்றுவதாக ஐரோப்பிய ஸ்திரீகளோ, மலே ஜாதி ஸ்திரீகளோ ஆசியாக்காரர்களை மணம் புரிந்துகொள்ளக்கூடாதென்றும் அங்ஙனம் விவாகம் செய்துகொள்வோரின் குழந்தைகளுக்கு டிரான்ஸ்வாலில் சொத்து வைத்துக்கொள்ள உரிமை கிடையாதென்றும் ஒரு மசோதாவில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த மசோதாக்கள் சம்பந்தமாக யூனியன் மந்திரி சபையில் ஒரு தீவிர நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. தற்காப்பு மந்திரியான மிஸ்டர் பிர்ரோவுக்கும், உள்நாட்டு ஆக்டிங் மந்திரியான மிஸ்டர் ஹாப்மியருக்கும் (சென்ற வருஷம் இந்தியாவுக்கு விஜயம் செய்த தென்னுப்பிரிக்கா நல்லுணர்ச்சி தூதுகோஷ்டித் தலைவர்) அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதே இதன் காரணம். மிஸ்டர் ஹாப்மியர் தமது மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதாகவும் இது இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றும் கூறப்படுகிறது. மிஸ்டர் ஹாப்மியரை வெளியேற்றுவதற்காகவே சர்க்கார் இத்தகைய மசோதாக்களைக் கொண்டுவந்திருப்பதாகப் பின் வந்த செய்தி கூறுகிறது.

* * * *

### தென்னுப்பிரிக்காவில் வெள்ளம்

இன்கோமாதி, அம்ப்லூஸ் இந்நதிகளின் அணைகள் உடைந்து கோரமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதுகாரணமாக மொலாம்பி சுதேசிகளில் நூற்றுக்கணக்கானவர் இறந்து போனூர்கள். ரயில்வே, தந்திப் போக்குவரத்து சாதனங்கள் குலைந்து விட்டன. அப்பிரதேசத்தின் இன்னலைப்பற்றி வெளியிடங்களிலுள்ளவர்களுக்கு அறிவிக்க ரேடியோவைத் தவிர வேறு சாதனமெதுவும் கிடையாது.

* * * *

### அபிஸீனியப் பிரமுகர்கள் கொல்லப்பட்டனர்

எதியோபிய மன்னரின் மருமகனை ராஸ் டெஸ்டாவைச் சிறைபிடிக்க மார்ஷல் கிரேஸியானி செய்த ஏற்பாடு பலிக்கவில்லையாம். அவரையும் அவரது சேனையையும் சூழ்ந்துகொள்ள ஏராளமான விமானங்களுடன் 20,000 இதாலியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஆனல் ராஸ் டெஸ்டா கென்யா எல்லையை நோக்கித் தப்பியோடி விட்டதாகத் தெரிகிறது. அவரிருக்குமிடத்தை நிர்ணயிக்க இத்தாலிய விமானங்கள் முயன்று வருகின்றன. அவர் பகல் வேளைகளில் ஒளிந்திருந்து இராக்காலத்தில் மட்டும் பிரயாணம் செய்வதாகத் தெரிகிறது. அவரது சகாக்களும் அகப்படவில்லையாம்.

கிரேட் லேக்ஸ் பிரதேசத்தில் டெட்ஜாஸ் மாச் கேப்ரி மேரியம் என்பவரின் படைக்கும் இத்தாலியப் படைக்கும் நடந்த யுத்தத்தில் இத்தாலியத் துருப்புகள் கேப்ரி மேரியத்தைக் கொன்று விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர் முன்பு மார்ஷல் கிரேஸியானியின் படையை எதிர்த்துப் போர்புரிந்து வந்தார். அவரைப் பிடிப்பவருக்குச் சன்மானமளிப்பதாகவும் இத்தாலிய சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருந்தனர். கேப்ரி மேரியத்துடன் இன்னும் பல அபிஸீனியப் பிரமுகர்கள் சிறைபிடிக்கப்பட்டனரென்றும் அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

### வின்ஸர்கோமகனுக்கு பண உதவி

வின்ஸர் கோமகனுக்கு உபகாரப் பணம் ஒதுக்கிவைப்பது பற்றி காமன்ஸ் சபையினரிடை அபிப்பிராய பேதம் இருந்துவருவதால், அவருடைய குடும்பத்தினரே ஒரு நிதி திரட்டி அவருக்களிக்க ஏற்பாடு செய்து வருவதாகத் திண்ணமாகத் தெரிகிறது. இது சம்பந்தமாகத்தான் சமீபத்தில் அவருடைய சகோதரி வியன்னவுக்குச் சென்றிருந்ததாக நம்பப்படுகிறது.

இவ்வேற்பாட்டின்படி வின்ஸர் கோமகன் ஸாண்டிரிங்ஹாம் எஸ்டேட்டிலுள்ள தமக்குள்ள பாத்தியதைக்குப் பதிலாக ஒரு பெருந்தொகை பெறுவார்.

இதைத்தவிர மன்னரின் சகோதரி 1,00,000 பவுனும், லார்டு ஹாயிமௌன்ட் பாட்டன் 75,000 பவுனும், காணட்டு இளவரசர் ஆர்தர் 50,000 பவுனும் வின்ஸர் கோமகனுக்குக் கொடுக்க முன் வந்திருப்பதாகத் தெரிகிறது.

* * * *

### இத்தாலியின் ஆயுதப் பெருக்கு

பிரிட்டன் தனது ஆயுதங்களைப் பெருக்க முன் வந்திருப்பதற்கு தக்க பதிலளிக்கும் முறையில் இத்தாலிய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறூர்கள். அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவின்படி 1900-ம் ஆண்டிலிருந்து 1904-ம் வருஷம் வரை பிறந்தவர்களில் பத்துலக்ஷம் ஆடவர், பிறகு குறிப்பிடப்படும் தேதிகளில் ராணுவ நிலையங்களுக்கு வந்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்


ஐரிஷ் ஸ்வீப் ஸ்டேக டிக்கெட்டுகள்

**டெர்பி**

குலுக்கும் தேதி 28—5—37. பந்தய தேதி 2—6—37

டிக்கெட்டு 1-க்கு ரூ 6-12-0 6 டிக்கெட்டுகள் ரூ 33/12.

ஸம்மேர் டெர்பி டிக்கெட்டு 1-க்கு ரூ. 2-

மைசூர் கப் ஸ்விப் டிக்கட்டு 1-க்கு ரூ. 5.

**பிரெஞ்சு நேஷனல் லாட்டரி**

(மாதா மாதம்)

1/10) ஷேர் டிக்கெட்டு ரூ 3/ /- முழு டிக்கெட்டு ரூ. 33/12


குலுக்கல் ஆன 18 தினத்தில் ஹிந்து பேப்பரில் ரிஸல்டு பிரசுரிக்கப்படுகிறது

மார்ச்சுமாதம் குலுக்கலுக்கு பணம்பெறக் கடைசீ தேதி 6-3-37.

அதிகாரம் பெற்ற டிஸ்டிரிபியூட்டர்:— Tel: "Rafflesco."

நாகபுூர் ஆர். ஸ்ரீனிவாஸ அய்யர்,

6, பின்னையார் கோவில் தெரு, கும்பகோணம்.



கீழ்த்தேச பண்டிதர்கள் மகாநாடு மகாமகோபாத்தியாய கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

டாகவேண்டும். படை திரட்டும் வேலையை எவ்வளவு துரிதமாக நடத்தக்கூடுமென சோதித்தறிவதே இதன் நோக்கம். அந்தப் பத்து லக்ஷம் பேர்களது ராணுவ சேவை இப்பொழுது தேவையில்லையாயின் அவர்கள் உடனேயே திருப்பி யனுப்பப்படுவர்.

ராணுவ நிலைமையைப்பற்றி ஆலோசிக்கும் பொருட்டு பிரதம பாஸிஸ்ட் சபை மார்ச் மாதம் 1-ந் தேதி கூடும். பொதுவாக எல்லா யுத்த தளவாடங்களையும் முக்கியமாக விமான தளவாடங்களையும் பெருக்குவதென அச்சபை முடிவுசெய்யுமென்றுதெரிகிறது

* * * *

### எதியோபிய யுத்தப்படக் காட்சியைக் கண்டு இத்தாலியர் ஆத்திரம்

எதியோபிய யுத்தத்தைப் பற்றிய படக்காக்ஷியொன்று ஷாங்ஹாயிலுள்ள ஒரு சீனர் ஸினிமாவில் காட்டப்பட்டு வந்தது. இக்காக்ஷி ரஷ்யரால் தயாரிக்கப்பட்டதாகும்.

“லிபான்டோ” என்ற யுத்தக் கப்பலைச் சேர்ந்த இத்தாலிய அதிகாரிகளும், மாலுமிகளும், அந்த ஸினிமாவுக்குள் பலாத்காரமாக நுழைந்து அங்கிருந்த ரஷ்ய அதிகாரிகளைத் தாக்கி ஸினிமா இயந்திரத்தை நாசம் செய்ததுடன் அப்படக்காக்ஷிச் சுருளை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

மேலும் அந்த ஸினிமாக் கொட்டகையிலிருந்த ஐம்பது இத்தாலியர் அக்காக்ஷியைக் கண்டிக்கும் முறையில் ஆர்ப்பாட்டம் செய்து “முஸோலினி வாழ்க” எனக் கோஷித்தனர்.

பிறகு அவர்கள் அக்கொட்டகைக்கு வெளியே பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின் மோட்டார்களிலேறிச் சென்றார்கள்.

காயமடைந்த ரஷ்ய அதிகாரிகள் ஆஸ்பத்திரிக்குக்

### பிரிட்டன்- இத்தாலி ஒப்பந்தம்

இரு குடியேற்ற நாட்டுப் பிரச்னைகளைக் குறித்துப் பிரிட்டனுக்கும் இத்தாலிக்கும் ஒரு நேச ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக இத்தாலிய சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

இதன்படி, பிரிட்டிஷ் சோமாலிலந்திலுள்ளவர்கள் ஒகாடன் பிரதேசத்தை மேய்ச்சல் தரையாக உபயோகிப்பதை அனுமதிக்க இத்தாலியர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் ஸோமாலிலந்திலுள்ள ஸெய்லா பெர்பரா துறைமுகங்கள் மூலம் இத்தாலியப் போக்குவரத்துச் சாதனங்களை அபிவிருத்தி செய்துகொள்ளப் பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள்.

* * * *

### அட்டூழியம் செய்தவருடன் கைகுலுக்குவதா?

இங்கிலாந்து, பாத் என்ற விடத்தில் அபிஸீனிய சங்கத்தார் அபிஸீனிய மன்னருக்கு ஒரு உபசாரம் நடத்தி வைத்தார்கள். அப்பொழுது மன்னர் பின்வருமாறு பேசினார்:— நான் நியாயம் வேண்டுகிறேன். சமீபத்தில் நடந்த ஈடு இணையற்ற அட்டூழியத்தைப்பற்றிய ஞாபகம் ஒருவிதமாக மறைந்தொழிய எல்லா வழிகளிலும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அட்டூழியம் புரிந்தோருடன் கைகுலுக்கி நேசம் பாராட்ட அனைவரும் ஆவலுடன் முன் வந்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இந்நகர வாஸிகள் மற்றவர் என்ன செய்யினும் தாங்கள் நியாயக் கட்சியை ஆதரித்து நிற்பதை நிரூபிப்பதற்காக இங்கு கூடியிருக்கின்றனர். உங்கள் தைரியத்தை நான் மெச்சுகிறேன்.

* * * *

### மிஸஸ் ஸிம்ஸனுக்கு நகைகள்

வின்ஸர் கோமகன் மிஸஸ் ஸிம்ஸனுக்குக் கொடுப்பதற்காக 2,00,000 பவுன் பெறுமானமுள்ள நகைகளுக்கு ஆர்டர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

* * * *

### மோட்டார் தொழிற்சாலை சத்தியாக்கிரகம்

செவ்ரலட் (ஜெனரல் மோட்டார்ஸ்) தொழிற்சாலையைச் சேர்ந்த 70 தொழிலாளர்கள் தொழிற்சாலையை விட்டு வெளியேற மறுத்து வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்கள் பால் அனுதாபம் காட்டும் முறையில் ஜெனரல் மோட்டார்ஸ் தொழிற்சாலையைச் சேர்ந்த 1600 தொழிலாளர் அதே முறையில் வேலை நிறுத்தம் துவக்கியிருக்கின்றனர்.

* * * *

### இத்தாலிய வைஸ்ராய் மீது வெடிகுண்டு வீச்சு

அடிஸ் அபாபா தெருவொன்றில் இத்தாலியக் கிழக்காப்பிரிக்கா வைஸ்ராயான மார்ஷல் கிரேஸியானிமீது ஒரு அபிஸீனியர் வெடிகுண்டு வீசினார். இதன் பலனாக மார்ஷல் கிரேஸியானிக்குச் சொற்பக் காயமேற்பட்டிருக்கிறது. இது பற்றி இத்தாலிய சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதில் கூறியிருப்பதாவது:—

“மார்ஷல் கிரேஸியானி சர்ச்சுகள், மசூதிகள் முன் ஏழைகளுக்குத் தானங்கள் வழங்கிக்கொண்டிருந்தார். இத்தாலியர் மீது துவேஷங் கொண்ட பல அபிஸீனியர் அவ்வேழைகள் கூட்டத்தில் கலந்திருந்தனர். திடீரென அவ்வபிஸீனியர் பல வெடிகுண்டுகளை வீசவே மார்ஷல கிரேஸியானிக்குச் சொற்ப காயமும் அவருடனிருந்த ஜெனரல் லியோட்டாவுக்குப் பலத்த காயமும் ஏற்பட்டது. அக்கூட்டத்திலிருந்த பல எதியோபியர்களும் காயமடைந்தார்கள்.

இந்த வெடிகுண்டு வீச்சில் காயமடைந்த ஜெனரல் லியோடாவின் கால் சேதிக்கப்பட்டு விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. 30,000 இத்தாலியத் துருப்புகள் அடிஸ் அபாபாவைக் காத்து வருகின்றனவாம். போலீஸார் 2,000 பேர்களைக் கைது செய்திருக்கின்றனர்.

* * * *

### “இன்னொரு யுத்தம் ஏற்படுமாயின்...”

ஹெர் ஹிட்லர் நாஜி ஸோல்ஜர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

“சென்ற யுத்தங் காரணமாக ஜெர்மன் மக்களுக்கேற்பட்டிருந்த மனக்காங்கலனைத்தும் தற்பொழுது மறைந்துவிட்டது. இப்பொழுது அவர்கள் முன்னர் தங்களை எதிர்த்தோர்பால் மிக்க மதிப்பே கொண்டிருக்கிறார்கள்.

இன்னொருயுத்தம் ஏற்படுமாயின் அதனால் எல்லாத் தேசங்களுக்கும் பெருந்துன்பம் விளையும். உள் நாட்டில் சமாதானத்திற்குப் பாதகம் விளையுமாயின் அதனால் நமது நிர்மாண வேலை தடைபடும். ஆனால் வெளியுலகில் சமாதானத்திற்கு ஆபத்தேற்படுமானால், ஜெர்மனி தனது பழைய நிலையை எய்துவதற்காக நடத்திவரும் தீவிர முயற்சிகளனைத்தும் குலைந்துவிடும்”

* * * *


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

சித்தவைத்திய ஆசான்,

60 வருட அனுபவ ரகசிய கைமுறைகள் அடங்கியது வைத்தியர் உதவியின்றி குழந்தைகள் வியாதி ஆண் பெண் இரகசிய வியாதிகள் இவற்றை நீக்கிக் கொள்ளலாம் 3 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறவும்.



ஹாஸ்யப்பகுதி



கிருஷ்ணசாமி, ''அம்மா, அவள் கன்னம் நன்ருய் வீங்கியிருக்கிறது பார்!'' என்ருன்.

# கனகத்திற்கு நேர்ந்த ஆபத்து!

(சிநாபதி எழுதியது.)

கனகவல்லிக்குச் சிறு வயது முதலே சிற்றுண்டிகளின் ஆசை அதிகமாயிருந்து வந்தது. வயது பதினெட்டாகியும் இச்சபலம் அவளை விட்டபாடில்லை. சதா சர்வகாலமும் ஏதாவது தின்பண்டங்களை வாயில்போட்டு மெஷின் அறைப்பதுபோல் அசை போட்டுக்கொண்டேயிருப்பாள். தின்பண்டம் எதுவாயினும் சரி; வெல்லக்கட்டி, கற்கண்டு, முந்திரிப்பருப்பு ஏதாவது ஒன்றை வாயில்போட்டு மென்றுகொண்டேயிருப்பாள்.

கனகவல்லியின் துரதிருஷ்டவசமாய் அவளுக்கு வாய்த்திருந்த மாமியார் சிதையம்மாள் சற்று முன்கோபி. தன் மருமகள் சிறு குழந்தைகளைப் போல் இவ்வாறு எப்பொழுது பார்த்தாலும் தின்பண்டங்களை அசைபோடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. இந்த அற்ப விஷயத்திற்காக கனகவல்லிக்கும் அவளுடைய மாமியாருக்கும் பற்பல தடவைகளில் பெரும் சண்டையும் நடந்ததுண்டு. எவ்வளவு கூறியும் கனகவல்லிமட்டும் தன் துர்க்குணத்தை விட்டபாடில்லை.

ஒருநாள் இரவு பத்து மணியிருக்கும். சமீபிக்கும் ஒரு கல்யாண முகூர்த்தத்தை முன்னிட்டு அன்று பகல் முழுவதும் அப்பளமிட்டுக்கொண்டும், தின்பண்டங்களைத் தயார் செய்துகொண்டுமிருந்த களைப்பால், யாவரும் அயர்ந்து தூங்குகிருர்கள். கனகவல்லியின் கணவன் கிருஷ்ணசாமி, ஓர் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு உரக்கக்குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகிருன்.

திடீரென்று உக்கிராண உள்ளிலிருந்து ''தட தட''வென்று பெரும் ஓசையுண்டாயிற்று. ''ஐயோ திருடன்'' என்ற கூச்சலுடன் சிதையம்மாள் அலறிக்கொண்டு எழுந்திருந்தாள். கூடத்தில் எரிந்துகொண்டிருந்த விளக்கும் அணைந்திருந்தது. எங்கும் ஒரே இருளாயிருந்தது.

கள்வன்தான் வீட்டிற்குள் நுழைந்துவிட்டானே என்று யாவரும் பயந்தார்கள். கிருஷ்ணசாமி படுக்கையிலிருந்து எழுந்து

''அம்மா! அதென்ன சத்தம்? விளக்கெங்கே?'' என்ருன்.

அந்தம்மாள், ''ஐயோ! என்னமோ தெரியவில்லையே. விளக்கைக் காணுமே'' என்று கூறிக்கொண்டே சுவரைப் பிடித்துக்கொண்டே மெதுவாய் நெருப்புப் பெட்டி வைத்திருக்குமிடத்தை நோக்கிச் சென்ருள்.

கிருஷ்ணசாமி, ''கனகம் எங்கே? அவள் குரலே கேட்கவில்லையே! கனகா! கனகா!'' வென்று கூவினர். பதிலில்லை. அச்சத்தால் அவர் உடல் நடுங்கிற்று. இதற்குள் நெருப்புப் பெட்டி அகப்பட்டுவிட்டது. விளக்கை ஏற்றிக்கொண்டு இருவரும் உக்கிராண அறையை நோக்கிச் சென்றனர்.

அறையின் வாசற்படிக்கருகில் கனகவல்லி குப்புற விழுந்து கிடந்தாள். மயக்கமடைந்து பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்த அவளைக் கண்டதும், சிதையம்மாள் அலறிக்கொண்டு அருகில் ஓடி ''கனகா! கனகா!'' வென்று கூப்பிட்டுக்கொண்டே அவளைப் புரட்டினள். பதில் ஒன்றுமேயில்லை. கனகவல்லி கட்டையாய்க் கிடந்தாள்.

கிருஷ்ணசாமி அருகிலிருந்த ஜலத்தை எடுத்துக் கொஞ்சம் அவள் முகத்தில் தெளிக்கவும், கனகவல்லிக்குக் கொஞ்சம் ஸ்மரணையுண்டாயிற்று. சற்றுப் புரண்டாள். மெதுவாய் எழுந்துட்கார்ந்தாள். அவளுடைய கன்னங்களிரண்டும், ஒரு எலுமிச்சங்காயளவிற்குப் புடைத்துக்கொண்டிருந்தன.

கிருஷ்ணசாமி ''அம்மா! அவள் கன்னம் நன்ருய் வீங்கியிருக்கிறது பார்!'' என்ருன். இதைக் கேட்டதும் கனகவல்லி மறுபடி மயக்கமடைந்து கீழே சாயப்போனுள். சிதையம்மாள் பிடித்துக் கொண்டிராவிட்டால் அவள் கீழே விழுந்திருப்பாள். கனகவல்லியின் கண்களில் நீர் பெருகிற்று, வாய் திறவாமல் தேம்பினுள். சிதையம்மாலு அவளைத் தன்மீது சாத்திக் கொண்டு ''எண்டியம்மா கனகம் உனக்கு உடம்பு என்ன செய்கிறது? வாய்திறந்து சொல்லேண்டி'' என்று கெஞ்சினுள். கனகம் பதில் கூருமல் தேம்பினுள். அவளுக்கு அழுகை வரவர அதிகமாயிற்று. கடைசியில் கைஜாடையால் தன்னுல் வாயைத் திறக்க முடியவில்லையென்று தெரிவித்தாள். கிருஷ்ணசாமி மெதுவாய் அவள் வாயைத் திறக்க முயன்ருர். பற்கள் கிட்டிப்போயிருந்தநால் முடியவில்லை.

சிதையம்மாள் கிடந்து துடிக்கிருள். ''அடே கிட்டு! நான் அப்பொழுதே சொன்னேனே கேட்காமலிருந்து விட்டாயே! மங்கிலியப் பொண்டு வைத்துக் கொண்ட பின்பு லக்னப் பத்திரிகை எழுது என்று படித்துப் படித்துச் சொன்னேனே இது வேறு ஒன்றுமில்லை. மங்கிலியப் பெண்களின் குற்றம் தான். இப்பொழுதாவது மங்

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் ''உலக சிரேஷ்டர்'' என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ்செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன்பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R சென்னை.

ரங்கூன்
வைரங்கள்
நகைகள்
கேட்லாக்இறும்
பி. கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

உலகப் பிரசித்தி பெற்ற
ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.




1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
ஏஜன்டுகள் தேவை:—
விலாசம்: ஆர். மூகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

கிலியப் பெண்டுகளின் பேரைச் சொல்லி ஒரு ரூபாயும், ஏழுமலையானுக்கு ஒரு ரூபாயும் முடித்துவை" என்றாள்.

கிருஷ்ணசாமி சரியென்று தலையாட்டினார். ஆனால் கனகவல்லி கீழே வீழ்ந்ததில் தாடை எலும்பு முறிந்து விட்டிருக்கலாம் என்ற சந்தேகமிருந்தது. அதை அவளிடம் சொன்னால் பயந்து விடுவாள் என்று மௌனமாயிருந்தார். சீதையம்மாள் ஊரிலிருந்த தெய்வங்களுக்கெல்லாம் வேண்டிக்கொண்டாள். அம்மன் பெயரைச் சொல்லி குங்குமம் வைத்தாள். கனகவல்லி ஒன்றிற்கும் வாய் திறக்கவேயில்லை. டாக்டரை அழைத்து வரலாம் என்றாலோ சுமார் நான்கு மைலாவது போக வேண்டும். நடுநிசியில் அவ்வளவு தூரம் தனியே எப்படிப் போவது என்று கிருஷ்ணசாமி தயங்கினார்.

திடீரென்று சீதையம்மாள் "அடே கிட்டு! ஓடிப்போய் கோடிவீட்டுச் சுப்பிப்பாட்டியை அழைத்து வாடா. அந்தம்மாள், சுளுக்கு, பூட்டுப் பிசகு, தெய்வக் குற்றம் எல்லாவற்றிற்கும் மந்திரிப்பாள். போ சீக்கிரம். போய் நடந்ததைச் சொல்லிக் கையோடு அழைத்துவா" என்றாள்.

கிருஷ்ணசாமிக்கு மந்திரங்களில் அவ்வளவு நம்பிக்கையில்லாவிட்டாலும், தாயார் செய்த தொந்திரவால் விளக்கை யெடுத்துக்கொண்டு சுப்புப்பாட்டி வீட்டை நோக்கிச் சென்றார். நன்றாய் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த சுப்பிப்பாட்டியும் எழுப்பி அழைத்து வரப்பட்டாள்.

பாட்டியம்மாள் இயற்கையில் நல்ல குணம் வாய்ந்தவள். கனகத்தின்மீது வாஞ்சையுடையவள். அவளுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைக் கேட்டதும் ஓட்டமாய் ஓடிவந்தாள். கனகவல்லிக்குப் பாட்டியைக் கண்டதும் அழுகை அதிகமாயிற்று. சீதையம்மாள் யாவற்றையும் அவளுக்கு விளங்கக் கூறினாள். பாட்டி மெதுவாய்ச் சென்று கனகத்தின் கன்னத்தைத் தொட்டுப்பார்த்தாள். உடனே பாட்டிக்கு விஷயம் விளங்கிவிட்டது.

அவள் புன்சிரிப்புடன் "சீதா! நீ ஒன்றுக்கும் பயப்படாதே! இந்த வீக்கத்தை அரைமணியில் குணமாக்கிவிடுகிறேன். கொஞ்சம் வேப்பிலை கொண்டு வரச்சொல். ஒரு கூஜாவில் கொஞ்சம் ஜலம் வைத்துவிட்டு நீ சற்று தூரச் சென்று உட்கார்ந்து கொண்டிரு" என்றாள். கிருஷ்ணசாமி புழக்கடைக்குச் சென்று ஒரு கொத்து வேப்பிலையைக் கொண்டு வந்து வைத்துவிட்டு தூரத்தில் போய் உட்கார்ந்தார்.

சுப்பிப்பாட்டி மந்திரம் செய்ய ஆரம்பித்தாள். அவளுடைய முணமுணப்பு கனகத்திற்கு மட்டும் நன்றாய்க் கேட்டதேயொழிய இவர்களுடைய செவியில் படவில்லை. ஆனால் அடிக்கொரு தடவை "வலிதீரும், வலிதீரும்" என்று உரத்த குரலில் கூறியது மட்டும் கேட்டது. சீதையம்மாள் கடவுளைத் துதித்துக் கொண்டும், பாட்டியின் மந்திரத்தை மெச்சிக் கொண்டும் உட்கார்ந்திருந்தாள். கிருஷ்ணசாமியோ "இது மந்திரமுமில்லை. மாயமுமில்லை ஹிப்னடிக் வைத்யம்," என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

அரைமணி நேரமானதும் பாட்டி, "அம்மா கனகம்! கொஞ்சம் வாய்திற!" என்றாள். கனகம் மெதுவாய் வாயைத் திறந்தாள். பாட்டியம்மாள் டம்ளரிலிருந்த ஜலத்தில் கொஞ்சம் அவள் வாயிலூற்றினாள். கனகம் கொஞ்சங் கொஞ்சமாய் அதைக் குடித்தும், சுப்பிப்பாட்டி "கனகா! இனிமேல் உடம்பு ஒன்றுமிருக்காது. இதை முழுவதும் குடித்துவிடு" என்று சொல்லி டம்ளர் ஜலத்தை அவளிடம் கொடுத்தாள். கனகம் மடமடவென்று குடித்துவிட்டு எழுந்து நின்றாள்.

என்ன ஆச்சரியம்! கனகத்தின் வீக்கம் சற்றேனும் காணப்படவில்லை. நடந்த சங்கதி என்னவென்று கேட்க, கனகம் தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும் படுக்கையிலிருந்த தான் உக்கிராண உள்ளிற்கு எப்படி வந்தோம் என்று புரியவில்லையென்றும் கூறினாள். சீதையம்மாள் அது தெய்வக்குற்றமென்றாள். கிருஷ்ணசாமி "ஹிஸ்டிரியா ஸாம்நாம்புலிஸம்" என்றான்.

பாட்டியினுடைய மந்திர விசேஷம் கனகத்தின் வீக்கத்தைக் குணமாக்கியதுமன்றி, சிற்றுண்டிச் சபலத்தையும் பிறர் அறியாமல் தின்பண்டங்களை அசைபோடும் வழக்கத்தையும் நிறுத்திவிட்டது.

மறு நாள், முகூர்த்தத்திற்கென்று செய்து வைத்திருந்த லாடு உருண்டைகளில் இரண்டைக் காணவில்லையென்று சீதையம்மாள் சொல்லிக் கொண்டாள். ஆனாலும் "செத்துப் பிழைத்த கனகத்தை" அதைப்பற்றிக் கேட்க அவள் விரும்பவில்லை.

பாட்டியின் மந்திரம் என்னவென்றறிய ஆவலாயிருப்பார்களாதலால், அதையும் கூறிவிடுவோம். சுப்புப் பாட்டி கூறிய மந்திரம்,

"மாயக்காரி
மருமகளே
வாயிலிருக்கும்
லாடுருண்டை
மென்று விழுங்கினால்
வலி தீரும்! வலிதீரும்!
வலிதீரும்!!
வித்தைக் கள்ளி
மருமகளே
வாயிலிருக்கும்
லாடுருண்டை
மென்று விழுங்கி விடு
வலி தீரும்!
வலிதீரும்!! வலிதீரும்!!

என்பதுதான்.


## நரை போக்கும் தைலம்

நரையை ஒழியுங்கள், இந்தத் தைலம் மயிரின் வெண்மையைப் போக்கி, நல்ல கருமையைத் தரும்; ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். ஏராளமான நற்சாட்சிகள் இருக்கின்றன. சொற்ப நரைக்கு வேண்டிய அளவு தைலம ரூ. 3. பாதி நரைக்கு ரூ. 5; அதிகமாக இருந்தால் ரூ. 9. பலனளிக்கத் தவறினால் இரட்டிப்புக் கிரயம் திருப்பிக் கொடுக்கப்படும். ஆங்கிலத்திலேயே கடிதமெழுதவும்.

BALA KALA STORES,
P. O. Kansisinri (Dharbanga.



# இன்றைய ஜலதோஷம்
## நாளை நியுமோனியாவாகலாம்



ஜலதோஷம் தானே என்று அலட்சியமாக விராதீர்கள். அது நிமோனியாவாக மாறிவிடலாம். துடிமலின் போதே மிஸ்டலை உபயோகிக்கவும்.

மிஸ்டல் ஜலதோஷத்தைத் தடுத்து, சுவாச கஷ்டத்தை அகற்றுகிறது. இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்கிக்கொள்.





**Mistol**

REG TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளிவிடுகிறது





## ஈறுகள் கெட விடாதீர்கள்

ஈறுகளைச் சுத்தம்செய்யாமல பற்களை மாத்திரம சுத்தப்படுத்தும பல்பசை பாதி வேலையைத்தான் செய்கிறது என்னின் பற்கள், ஈறுகள் இரண்டுமேதான் பாதுகாக்கப்பட வேண்டு; அவற்றிற்குப் போஷாக்கும வலுவு மூட்டப்பட வேண்டும். ஈறுகள் சரியாக இராவிடில், பற்களும சரியாக இரா. "நீம டூத் பேஸ்ட்" பற்களையும், வாயையும் நன்கு சுத்தகரிப்பதுடன், ஈறுகளையும கெட்டிப்படுத்துகிறது ஈறுகளிலிருந்து இரத்தம் வருவதை நிச்சயமாக நிறுத்துகிறது. பழங்காலத்தில் நம்முன்னோர்கள் வேப்பங்குச்சியை உபயோகித்தே அற்புதமான பற்களைப் பெற்று வந்தனர்; "நீம டூத் பேஸ்ட்" அத்தனையும் இதன் சக்தித் தான. இன்றே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்கத் தொடங்குங்கள்.



**'Neem' TOOTH-PASTE**

பவுடர் வேண்டுமாயின் "மார்கோ'ரிஸ் நீம் டூத் பவுடர்" உபயோகியுங்கள். கல்கத்தா கெமிகல்

# இது என்ன தோற்றம்?

"பீமகுமாரி"

சபிதாதேவி என்னும் நான் அநேகமாக இம்மானிட உலகில் பாமர ஜனத்திரளின் மத்தியில் சம்சாரக் கடலில் கடந்துசென்ற ஓர் உயிர்ச் சவமேயாம்.

"குர்ரம்" என்னும் ஓர் சிறு கிராமத்தில், ஆங்கில வைத்தியராகிய ராமேசம் என்பவர் வெளிப்பகட்டில், ஓர்காங்கிரஸ் தேசியவாதியாயும், பொது ஜனத் தலைவராகவும் விளங்கினர். ஜாதி வித்யாசம் கிடையாதென்றும், கலப்பு விவாகத்தில் யாதொரு கெடுதலும் கிடையாதென்றும், பாலிய விதவைகள் கட்டாயம் மறுமணம் புரிய ஹிந்து சமூகம் இடம் தரவேண்டுமென்றும், பலவிதமாகப் பிரசங்கிப்பார். அவரது அருந்தவப் புதல்வியே நான். அப்பொழுது எனக்கு பதினறு வயது இருக்கலாம்.

ஓர் தினம்; இனிமையான அந்தி சூரியன் தன் பொன்னிறமான கிரணங்களுடன் பிரகாசித்தான். எனது தந்தை என்னை அழைத்துக்கொண்டு வயல்களைப் பார்வையிடப் புறப்பட்டார்.

ஓர் இடத்தில் சற்று நின்ருேம்! அவ்விடத்தில் மத்திய வயதுடைய தம்பதிகள் இருவர் வேலை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் தாழ்ந்த வகுப்பினர். அவர்கள் அருகில் தேவருலகிலிருந்து சபிக்கப்பட்ட ஓர் கந்தர்வனை போன்ற, முகப்பொலிவையும், தேஜஸ்லையும் கொண்ட அவர்களது அருமைக் குமாரன் நின்றிருந்தான். நான் மிகுந்த வியப்புடன் அவனை நோக்கினேன். அவனும் என்னை நோக்கினன். அவ்வளவே; நான் திரும்பி 'அப்பா' என்றேன்.

'அம்மணி' என்ருர் என் தந்தை.

"இச்சிறுவன் எத்துணை அழகாக இருக்கின்ருன்?" என்றேன் நான். "ஆம்! மிகவும் அழகாக இருக்கிருன்" என்ருர் என் தந்தை. பிறகு ஓர் பெருமூச்சு விட்டுக் கனிவுடன் நோக்கினர் சிறுவனை.

நான் சிறிது துணிவடைந்தேன். என் தந்தையை நோக்கி, இரைஞ்சும் குரலில், "அப்பா இந்த ஏழ்மைச் சிறுவனை நாம் நம் வீட்டிற்கு அழைத்துச் செல்வோமே? இவனுக்கு நாம் கல்வி புகட்டினல் அது பிரகாசித்து இவன் ஒரு காலத்தில் நல்நிலைமைக்கு வரக்கூடுமல்லவா?' என்றேன்.

தந்தை இளநகையுடன், "போ! அசடே; இவன் தாழ்ந்தவகுப்பினன் அன்ருே?" என்ருர்.

* * * *

மறுதினமே அத்தம்பதிகளும் அப்பாலனும் கிராமத்தை விட்டகன்றனர் என்ற விஷயம் அறிந்தேன். அவ்விஷயம் என் மனதிற்கு ஓர் பேரிடி போலாயிற்று. அதிலிருந்தே நான் ஓர்நடைப்பிணமானேன். ஏதோ காலக்கிரமத்தில் சொற்ப கல்வி கற்ற எங்கள் வகுப்பைச்சேர்ந்த ஓர் வாலிபருக்கு நான் மணம்புரிவிக்கப்பட்டேன். மறுமாதமே என் கணவர் இறந்தார். அத்துயரில் என் தாயும், தந்தையும் ஒருவரையொருவர் பின்பற்றினர். நான், என் தந்தையினுடைய சிறுதனத்தை வைத்துக்கொண்டு மிகுந்த சந்துஷ்டியுடன் காலத்தைக் கடத்திவந்தேன்.

* * * *

பதினைந்து வருடங்கள் கழிந்தன. ஓர் நாள் காலை! சூரியன் கீழ் கடலினின்றும் எழுகிருன். ஆற்றின் கரையில் இயற்கையழகைக் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தேன். எங்கும் நிசப்தம்.

அத்தருணம், 'சபிதா' என்னும் ஓர் இன்னொலி கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன்.

என் பின் கம்பீரமான உருவத்தையும் முகப்பிரகாசத்தையும் உடைய ஓர் சுந்தர புருஷர் நின்றிருந்தார்.

திகைப்படைந்த நான் பேசும் சக்தியையே இழந்து ஊமையானேன்; இவரே நான் பதினைந்து வருஷங்களுக்கு முன் கண்டவர்.

பேச்சற்ற என்னை நோக்கி அவர், "அம்மணீ! என்னை அறியவில்லையோ?" என்ருர்.

அடைத்த தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்ட நான், "அறிந்துகொண்டேன்" என்றேன். பழையகால சிந்தனைகள் எனக்குத் தோன்றவும், கண்களினின்றும் அருவிபோல் நீர் பெருகத் தொடங்கியது.

அவர் எனக்குத் தேறுதல் சொல்வார்போல், "அம்மணீ அழவேண்டாம். தங்களுக்குச் சென்ற கால நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. கடந்ததை எண்ணி வருந்துவதில் யாது பயன்? நிற்க, தாங்களேஎனது வாழ்க்கைக்கு ஊக்கமூட்டிய சஞ்சீவி; குலதெய்வம். நான் தங்களைச் சதாகாலமும் என் ஹ்ருதயக் கோவிலில் வழிபடுகிறேன்; என் அன்பிற் சிறந்த அம்மணீ! கடைசியாக நான் தங்களையும், குர்ரத்தையும் விட்டுப் பிரிந்ததும் ஓர் தர்மபாடசாலையில் கல்வி பயின்று, போதக ஆசிரியர்களால் நன்கு மதிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்று துரைத்தனச் செலவில், மேல் நாடு சென்று படித்துப்பட்டம் பெற்றுத் திரும்பி, இப்பொழுது ஓர் பெரிய பதவியை வகித்து வருகிறேன். தங்களைத் தரிசிப்பதற்குஆவல் உண்டாயிற்று; இக்கிராமம் அடைந்தேன். கிராமவாசிகள் என்னையறியவில்லை. துக்ககரமான தங்கள் சரிதமும் கேள்விப்பட்டேன்". என்று கூறி என்னை வணங்க, நானும் அவரை வணங்கினேன்.

நான், "இப்படிப்பட்ட அபசாரத்திற்கு நான் என்ன செய்தேன்? தாங்கள் சொல்வதும் செய்வதும் என் மனதிற்கு முற்றும் விரோதமன்ருே? தாங்கள் எச்சாதியாயிருந்தாலென்ன? நான் அப்பொழுதே தங்களை என் மனதில் வரித்தேனன்ருே? அப்படி மனதில் தங்களை வரித்து, வெளிக்கு ஒருவரை மணந்தேன்! கற்புள்ளவருக்கு அது ஏற்குமோ? அதன் பாபமே நான் அனுபவிக்க நேர்ந்தது?" என்றேன். அதற்குமேல் என்னுல் பேசமுடியவில்லை.

சுந்தர புருஷரின் கண்களினின்றும் ஆனந்த நீர் கரை புரண்டு வழிந்தோடியது. ஆனல் ஒரு விநாடி நான் கண்மூடினேன். மறு நிமிஷம் அவரைக் காணவில்லை. இது என்ன தோற்றம்!

* * * *


## முத்துக்குளியல்

சில வருஷங்களுக்கு ஒரு :முறை தென் சமுத்திரத்தில் முத்துக்குளித்து, சிப்பிகளை சிறு பொட்டணங்களாக்கி, ஒரே சராசரி விலையில் விற்பதுண்டு. அவற்றை வாங்கும் அதிர்ஷ்டமுள்ள சிலருக்கு மாத்திரமே முத்துக்கள் கிடைக்கின்றன.

அவ்வண்ணமே, காப்பிக்கொட்டைக்கு பச்சைச் சாயமேற்றி விற்கும் இக்காலத்தில், நீங்கள் கடையில் காப்பி வாங்கும் சமயத்தில் உங்கள் விதிப்படி நல்ல காப்பியோ அல்லது வெளிப்பகட்டான காசுக்கு உதவாத மட்டச் சரக்கோ கிடைக்கலாம். ஆனல் **ஸ்டேன்ஸ் கம்பெனி**யில் 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் பிடிக்கப்பட்டு முகவாயில் ஈய முத்திரை தரிக்கப்பட்ட அசல் நீலகிரிக் காப்பியை வாங்குவீர்களேயானல், உங்கள் பணத்துக்குத்தக்க பொருள் பெறுவீர்கள். துர் அதிர்ஷ்டம் என்பதே கிடையாது; போட்டி சரக்குகளும் துணிப்பைகளில் விற்பனை செய்யப்படுவதால்,

ஸ்டேன்ஸ்

என்று கேட்கவும்.






### மாதவிடாய் கோளாறுகள்

அவைகளே பெண்மலட்டிற்கும் காரணம்

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரியைவிட சிறந்த ஔஷதம் வேறில்லை. இது மாதவிடாயைச் சிரமப்படுத்தி, அதிகமாகப் போவதைத் தடுத்து, சூதக பந்தத்தை உடைத்து மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்கி, மலட்டுப்பூச்சிகளைக் கொன்று சந்தான பாக்யத்தை யளிக்கிறது. டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். பத்தியமில்லை. விலை ரூ 5. பாக்கிங் & தபால் செலவு வேறு.


**வேலன்ஸ் மெடிகல் ஹால்,**
காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

# நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி





விட்டோ முஸோலினியும் ஸெஞேரிடா டி. ஸோவும். இவர்களது விவாகம் சமீபத்தில் நடைபெற்றது. (வலது பக்கம்) வின்ஸர் கோமகனும் அவரது சகோதரியும் கணவரும். வின்ஸர் கோமகன் பட்டம் துறந்த பிறகு அரச குடும்பத்தினருள் இவர்கள்தான் முதன் முதலாக இவரைப் பார்க்க வந்தவர்கள்.




ஸ்ரீமான் எஸ். வி. ராமசாமி முதலியார் திருவாங்கூர் மஹாராஜாவிற்கு ஒரு உபசரிப்பு நடத்தினர். (வலது பக்கம்) ஸ்ரீ காசி மடத்து ஸ்ரீமத் சுகசேந்திர தீர்த்த ஸ்வாமி சென்னைக்கு விஜயம் செய்தபோது ஜஸ்டிஸ் கே. பி. லக்ஷ்மணராவ் முதலியோரால் வரவேற்கப்பட்டார்.



புதிய டில்லி கர்னாடக சங்கீத சபையின் அங்கத்தினர்களும் அதில் படிக்கும் மாணக்கர்களும் சபையின் தலைவர் ஸ்ரீமான் டி. எஸ். சங்கர அய்யர் தலைமையில் ஸ்ரீ தியாக பிரும்ம தினத்தைக் கொண்டாடினர்.



# நவ நாகரீகம்

## உப்பு

(காசினி எழுதியது.)

*. * * சில நாட்களுக்கு முன் நாங்கள் எல்லாருமாக லேடி சின்னையாவின் வீட்டு வாசல் வராந்தாவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது லேடி சின்னையாவின் பேத்தி, சற்று முன்பு தனக்கு வேண்டாம் என்று கோபத்துடன் வைத்துவிட்டுப் போன சாக்லெட்டைத் தனக்குத் தரும்படித் தன் பாட்டியைக் கேட்டாள். ஸர் சின்னையாவின் மகன் டவுனுக்குப் போயிருந்தவன் கொஞ்சம் சாகலெட் வாங்கி வந்திருந்தான். லேடி சின்னையா அதை எல்லாருக்கும் பங்கு போட்டுக் கொடுத்தாள். 'மாமா எனக்காகத் தான் சாகலெட் வாங்கி வந்தார். எல்லாரையும்விட எனக்கு அதிகம் கொடுக்க வேண்டும்' என்று அவளுடன் சண்டை போட்ட பேத்தி தன் காரியம் பலிக்காததைக் கண்டு, கோபத்துடன் தன் பங்கைக் கீழே வைத்துவிட்டுப் போய்விட்டாள். 'என் அம்மா, அவளுக்குக் கொஞ்சம் கூடத்தான் கொடுக்கிறது தானே? என்றான் ஸர் சின்னையாவின் மகன்.

'அது என்ன பிடிவாதம்? மருமாளுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுக்காதே! வேண்டாட்டால் போகட்டும்,' என்றாள் அவனுடைய தங்கை.

'எல்லாம் தானே திரும்பி வருவாள்' என்று அனுபவத்தினால் ஏற்பட்ட ஞானத்தின் உதவியினால், பாட்டியான லேடி சின்னையா ஜோஸியம் சொன்னாள்.

மற்றைய விஷயங்களைப் பற்றி நாங்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பதற்குள், குழந்தை மறுபடி வந்து, தன் பங்கு சாக்லெட்டைக் கொடுக்கும்படிக் கேட்டாள்.

'உனக்குச் சொரணை கிடையாதா? உப்புப் போட்டுச் சாப்பிடவில்லையா?' என்று குழந்தையின் தாயார் கேட்டாள்.

'எதாவது அவளைக் கோபித்துக் கொள்ளுவதுதான் உனக்குத் தொழில்—' என்று அவள் அண்ணன் ஆரம்பிக்கவே, இவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்படப் போகிறதே என்று, பேச்சை மாற்றுவதற்காக, உப்புப் போட்டுச் சாப்பிட்டால் ரோசம் உண்டாகும் என்ற வசனம் எதற்காக வந்ததோ? உப்புப் போட்டுச் சமயல் செய்வதே உடம்புக்கு அவ்வளவு நல்லதில்லை என்று கூறுகிறார்கள் இல்லையா?' என்றாள் லேடி சின்னையா.


'நம்முடைய முன்னோர்கள் ஆராய்ந்து பார்க்காமல் ஒன்றும் ஒரு வசனம் ஏற்படுத்தி இருக்கமாட்டார்கள். உப்புச் சாப்பிடுவதினால் ரோச



**எப்பொழுதும் அழகுடனிருக்கிறேன்.**

இந்த டாகேட் & ராம்ஸ்டேல் அழகுச் சரக்குகளை உபயோகிப்பதால்

இபபுதிய, அழகு டாகெட் & ராம்ஸ்டெல் சரக்குகள் டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் பிரசித்தி பெற்ற க்ரீம்களின் உயர் ரகத்துடன் கூடியவை. மேலான முகப்பவுடர் மிருதுத் தன்மையில் இணையற்றது.........பல மணிகளுக்கு இது விடாமல் பிடித்துக்கொள்கிறது; இதை உபயோகிப்பவர்களுக்கு பேரழகு ஊட்டுகிறது. உங்கள் சருமத்தின் இயற்கை அழகைப் பெருக்குகிறது. சிறந்த லிப்ஸ்டிக் உங்கள் உதடுகளின் நிறத்தை அதிகரிக்கிறது; அவைகளுக்கு மிருதுத்தன்மையும் தருகிறது. சிறந்த கண்ஷாடோ & சிறந்த ஐப்ரோ பென்சிலும் உங்கள் கண்களின் அழகைப் பெருக்கும். இந்த டாகெட் & ராம்ஸ்டெல் சரக்குகளால் நீங்கள் புதிய தேஜஸைப் பெறுவீர்கள்.






திருவாங்கூர் மகாராஜாவுக்கும் மகாராணிக்கும் சென்னை கார்ப்பொரேஷன் ஒரு உபசாரப் பத்திரம்

மாக இருப்பார்கள் என்றால், அதற்கு நல்ல காரணம் இருக்கத்தான் செய்யும். இனிமேல், இதில் யாராவது ஆராய்ச்சி செய்து, உப்பு இரத்தத்துடன் கலப்பதினால், மூளையில் ஒரு நரம்பை வலிவுபடுத்துகிறது; அதனால் ரோசம் ஏற்படுகிறது என்று சொல்ல வேண்டும். உடனே எல்லாரும் அதை வேத வாக்காக நம்பி விடுவீர்கள். அதுவரையில் முன்னோர் வசனம் அர்த்தமில்லாத வார்த்தையாகத்தான் உங்களுக்குத் தோன்றும். உங்களைச் சொல்லுவதில் பிரயோசனம் என்ன? காலம் என்றாள் என்னுடைய அத்தை.

'என் அத்தை, இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்கள்? நம் முன்னோர்கள் செய்தது எல்லாமே தவறு அல்லது சரி என்று யாரும் சொல்லவில்லையே? சரியான காரணத்தினாலேயே வசனங்கள் எல்லாம் ஏற்படுகின்றன என்று சொல்லிவிட முடியுமா?' என்று நான் கேட்டேன்.

'அத்தைக்கு அடிப்பது சுக்கிர தசை; உங்களுக்கு எல்லாம் சூரியதசை என்று எண்ணுகிறேன்', என்று ஸர் சின்னையாவின் மகன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

'ஏன் இப்படித் தோன்ற வேண்டும்?'

'சூரிய தசையில் வாழ்ந்தாரும் இல்லை; சுக்கிரதசையில் கெட்டாரும் இல்லை; என்ற வசனம் கேட்டதில்லையா? இதுவரையில் இரண்டு விஷயங்களில் அத்தைபக்கமேஜெயம்; இப்பொழுதும் அப்படியே என்று எண்ணுகிறேன்'' என்றான்.

'ஏனோ?' என்றாள் அவன் தங்கை.

காரணமில்லாத ஆயாசம், சுறுசுறுப்பில்லாமல்இருப்பது, ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டால் அதிசீக்கிரத்திலேயே களை ஏற்படுவது, இரவு நன்றாகத் தூங்கி இருந்த போதிலும், காலையில் சோர்வு, அல்ப விஷயங்களுக்கும் கோபம் முதலியவைகளுக்கு எல்லாம், வேறு நோய் நொடி இல்லாதபொழுது, வேண்டிய அளவு உப்பு உடம்பில் சேராததே காரணம் என்று கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதில் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் உப்பை உணவிலிருந்து நிறுத்திவிட்டால், அதிகமான ஓய்வும், களையும் ஏற்படுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்களாம்!' என்றான்.

ஆனால், அதிக உப்புச் சாப்பிட்டால் இதெல்லாம் சரிப்பட்டுப் போகுமா? இதற்கும், ரோசத்துக்கும் என்ன சம்பந்தம்?

'நல்ல ஆரோக்கிய நிலையில் தேகம் இருந்தால்தானே ரோசம் சட்டென்று உண்டாகும்? ஆமாம்; அதிக உப்பைச் சேர்த்துக் கொள்ளுவதினால், நாலைந்து தினங்களுக்குள்ளேயே, நல்ல தேக சௌககியம் ஏற்படுகிறதாம். வேலை செய்வதினால் உண்டாகும் படபடப்பு, மூச்சு வாங்கல் எல்லாம்கூட உப்புக் குறைவினால் ஏற்படுமாம். அதாவது, வேறு வியாதிகள் ஒன்றும் இருக்கக்கூடாது. ரத்தத்தில் உப்புக் குறைவினால் ஏற்படும் இவ்வித ஆயாசங்களுக்கு தினம் கொஞ்சம் உப்பை அதிகம் சேர்த்துக் கொள்ளுவதே மருந்து. இவ்விதம் செய்தால் முதலில் உடம்புகூடக் கொஞ்சம் புஷ்டியாகுமாம். உப்பைக் குறைத்து விட்டால்; பழையபடி ஆயாசம் ஏற்படுமாம்,' என்றான்.

'தினம் எவ்வளவு உப்பு அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டுமாம்?' என்றாள் லேடி சின்னையா.

'ஒரு, டீஸ்பூன் உப்பு அட, அனர்த்தமே!' என்றான் அவளுடைய மகன்.

'என்ன வந்தது அனர்த்தம் இப்போ?' என்று எல்லாருமாகக் கேட்டோம்.

'யாருடன் பேசுகிறோம் என்பதை மறந்து விட்டேன். அத்தை சொன்னதும், இது விஷயமாக ஒரு தினசரிப் பத்திரிகையில் படித்ததும் ஞாபகம் வரவே சொல்லிவிட்டேன்!' என்றான்.

'அதனால் என்ன? எனக்குக்கூட ஒரு வாரமாக உடம்பு எப்படியோ இருக்கு? உப்பு அதிகம் வேண்டுமோ என்னமோ' என்றாள் அவன் தங்கை.

'இதுதான் அனர்த்தம், அம்மா, எனக்கு உடம்பு நன்றாகத்தான் இருக்கிறது. வேண்டுமானால், அவர், அவர்கள் கலத்தில் வேறாக உப்பைப் போட்டுக் கொள்ளுங்கள். எல்லாருக்கும் நல்லது என்று சமயலில் மூன்று உப்பைக் கொட்டி தயவு செய்து நாசம் பண்ணாமல் இருங்கள். என் புத்தியைச் செருப்பால்தான் அடிக்கவேண்டும். நான் இனிமேல் ஒருமாதத்துக்கு ஹோட்டலில்தான் சாப்பிடப்போகிறேன்' என்றான்.

'எனக்கு அப்போவே தெரியுமே; பெரியவா வாக்கு வீண் போகாது என்று. இனி மேல் வீட்டிற்கு யாராவது வந்தால், எலுமிச்சம்பழ ரஸப் பானம் செய்து கொடுக் [illegible] களே, அதில் கொஞ்ச [illegible] உப்பை அள்ளிப் போட்டுக் களை தீரும் பானம் என்று கொடுங்கள், ஒருவர் செய்யுங்கள், போரும்; அது உடனே ஒரு நவநாகரீக பானமாக விளங்காவிட்டால் என் பேர்''பாஹீரதி'' இல்லை, என்றாள் அத்தை.

ஆனால், காரணமில்லாத ஆயாசம் முதலியவைகளுக்கு உப்புப் போராததே காரணமாம். தினப்படி ஆகாரத்தில் ஒரு தேய்க்கரண்டி அளவு உப்பைச் சேர்த்துக் கொண்டால், இதெல்லாம் மாயமாய்ப் பறந்து விடுமாம்.


உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்

கர்ப்பத்தைத் தடுக்க சாஸ்திரீயமான இரண்டு திவ்ய ஔஷதங்கள்




கர்ப்ப நிக்ரஹ வடி
(Temporary Birth Contr l)
ஒரு வருடத்திற்குக் கர்ப்பமேற்படாமல் தடுக்கும். 12 மாத்திரைகள் கொண்ட டப்பி ரூ 2—0—0
கர்ப்ப நிவாரணி
( ermanent Birth Control)
இது எப்போதுமே கர்ப்பமுண்டாகாமல் தடுக்கும். 15 மாத்திரைகளும் 8 அவுன்ஸ் பானகமும் அடங்கிய ஸெட் 1-க்கு ரூ. 5—0—0 தான்.
இவைகளை மாதவிடாய் காலத்தில் தான் உபயோகிக்க வேண்டும்.
ஆயுர்வேத பூஷண பண்டிட் K. சுப்ரமணிய சாஸ்திரி, A.K.A.C.
18, கலவ செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]
குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.
குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.
Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD



உபயோகிப்பதற்குமுன் பிடிக்கும் காணாமல் அற்பமாயிருந்த கூந்தல், கேசவர்த்தினி உபயோகித்த பிறகு, அபரிமிதமாய்விட்டதால், இரு கைக்கு அடங்கவில்லை. கூந்தலைக் கருத்து, நீண்டு, செறிந்து வளரச் செய்வது
கேசவர்த்தினி
ஒன்றே
மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி விலை அணா 12.
மேற்செலவு வேறு.
தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயன சாலை,
மயிலாப்பூர், சென்னை.

ஆராய்ச்சி பூர்வமான
நவீன மருந்துகள்
மேத்காஸ் ஜுர மிக்சர்—8 அணா. ஆயிரக்கணக்கானவர்கள் நற்சாட்சி தந்திருக்கின்றனர்; பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆரோக்கிய ஐச்வர்யத்தைப் பெற்று வாழ்கின்றனர்.
கே. எஸ். மேத்தா & கம்பெனி,
பிரபல மருந்து வியாபாரிகள்,
234, சைனா பஜார், மதராஸ்.

சிறுவர் பகுதி

# தவளைக் கன்னிகை

(மயார்வி)

முன்னொரு காலத்தில் அயோத்தியிலே இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த பரீக்ஷித்து என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் குதிரைமீதேறிக் காட்டிற்குவேட்டையாடச் சென்றான். காட்டில் வெகு நேரம் வேட்டையாடிவிட்டுப் பிறகு ஒரு குளத்தினருகில் வந்தான். களைப்பினால் குதிரையினின்று இறங்கி அதைக் கரையிலேயே கட்டித் தீனி போட்டுவிட்டுத் தானும் குளத்திலிறங்கித் தண்ணீர் பருகிக் களைப்பைத் தீர்த்துக் கொண்டான். பிறகு குளக் கரையிலேயே உட்கார்ந்திருந்தான்.

அப்பொழுது அங்கு சங்கீதத்தின் இனிய ஒலி கேட்டது. ஒரு பயங்கரக் காட்டில் இனிய சங்கீதம் கேட்பதைக்கண்டு மன்னன் சிறிது நேரம் யோசனை செய்தான். பிறகு அவன் அதை ஆராய வேண்டுமென்று எண்ணி, சங்கீதம் வந்த திக்கை நோக்கிச் சென்றான். சிறிது தூரம் சென்றபின் அங்கு ஒரு கன்னிகையைக் கண்டான். அரசன் அவளையணுகி, "பெண்ணே! நீ யார்?" என்று கேட்டான்.



அதற்கு அவள், "நான் ஒரு கன்னிகை என்று பதிலளித்தாள்." உடனே அரசன், "என்னை நீ மணந்துகொள்வாயா?" என்று கேட்டான். கன்னிகையும், "என் நிபந்தனைக்கு உட்பட்டால் நான் உமது மனைவியாகிறேன்" என்று கூறினாள். அரசனும் சம்மதிக்கவே கன்னிகையும் "நான் தண்ணீரையே காணக் கூடாது. இதுவே என் நிபந்தனை" என்று சொன்னாள். அரசனும் இந்த நிபந்தனைப்படி நடப்பதாகச் சொன்னான்.

உடனே பரீக்ஷித்து ராஜன் நகருக்குச் சென்று மந்திரி பிரதானிகள் புடை சூழ பல்லக்குடன் காட்டிற்கு வந்து அந்தப் பெண்ணைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு நகரத்துக்குத் திரும்பி வந்தான். மந்திரியும் முன்சொன்ன நிபந்தனையை உணர்ந்து ஒரு அழகிய தோட்டத்தையும் அதன் மத்தியில் ஒரு மாளிகையும் நிர்மாணித்து நீர் நிலைகளைமட்டும் மூடி வைத்தான். அரசனும் கன்னிகையை மணந்துகொண்டு அவளுடன் அந்த மாளிகையில் சுகமாக வசித்து வந்தான்.

ஒரு நாள் அரசனும் அரசியும் நந்தவனத்திலிருக்கையில், அரசனுக்குத் தாகமுண்டாயிற்று. தாக சாந்தி செய்துகொள்வதற்காக அரசன் எழுந்தான் அவனுடன் அரசியும் வர இருவரும் ஒரு கிணற்றருகில் சென்றனர். அரசன் கிணற்றில் இறங்கித் தாகசாந்தி செய்துகொண்டான். அவன்பின் கிணற்றிலிறங்கிய அரசியும் தண்ணீர்ஸ்பர்சம் பட மறைந்துபோனாள். அரசன் எவ்வளவு தேடியும் மனைவியைக் காண முடியவில்லை. பிறகு அரசன் கிணற்றுத் தண்ணீரை இறைக்கச் சொன்னான். அதன்படிச் செய்யவும் அங்கு ஒரு தவளை இருந்தது. அரசன் தவளையைக் கண்டு கோபத்துடன், "எங்கே என் மனைவி?" என்று கேட்டான். அது பதில் சொல்லாதிருக்கவே அரசன் கோபங்கொண்டு ராஜ்யத்திலுள்ள தவளைகளையெல்லாம் கொன்றுவிடும்படி உத்தரவிட்டான்.

தவளைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தவளைகள் அரசனிடம் சென்று



இதைப்பற்றி முறையிட்டன. தவளைகள் அரசன் தவளைகளைச் சமாதானப்படுத்திவிட்டுப் பரீக்ஷித்து அரசனிடம் சென்று, "மன்னனே! குற்றமற்ற தவளைகளைக் கொல்வது தகாது. மன்னிக்க வேண்டும்" என்று வேண்டியது.

அதற்கு அரசன், "இந்தத் தவளைகளே என் காதலியைத் தின்றிருக்க வேண்டும். அவைகளை விட்டேனா?" என்றான்.



இதைக் கேட்டதும் தவளை ராஜன், "மன்னவா! நான்தான் தவளை ராஜன். என் பெயர் ஆயு என்பது. உன் மனைவி தான் என் பெண்ணை சுசோபனை. அவள் உன்னை மோசம் செய்துவிட்டாள். இவ்வாறு அவள் பலரை மோசம் செய்திருக்கிறாள். ஆகையால் நீ வருத்தப்பட வேண்டாம்" என்றான்.

ஆயினும் பரீக்ஷித்து ராஜன், "எப்படியும் அவளை நீ எனக்குத் தர வேண்டும்" என்று பிடிவாதமாகச் சொல்லவே தவளை ராஜனும் தன் பெண்ணை அழைத்து, "பெண்ணே நீ பலரை ஏமாற்றியிருக்கிறாய். இதை மன்னனிடம் சொல்லியும் மன்னன் கேட்கவில்லை. ஆகையால் நீ இவருக்கு மனைவியாகவிருந்து இவருடன் வாழ்ந்து வருவாய். உன் கெட்ட செய்கைகளாலும் அரசனின் பிடிவாதத்தாலும் உங்களுக்குப் பிராமணத் துவேஷிகளான பிள்ளைகள் பிறக்கும்" என்று சொல்லி மறைந்தான்.

சில வருஷங்கள் கழித்து அவர்களுக்கு அதே மாதிரி மூன்று பிள்ளைகள் பிறந்தனர். பின்னர் வாமதேவ முனிவரின் ஆசீர்வாதத்தால் அச்சாபம் நீங்கியது.

கேஸரியின்

மூன்று இரத்தினங்கள்

**லோத்ரா**

கர்ப்பாசய டானிக்

சூதகவலி, சூதகக் கிரமத்தில் தோஷம், அதிக அல்லது குறைந்த இரத்தப் போக்கு, வெள்ளை, வெட்டை, வலி, இழுப்பு, கீல் பிடிப்பு, தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி முதலியவற்றை நிவர்த்திக்கிறது.

**அமிர்தா**

இரத்த சுத்தி டானிக்

இரத்த மின்மை, அஜீரணம், மலச்சிக்கல், மூளை சோர்வு, பலவீனம், ஹ்ருதயத் துடிப்பு, இந்திரிய ஸ்கலிதம், ஞாபகக் குறைவு, இந்திரிய மெலிவு, பார்வை மந்தம், பித்த மயக்கம், ஸ்திரீ சம்பந்தமான ரோகங்கள், சரும வியாதிகள் முதலியவற்றிற்கு.

**அர்க்கா**

சிறந்த ஜுர நிவாரணி

இன்ப்ளுவென்சா, டைபாயிட், மலேரியாமுதலிய எல்லா வகை ஜுரங்களையும் நிவர்த்திப்பது ஈரல் பெருக்கம், வயிற்றுக் குலைக்கட்டியையும் அகற்றுகிறது.

காட்லாக்குக் கெழுதுக

கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.

## MUCH PLEASED

சென்னை (சாம்பியன் ரீப்ஸ்)யிலிருந்து மஸ்டர்......24—9—36உயிட்டு எழுதுவதாவது:—"வசிகரன் மூலிகை" ரொம்ப திருப்தியளித்தது; விசேஷ பலன் கிடைத்தது. இரண்டாவது நல்ல......... "திரேத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்ப மயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. 2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழில் விருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன சக்தியால் நம்பமுடியாத எவ்வித வியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள் :— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜ் வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODCE, (S.M W**
**P O. SALKIA HOWRAH**



## ஓர் ஆச்சரிய சோதிடம்!

ஆண் பெண் சகல மதஸ்தர்களுக்கும் இல்வாழ்க்கைத் திறவுகோல் இதுவே. தங்கள் எண்ணத்தை எனக்குத்தெரிவிக்காமலே திரிகால பலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2. தங்கள் எண்ணத்தை தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5. ஜனன காலம் தேவை அல்லது எனக்குக் கடிதம் எழுதும் நேரம் எழுதவும். இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10. வி. பி. பிரத்தியேகம்.

ரா. முத்துவேல் முதலியார்,
கலைமகள் ஜோதிடம்,
48, தேர்முட்டி வீதி,
திருப்பாபுலியூர்,
தென்னார்காடு ஜில்லா.



வலுவாகவும்,
நிரந்தரமாகவும், பத்திரமாகவு
மிருக்க இரும்பையே
கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு
டாடா இரும்பையே
கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும்
வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும்
இருக்கின்றனர்.

**Tata Iron & Steel Co., Ltd.,**
18, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
தந்தி: "IRONCO MADRAS" போன்: 2701






## லேடிஸ் செயின்கள்

ஐந்து வித நிறமான சிந்தடிக் கற்களாலும் அல்லது ஒரு கலரிலும் ஆர்டர்படி ரோலட் கோல்ட் செயின் 5 வருஷ உத்தரவாதத்துடன் அனுப்பப்படும்

25 அங்குல நீளமுள்ள செயின் 1-க்கு விலை ரூ. 4.

**யூனிவர்ஸல் ஏஜென்ஸி,**
தபால் பெட்டி நெ. 28, சென்னை.



## கெற்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும. சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதகக் கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினல் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலத்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம் பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெர்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெர்ப்ப உத்பத்தியை உண்டு பண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்க விடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.
1-புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ 5. செலவு வேறு.
குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ
பழனி வைத்திய ஆசிரியர்
**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**
சித்த வைத்தியசாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.
தலைமை ஆபீஸ், பழனி



## நரைமயிரை அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலன் எண்ணையை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு 15)
பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹெஸாரிமால் & கம்பெனி,
260, சைனபஜார் ரோட்,
ஸப் ஸ்டாககிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.



## சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்



## வெண குஷ்டம் பெருவ்யாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும நாலே வாரத்தில குணம். சர்த்துக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.
KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.



## மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:
187, மவுண்ட்ரோட் மதராஸ்

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

# ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவுதான் இசைந்த துணையாயிற்றென்று ராதா ஒரு பால் மகிழ்ந்தாள்; மற்றொருபால், ராதா "ஆகா! இதுவென்ன புதுமை! சொன்னபடியெல்லாம், நான் கீறிய வரைக்குள் அடங்கி நிற்கும்படி, சென்ற ஏழுவருஷ காலமாய்ப் பழக்கிவைத்திருந்த என் பாழ்த்த மனமானது இன்று மட்டும் என்னையும் என்விவேகமென்னும் அங்குசத்தையும் சற்றும் மதியாமல்—அச்சம் சிறிதுமின்றி—என்னோடு பழகிய வாஞ்சை கொஞ்சமுமற்று—என்னை இவ்வாறு எண்ணற்ற முட்காடுகளிலும், நிர்த்தாக்ஷண்யமாய் இழுத்திழுத்தடித்து வருத்தும்படி, இந்த அதிகேவலமான அற்ப மனத்திற்கு ஊக்கமும் உறுதியும் கொடுத்தது யார்? அந்த பர் தெரியவில்லையே?" என்று தன்னையே வினவினாள். "போர் வீமனும் அசைத்தற்கரிய வலியுடைய என் வன்மனத்தை—இன்றிரவு இவ்வளவு எளிதாய் இத்தனை சூதாய் என்னை ஏமாற்றிவிட்டோடும்படி—ஏவியவர் யார்? அவர் இந்த அமரேசர்தானே? இந்த அமரேசநாயனார் என்பவர்தானே? இல்லை; இல்லை; அவரல்ல. அவராயிருந்தால், அவர் மகா விவேகியல்லரோ? இவ்வுலகனைத்தையும் மூடியிருக்கும் அஞ்ஞான விருளை நீக்குமாறு அவதரித்த ஞானசூரியரல்லரோ? இத்தேசத்தாரையெல்லாம் பிடித்துவைத்தாட்டும் அநாகரிகமென்னும் பழம்பேயை, ஞானப்பூசைகொடுத்து, ஓட்டுதற்கென்று ஓயாத பிரசங்க மந்திரம் செய்கின்ற மகா மாந்திரிகரல்லரோ? அவரா என்போன்ற ஏழைப்பெண்களின் மனத்தைக் கவர்வார்? அதுவும், என் மனத்தையா கவர்வார்? ஏழை—பரதேசி—அநாதி—அமங்கலியாகிய என் மனத்தை அவரேன் கவர்கின்றார்? என்னால் அவருக்குஎன்ன பயன்? அவருக்குநானோஎதிரி? அவர்க்கு நானுமோர் பொருளா? அவரின் பாததூசியின் விலையும் பெறாத என் மனத்தை அவர்தான் கவர்ந்துகொண்டாரென்பது பொய்; எல்லாம் என் மனத்தோற்றமேயன்றி மெய்யொன்றுமில்லை. இந்தப் பாழான மனம்தான்—காலம், அகாலம் மானம், அவமானம், சந்தர்ப்பம், அசந்தர்ப்பம் என்பதொன்றையும் கவனியாமல்—கண்ணை மூடிக்கொண்டு குருட்டடியாயும் முரட்டுத்தனமாயும், வலிய வலிய அவரைத் தேடித்தேடி ஓடியோடி மாய்கின்றதேயன்றி, அந்த அமரேசர் என்னை ஒரு நற்பொருளாய் மதித்திருக்கின்றாரென நான் எண்ணியுழல்வது கேவலம் என் மனக்கோட்டைதான்; என் கனவுதான்; என் மடமைதான்.

ஆனால்—ஒருக்கால்—ஏழு வருஷத்திற்குமுன், நான் யாதுமறியாக் கன்னிகையாய்—இவ்வுலகில் ஒருவரும் மணந்தறியாப் புதுமலர்போல்—பரமபரிசுத்தமான பாலிகையாயிருந்தபொழுது, அவரும் இவ்வளவு அபாரமான மதிப்பையும் புகழையும்பெறாத சாதாரணமான மாணாக்கராயிருந்த காலத்தில் என்னை நல்லவளெனவும், உத்தமியெனவும், கொஞ்சம் விவேகியெனவும் எனது அமரேசர் நினைத்தாலும் நினைத்திருப்பார்; அந்த நினைப்பினால், அவர் தம் ஆழ்ந்த இருதயத்தில் என்னைப்பற்றி என்னென்ன உத்தேசம் கொண்டிருந்தாரோ அதை நான் அறியேன்; தெய்வம்தான் அறியும். அந்தக் காலத்தில் நானும் யாதொரு சூதுமறியாப் பதினொரு வயது சிறுமியாயிருந்தமையால், அவருள்ளக் கருத்தையறிய வேண்டுமென்று, பாபி நான் ஆவலகொண்டேனில்லை! ஐயோ! ஒன்று ஒன்றரை வருஷ காலம் படிப்பித்த இந்த அமரேசர் பின்னும் குறைந்த பக்ஷம் ஒரு வருஷ காலமாவது எனக்குப் படிப்பித்திருப்பாரானால், திட்டமாய் அவர் கருத்தையறிந்தேயிருப்பேன். இன்னும், என் கருத்தே அவர் கருத்தென்று அந்த நாட்களில் எனக்கு எள்ளத்தனையேனும் தோன்றியிருக்குமாயின்—அடடா! நான் என்ன செய்திருப்பேன்!

அதை இப்போது நினைந்து பயனென்ன? என் பிதா—பின்புத்திக்காரராகிய என் பிதா மட்டுமல்ல; என் அருமைத் தாய் அநந்தகல்யாணியும் சேர்ந்து தடுத்தாலும் நிற்குமா? என் அத்தை—அந்தக் காலத்துப் பெண்ணாகிய என் அத்தை—கற்பகம் பிறந்த வமிசத்தில்தானே நானும் பிறந்திருக்கின்றேன்? பிறந்தும் பயனென்ன? என் அத்தைக்கும் எனக்கும் எவ்வளவு தூரம்!

உண்மையான க்ஷத்திரியர்களுக்குப் போர்க்களத்தில் வீரம் வேண்டுமென்று அறநூல்கள் கூறுவதுபோலவே, பெண்களுக்கும்காதலில் வீரம் வேண்டும். போரில் வீரமில்லாத அரசர்களுக்கு எவ்வாறு வெற்றி கிடையாதோ, அவ்வாறே காதலில் வீரமில்லாத பெண்களுக்கும் இன்பமென்பதன் மணமுங் கிடையாது; என்னைப்போல் தொலையாத் துன்பத்திற்கே ஆளாவார் என்பது திண்ணம். "இயலாத காரியத்தில் வீரம் கொள்வது மடமை" என நினைப்பவரே மடயர்; அவரே கள்ளர். "வென்றாலும் வெற்றி; இறந்தாலும் வீரஸ்வர்க்கம்" என்று க்ஷத்திரியர் எண்ணுவதுபோலவே, பெண்களும் "இயன்றால் இல்லற இன்பம்; ஒழிந்தால் துறவ




**இந்தியா பூராவும் புகழ் பெற்றது**

மைசூர் பட்டுகள இணையற்ற அழகிற்கும் அழுத்தத்திற்கும பெயர் பெற்றவை.

ஆடம்பரமானஸாடின்கள. ஜார்ஜெட்டுகள், க்ரேப்புகள். டபேடாக்கள், கைக்குட்டைகள் கழுத்துப பட்டைகள் யாவும் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு விசேஷ அனுகூலமாகத் தயாரிக்கப்படுகின்றன.

**கவர்ன்மெண்ட் பட்டு நெசவுத் தொழிற்சாலை, மைசூர்**

ஸ்டாக்கிஸ்டுகள்:

1. மதராஸ் ஸ்வதேசி எம்போரியம் லிமிடெட்., 1/17 A, மவுண்ட் ரோட், மதராஸ்.
2. மேஸர்ஸ் ஜயந்மல் மிஸ்ரிலால் & கம்பெனி., கமர்ஷியல் ரோட், உதகமண்டலம்.
3. மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ் இலாகா 4, சவுத்பரேட், பெங்களூர்.



# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7அணா.

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O. Box 2186 Bombay.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

றம்" என்று துணிவதே வீரம். போரில் உதிப்பது ஆண் வீரம்; காதலில் உதிப்பது பெண் வீரம். இன்னும் பகையால் உதித்துப் பகையைச் சாதிப்பது ஆண் வீரம்; ஆண்பால் உதித்து அவ்வன்பையே முடிவுவரை சாதிப்பது பெண் வீரம்! அன்பிலார்செய்யும் துன்பத்தைப் போக்குவது ஆண் வீரம்; அன்புடையார் தரும் இன்பத்தை வளர்ப்பது பெண் வீரம். இந்தப் பெண் வீரத்திற்குக் கற்பு என்பது ஒரு மறுபெயர். காதல் வீரத்தின் பட்டப்பெயர்தான் கற்பு; பெண் வீரமும் கற்பும் ஒரு பொருட் சொற்கள்; ஆதலால், ஆண் வீரத்தினும் பெண் வீரம் ஆயிரமுறை சிறந்ததும்அரியதுமாகும். இவ்வீரமே பெண்களின் உண்மை லக்ஷணம். உடலுக்குக் கண் போன்றது. ஒழுக்கத்துக்கு வீரமாதலின், இவ்வீரத்தையே என் அத்தை கற்பகமும் கொண்டாள். இவ்வீரமே அவள் கற்பைக்காத்த காவலுமாயிற்று. இருபத்தைந்து வருஷகாலம் பிரிந்திருந்த அவள் கணவரைப் பின்னால் கூட்டி வைத்ததும் இவ்வீரத்தின் பெருமைதானே? ஒருபொழுது மனத்தால் நினைத்து விரும்பிய கணவரை உயிரளவும் மறப்பதில்லையென்று என் அத்தை இரண்டு வியாழ வட்டம் பூண்டிருந்த மகா விரதத்தின் பலன் கைம்மேற் கிடைத்துவிட்டதே! சோமவார விரத முதலிய எண்ணற்ற வெளிவிரதங்களிலும், என் அத்தை பூண்ட மனவிரதம் எத்தனை உயர்ந்தது? எத்தனை பரிசுத்தமானது? தன் பதியின்பொருட்டு விரதம் பூண்ட என் அத்தையன்றோ மகா விரதையாயினள்.

தன்னை வந்தடைந்த ஆயிரம் நாயகர்க்கும் அன்புள்ளவள்போல் அபிநயம் செய்து நடிக்கும் ஒரு பொதுமகள்போல், ஆயிரம் மாப்பிள்ளைமாரை மாறி மாறி விரும்பி, அவர்களுள் ஒருவனையும் மணக்கவியலாமல், முடிவில் ஆயிரத்தோராவது மாப்பிள்ளைக்கு மனமின்றி வாழ்க்கைப்பட்டு "நானும் இல்லறத்தில் வாழ்கின்றேன். எனக்கும் ஓர் கணவனுண்டு" என்று வெளிப் பிதற்றுப் பிதற்றும் எண்ணற்ற போலிப் பெண்களைப்போலல்லவே என் அத்தை?—அந்தக் கற்பரசியாகிய கற்பகம்—கற்பிற்கே அகம் போன்ற அந்தப் புண்ணியவதி—என் அம்மான் கார்த்திகேய பிள்ளை பூர்வ புண்ணியத்தாற் கண்டெடுத்த பொக்கிஷம்—அவரின் காதலி—என் அத்தை! ஆகா! காதலித்த கணவனை மணஞ்செய்ய வியலாமல், தமக்கு உலக ஒப்பனையாய்த்தாலிகட்டிய கணவரோடுகாலங்கழிக்கும் கற்பிலாப் போலிப் பெண்கள் தங்கள் போலிக் கணவர் மீது—"எ காதலே சற்றே வா"வென்று கூவியழைத்தாலும்—காதலென்பது தோன்றுமா? காதலின் சாயையேனும் தலை நீட்டுமா? ஒரு நாளுமில்லை! இந்தப் பொல்லாத காதல் தானேயுதித்தால் உதிக்குமன்றி, தன்னை விரும்பி யழைப்பாரை நாடிச் செல்லுமியல்பில்லாத முறண்டுள்ளதாயிற்றே? இவ்வுண்மையை யறிந்தன்றோ எனது அத்தை, தனக்கென ஒரு நாள் நிச்சயிக்கப்பட்ட அந்த மாப்பிள்ளை யொருவரையன்றி, தன் குடும்பத்தையே ரக்ஷித்து வந்த அந்தப் பிரபுவையன்றி, தன் பொருட்டாய் நெடிய சிறைத் தண்டனைக்கு மாட்பட்ட செல்வராகிய என் அம்மானையன்றி "வேறொருவனையும் கையால் தொடேன்; மனத்தாலும் நினையேன்" என்று மகாவிரதம் பூண்டு இவ்விருபத்தைந்து வருஷகாலம் பாண்டவர்போல் அஞ்ஞாதவாசம் செய்தாள்? அவரையே நோக்கி அருந்தவம் செய்தாள்! தவத்தின் பலனையும் பெற்றாள்!

நானோ அவ்வுத்தமி பிறந்த வமிசத்தில்—அதுவும் அவளுடைய சொந்தமான தம்பி வயிற்றில்—பிறந்திருந்தும், அவளடைந்த பெரும்பேற்றில் ஆயிரத்திலொரு பங்கும், இனி அவள் அடையப்போகும் பேரானந்தத்தில் பதினாயிரத்திலொரு பங்கும் அடையாமற் போயினேன். ஒருவனுக்கு—சம்மதித்தோ சம்மதியாமலோ—கழுத்தைக் கொடுத்துவிட்டு, மற்றொருவனை மனத்தால் இச்சிக்கும் இழிந்த பெண்ணாயினேன்! அதி பால்யத்தில் விதந்துவாய்விட்டதைப்பற்றிக்கூட நான் அவ்வளவு வருத்தமடையவில்லையே? ஒரு மாது ஆயுள்வரை சுமங்கலியாயிருத்தலும் அமங்கலியாயிருத்தலும் தெய்வச் செயலேயன்றி மனிதச் செயலல்லவே? அன்றியும், மனமொத்த நாயகனை மனப்பூர்வமாய்க் காதலித்து மணந்த ஒரு கன்னிகை, மணந்த மறுதினமே மணவாளனை யிழந்து என்னைப் போல் விதவையானாலும் குற்றமில்லையே? ஏனெனில், அவள், தன்காதலன் பிரிவினால் இந்த அதி சாதாரணமான சிற்றின்பமொன்றை யிழந்துவிட்டாலும், வைதவ்வியமென்னும் பெண் துறவு பூண்டு தன் மெய்க்காதலனாகிய ஏக வஸ்துவையே சதா தியானித்தலால் தோன்றும் உயர்ந்த பேரின்பத்தையேனும் தன் ஆயுள்வரை அனுபவிக்கின்றாள். இருவர் கூடியனுபவிக்கும் சிற்றின்பமொன்றிற்கு இடையூறு செய்யத்தான் எமனாலியலுமல்லாது, ஓர் பெண் துறவி ஏகாந்தமாய்த் தனித்திருந்து அனுபவிக்கக் கூடிய பேரின்பத்துக்கு இடையூறு செய்ய ஈசனாலு மியலாதே! இந்த இணையற்ற பேரின்பத்தை யனுபவித்தற்கு வீடு, வாயில், மேடை, மாளிகை, பொன், பொருள் முதலிய பௌதிக சாதனங்களொன்றும் அவசியமில்லையே! ஆனால் இவ்வரியபேரின்பம் யாருக்குக் கிடைக்கும்? எல்லாப் பெண்களுக்கும் வாய்க்குமா? மனமொத்த நாயகனை மணந்து அவருடன் ஒரு நாளேனும் மனமகிழ வாழ்ந்து தெய்வச் செயலாய் விதந்துவான பெண்கள்தான் தம் மெய்க் கணவரின் பெருமையையும் அருமையையும் நினைந்து நினைந்து அந்த நினைப்பினால் தோன்றும் பேரின்பத்தை யடைவார்களே யல்லாமல், விரும்பாக் கணவரை வீண்மணம் செய்து என்னைப் போல் பாழான பாபிப் பெண்கள் தம் வெறும் மனத்தில் யாரை நினைப்பார்கள்? அவர்க்கு என்ன இன்பம் தோன்றும்?

ஆகவே, நான் சிற்றின்பமற்ற விதவைக் கோலம் பூண்டும், மற்ற விதவைகளுக்குள்ள அந்தப் பேரின்பமும் எனக்கில்லையென்றாய் விட்டதே! இவ்வாறு இரண்டின்பமுமற்று இடை நடுவிற் கிடந்து தட்டழியும் என் கதியை நினைக்கும்பொழுது என் வயிறு கொதிக்கின்றதே! உண்மையில், நான் ஒரு காதலனை மனப்பூர்வமாய் மணக்கவில்லையென்ற காரணத்தால் நான் ஒரு விதவையல்லேன் என்னும் நுட்ப நியாயத்தை விவேகிகள் தான் ஒப்புவார்களன்றி, மற்றவர்கள் நினைப்பார்களா? பெயரளவிலாவது ஒருவனுக்கு மனைவி யென்றிருந்துவிட்டு, மனத்தால் இன்னொருவரை நினைத்து வருந்தல் எவ்வளவு இழிந்த செயல்? அதிலும், அமங்கலியென்ற பெயரோடு அந்நிய புருஷரை நினைத்தல் மிகவும் இழிவல்லவா? என்னுடைய மனத்தில் இன்றிரவு முழுதும் நிகழ்ந்த எண்ணங்களை யெல்லாம் பிறர் யாரேனுமறிவார்களானால், எனக்கு எவ்வளவு கேவலம்! கற்பழிந்தவள்—அதிலும் கற்பழிந்த விதவை—என்று என்னை உலகம் இகழுமே? விதவையென்ற பெயர்பூண்டவர்களை மங்கல காலங்களிற் கண்ணுற் காண்பதும் சகுனத்தடையென்பது உலக வழக்கம். அத்தோடு, கற்பும் ஒழுக்கமுமற்ற என் போன்ற இழிந்த விதவைகளை





தலைவலி, இராத்தூக்கமின்மைக்கு ப்ரிங்கால் உபயோகியுங்கள். ப்ரிங்கால் துல்லிய மணமானது; மயிர் உதிர்தல், பால்ய நரை இவற்றிற்கும் சிறந்தது

BHRINGOL

ப்ரிங்கால் என்பது ஆயுர்வேத முறைப்படியான மகா ப்ரிங்கராஜ தைலம்;
தயாரிப்பவர்கள்
கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்.

HO-1



டாக்டர் ஜம்மி வெங்கடராமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

என் அத்தையைப் போன்ற கற்புடை மகளிர் கண்ணுற் காணுதலும் பாபமல்லவா? ஐயோ! நான் பெறற்கரிய மனித ஜென்மத்தைப் பெற்றும்—தக்க செல்வன் வயிற்றிற் பிறந்தும்—எனது அமரேசருடைய திருவருளால், என் தகுதிக்கேற்ற கல்வியும் அறிவும் பெற்றிருந்தும்—அதிகேவலமான ஒரு தாசிக்கு சமானமாய் விட்டேனே? கற்பு என்னும் ஒரு சிறப்பு அமையப் பெற்றால், பெண்ணினும் அரிய பொருளும் பெரியபொருளும் வேறில்லையெனத் திருவள்ளுவ நாயனார் கூறியிருக்கின்றார். அந்த நியாயப்படியே, கற்பு அழிந்த விடத்து, என் போன்ற பெண்ணினும் இழிந்த பொருளும் வேறில்லையே!

என் பிதாவினிடமுள்ள செல்வமும் என்னிடமுள்ள கல்வியும் எனக்கு என்ன பயனையின? செல்வத்தால் இன்பமுண்டென்பதும், கல்வியால் இன்பமுண்டென்பதும், என்னளவில் பொய்யாய் முடிந்ததே? உற்று ஆராயுமிடத்து, செல்வம், கல்வி, இன்பம் ஆகிய இம்மூன்றும் ஒன்றையொன்று பாழாக்கிக் கெடுக்கும் ஜென்மவிரோதிகளேயன்றி, ஒன்றற்கொன்று உதவிபுரிந்து ஒத்தாசை செய்யும் உயிர்த்தோழரென்று என்னுவது மடமையினும் மடமை! அவற்றுள் ஒவ்வொன்றும் தானே தனித்தனித் தோன்றி வளர்வதன்றி, ஒன்றிற்கு மற்றொன்று சாதனமெனக் கொள்ளும் கொள்கையை நான் ஒரு பொழுதும் ஒப்பேன்.

தேவேந்திர பதவியிலிருந்து தேவபோகத்தையனுபவிக்கும் செல்வர்களும் அரசர்களும் மடமையென்னும் மதியற்ற மகுடத்தையும் அறியாமை என்னும் ஆபாசமான ஆபரணத்தையும் அணிந்து, பார்த்தோரும் கேட்டோரும் பழித்துச்சிரித்துப் பரிகஸிக்கக்கூடிய, பாபச்செயல்களைப் புரிந்து பாழான மாயமென்ன? இனி, கல்வி, செல்வம் ஆகிய இரண்டு சாதனங்களாலும் இன்பத்தை அடைதல் இயலுமாயின், யாதொரு பாவமுமறியாத நான்— ஓர் எறும்பிற்கும் கூட இன்னல் இழைத்திராத நான்—எல்லாச் சிறப்பும் பெற்றிருந்தும், என்ன பாபத்தினால் என்ன தோஷத்தினால் இந்தக் கதிக்காட்பட்டு, இன்றிரவு முழுதும் இவ்வாறு கண்ணீர் வடித்து எங்குகின்றேன்! எ தெய்வமே! நான் சிறு குழந்தையாயிருக்கும்பொழுது, கற்புடை மகளிர் சரித்திரங்களை வாசிக்குந்தோறும், கற்பின் பெருமையைப்பற்றி எனது அமரேசர் எனக்கு உபதேசிக்குந்தோறும், நான் என்னவெல்லாம் நினைத்தேன்! நானுமோர் கற்பரசியென்ற உண்மையான பெயரையும் புகழையும் பெற்று அருந்ததி, சந்திரமதி முதலிய உத்தமிகளின் கணங்களோடு என் கதையும் சேரும்படி, அத்தனை சிறப்பான நல்வழியில் ஒழுக வேண்டுமென்று நினைத்தேனே?

மனமொத்த நாயகனை மனப்பூர்வமாய் மணந்து மங்கலமாய் வாழும்படி அந்தப் பிரமன் என் தலையோட்டில் எழுதவில்லையானாலும், நிராசையுடன் துறவு பூண்டு பேரின்பத்தை அடைதற்கு ஒருவர் தயவும் அனுமதியும் வேண்டாமேயென்றெண்ணி, சென்ற எழு வருஷகாலமாய் இன்றுவரை ஞானமார்க்கத்திற்சென்று பரிசுத்தமாயிருந்த என் உள்ளம் இன்றிரவில் இத்தனை ஆபாசமான காதல் முதலிய வீணான எண்ணங்களுக்கெல்லாம் இடம் கொடுக்கும்படி நேர்ந்ததே! இதற்கு அமரேசர் தான் காரணமென்று ஒரு கணப் பொழுதும் நினையேன். அனைத்திற்கும் என் மனமே காரணம். எ, மனமே! நீ என்னை வருத்தாதே! பயனற்ற காரியத்தில் என்னையேன் வீணில் வருந்துகின்றாய்? மனமே, உன்பேரிலும் குற்றமில்லை. மகா தபஸ்விகளுடைய மயங்கா மனத்தையும் நொடிப்பொழுதில் சின்னாபின்னமாக்கிச் சிதறும் வலியுள்ள கொடிய காதல் அதிசாமான்யமான உன்னை லகுவில் விடுமா! காதல் என்னும் கள்ளின் வெறியால், எ மனமே, நீ தன்னை மறந்து தட்டழிகின்றாய்! உன்னோடு என்னையும் இழுத்தடிக்கின்றாய்! எ காதலே! உனக்கும் எனக்கும் வெகு தூரம்! விவாகமாகாத கன்னியர்களிடத்தும், யௌவனமுள்ள பிரமசாரிகளிடத்தும் உன் திறனைக் காட்டலாமேயன்றி கிழவர்களிடமும், நோயாளிகளிடமும், ஒன்றுக்கும் உதவாத என் போன்ற அமங்கலிகளிடமும், எ காதலே, உன் வீரத்தைக் காட்டுதல் உனக்கு முறையன்று; உன் பெருமைக்கும் அழகன்று. எனது சற்குருநாதன் அமரேச நாயனை மணந்து வாழ்தற்கிசைந்த மங்கலமான கன்னிகைப் பெண்களைத் தேடு; எனது குருநாதனால் அன்புடன் காதலிக்கப்படும் பாக்கியவதிகள் எவர்களோ அவர்களிடம், எ காதலே, உன் விளையாட்டுகளைக் காட்டு; ஏழை பரதேசியாகிய என்னைச் சும்மா பரிஹாஸம் செய்யாதே! எ காதலே, உன்னைக் கும்பிட்டேன்! உனக்குக் கோடி நமஸ்காரம்! என்னைவிடு! என் வெள்ளை மனத்தையும் அவிழ்த்துவிடு! எ மனமே, உன்மேல் ஆணை! இனியேனும், இக்கொடிய காதலின் சூதில் அகப்படாமல், பழையபடி நல்ல மார்க்கத்தில் ஞான மார்க்கத்தில் திரும்பு எ மனமே!'' என்றிவ்வாறு ராதா கோட்டிகொண்டவள் போல் புலம்பிப் புலம்பிப் புழுங்கிக்கொண்டே, தன் படுக்கையில் உருள்வதும்புரள்வதும், எழுவதும் விழுவதுமாய்த் தயங்கி மயங்கித் தட்டழிந்து கொண்டிருக்கும்பொழுதே, மணியும் கணீரென்று ஐந்தடித்துவிட்டது! சூழ்ந்திருக்கும் தோப்பில் இதுவரை அயர்ந்து தூங்கிய பல்வகைப் பக்ஷிக்கூட்டங்களும் "கா கூ" வென்று கத்தி, ராதாவைச் சமாதானம் செய்தன! காலைப் பொழுதை நோக்கி அருந்தவம் செய்துகொண்டிருந்த பூசையாச்சியும் "தாயே ராதா, என் அம்மா, எழுந்திரு, எழுந்திரு" வென்றழைத்தாள்; பக்கத்திற் படுத்திருந்த அன்னபூரணியும் கைகால்களை நீட்டி நெழித்துத் தலையைத் தூக்கினாள்; இடையே உசும்பிய மாதவனும் "எ அக்கா அக்கா" என்று கொஞ்சியழுது கொண்டு ராதாவின்மேல் விழுந்து உலப்பினான். ராதா எழுந்து முன் கதவைத் திறக்குமுன், தெற்குத் தோப்புச் சந்தனம் "அம்மா தபாற்காரன் கொடுத்த காயிதங்களைக் கொடுங்கள்; பூந்துறைக்குப் போகின்றேன்" என்றுகொண்டு முற்றத்திற்கு வந்தான். ராதா தபால்களை யெடுத்துக் கொடுத்துவிட்டு, மாதவன் தலையை வாரிமுடித்துக்கொண்டிருந்தாள். இதற்குள் விடியாப் பொழுதும் விடிந்துவிட்டது.

(தொடரும்.)




அசங்கியமான

**சொறி, சிரங்குகளைப் போக்கிக் கொள்க.**

சொறி, சிரங்கு, எரிச்சல் எவ்வளவு கம்மியாக விருந்தாலும், உடனே ஜாம்-பெக் தடவுங்கள். இது நமைச்சல், ரணம்போன்ற கடுமையான சருமக்கோளாறுகளை வரவொட்டாமல் தடுக்கும். ஜாம்-பெக் உடனே ரணமாற்றுகிறது; அது நேரே ஊடுருவிச் சென்று, வீக்கங்களைத் தணித்து, வலியை மாயமாக நிறுத்துகிறது. ஜாம்-பெக் சுத்த மூலிகைகளாலானது; தழும்பின்றி குணம்தருவது. எனவே கத்தி வெட்டுகள், சிராய்ப்புகள், தீப்புண்கள், வண்ணாரப்புண், நமைச்சல், சொறி, கட்டிகள், மூலச்சூடு முதலியவற்றிற்கு ஜாம்-பெக் தான் நிச்சயமான நிவாரணி. பெட்டி 1-க்கு ரூபா 1 அல்லது ரூபா 2-4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.




ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா அண்டு கம்பெனி, பார்க்டவுன், மதராஸ்.

மிருகக்கொழுப்பற்றது

ஜாம்பெக்
Zam Buk



## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

**ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,**
திருத்தணி, S. இந்தியா

# உலகப் போக்கு

சாலைகள் போடுவதற்கு உப்பு உபயோகப்படுமா? ஆனால் விக்ஞான வளர்ச்சியில் சாலைகள் போட உப்பு உபயோகிக்கப்படுகிறது. சாதாரணமாகச் சாலைகள் அடிக்கடி மேடுபள்ளமாகப் போய்விடுவதால், அவற்றை நிர்வகிக்க ஏராளமாகச் செலவாகிறது. இப்பொழுது இந்தச் செலவை வெகுவாகக் குறைத்துக் கொள்ளலாம். பாறைகளிலிருந்து வெட்டி எடுக்கப்படும் உப்பைக் களிமண்ணுடன் கலந்து சாலைகளின்மேல் பரப்பிற்குப் பூசிவிட்டால், அவற்றில் எத்தகைய மேடுபள்ளமும் உண்டாவதில்லையாம். மேலும் மழை பெய்தால் இந்தச் சாலைகள் கெட்டிப்படுகின்றனவாம். மழையினுல் உப்புக் கரைந்து களிமண், க்ரேவல் கற்கள் ஆகியவற்றுடன் கலந்து சாலையைக் கெட்டியாக்கிவிடுகிறது. பிறகு வெய்யிற் காய்ந்தால் கெட்டித் தன்மை மிகவும் கடினமாகிப் போய்விடுகிறது. அமெரிக்காவில் இந்த நவீன முறையைக் கொண்டு சாலைகளை அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

* * * *

உலகில் மிக நூதனமான ஒரு லிமிடெட் கம்பெனி கண்டுபிடிக்கப்பட்டு அது இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. துருக்கியில், ஸ்மைரா என்னுமிடத்தில் இக்கம்பெனி இருந்தது. இதன் பெயர் "பிச்சைக்காரர்கள் கம்பெனி லிமிடெட்." இந்தக் கம்பெனியில் பதினேழு பேர்கள் அங்கத்தினராகவிருந்தார்கள். அனைவரும் முடம், கூன், குருடு, செவிடு முதலிய வியாதிகள் ஒன்றினுல் பீடிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே துருக்கி முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்கு பணம் சேகரித்துத் தலைமை ஸ்தானத்திற்கு அனுப்பி வந்தனர். தலைமை ஸ்தானத்தில் ஒரு கணக்கர் இவற்றைச் சரிவர வைத்துக் கொண்டிருந்தார். ஒரு வருஷத்தில் இவர்களுக்கு 3,500 பவுன் வருமானம் கிடைத்தது. பதினேழு அங்கத்தினர்களுமில்லாமல் கம்பெனியைப் பற்றிய காரியங்கள் யாதொன்றும் செய்வதில்லை. போலீஸார் இதைக் கண்டுபிடித்து உண்மையாக வியாதியினுல் பீடிக்கப்பட்டவர்களைத் தர்ம ஸ்தாபனங்களுக்கனுப்பிவிட்டு வேண்டுமென்றே பாசாங்கு செய்தவர்களைக் குற்றஞ்சாட்டிச் சிறைக்கு அனுப்பினர். கம்பெனி இப்பொழுது மூடப்பட்டுவிட்டது!

* * * *

பிட்ஸ்பாக்,ரிட்ஜ்வே என்ற ஊர் வாஸியான எட்வர்ட் லீ என்பவரின் மனைவிக்கு நூறு வயதாகிறது. அவர் சமீபத்தில் ஒரு இரட்டைக் குழந்தைகளைப் பெற்ருர்.

* * * *

புதாபெஸ்டில் ஒரு அச்சாபீஸில் வேலை கற்றுக்கொண்டிருந்த ஜியார்ஜி ஸாபோ என்ற 17 வயது யுவாவிற்கு ஒரு ஆபரேஷன் நடந்தது. காரணம் இவன் தனது மனைவியை இழந்தான். பிறகு அதே எக்கத்தில் அவளது பெயரைக் கம்போஸ் செய்து எழுத்துகளை விழுங்கி விட்டான்.

* * * *

இவ்வருஷ ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட ஒரு உத்தரவுப்படி ஆர்யர்களல்லாத ஜெர்மானியர்கள் ஜெர்மன் கோல்ப் பந்தய மைதானங்களில் ஆடக்கூடாது என்று தடை செய்யப்பட்டிருக்கின்றனர்.

* * * *

இங்கிலாந்தின் கடற்கரையோரங்களில் மீன் பிடிப்புத் தொழில் விருத்தியடைந்து வருகிறது. ஜார்டின், லார்வுட் என்ற இரு மீன்பிடிக்கும் கப்பல்கள் சமீபத்தில் ஒரே தடவையில் முறையே 2,980 பவுன் பெறுமான மீன்களையும் 3016 பவுன் பெறுமான மீன்களையும் பிடித்துத் திரும்பின.

* * * *




1. ஹங்கேரியப் பிரபுவான கௌண்ட் ஜான் பிரென்யி என்பவரின் திரேகத்திலிருந்து சதா ஒருவித பிரகாசம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அவருக்கு இருட்டிலும் விளக்குத் தேவையில்லை. இதற்கு விக்ஞான சாஸ்திரிகள் அவருடைய திரேகத்தில் மின்சார சக்தி அதிகமிருக்கிறதென்று காரணம் கூறுகின்றனர். 2. கோர்ட்டுகளில் ஐரோப்பியர் தொப்பி அணிவது கோர்ட் மரியாதைக் குறைவாகும். ஆனுல் யூதர்கள் மட்டும் அவர்கள் ஜாதி ஆசாரப்படி தொப்பி பணிகின்றனர். 3. இந்தியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய தேசங்களில் இரட்டைக் குழந்தைகளால் தீங்குண்டாகிறது என்று கருதுபவர்கள் இன்னும்இருக்கின்றனர். அமெரிக்காவில் அமேஸான் பிரதேச வாசிகள் ஒரு குழந்தையை உடனே கொன்றுவிடுகின்றனர். 4. பசுக்கள் பால் கறக்கப்படுகையில் அருகில் சங்கீதத்திற்கு ஏற்பாடு செய்திருந்தால் பசுக்கள் வழக்கத்திற்கு பத்து சத விகிதம் அதிகமாகவே பால் கறக்கின்றனவென்று இங்கிலாந்தில் ஒரு ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கிருர்.

ரேகை சாஸ்திரம்

# கையில் கிரகநிலை அறியும் விதம்

——:[o]:——

(" சக்திதாஸன் " எழுதியது.)

எழு கிரகமேடுகளில், சுட்டு விரல் முதல் சுண்டு விரல்வரை, அவைகளின் அடிவாரத்தில் நான்கு அமைந்திருக்கின்றன. இரண்டு கிரகமேடு உள்ளங்கையின் இரு பக்கமும் செங்குத்தாயிருக்கின்றன. கட்டை விரலின் மூன்றுவது அங்குலாஸ்தியே சுக்கிர மேடாய் உள்ளங்கைவரை பரவியிருக்கிறது. அதற்கடுத்தது சந்திர மேடாகும். செவ்வாய் மேடு மாத்திரம் இருபகுதியாய் உள்ளங்கைக்கு மேலே இருதய ரேகை-ஆயுள் ரேகை உற்பத்தியில் அமைந்திருக்கிறது. ஒருவர் கையைப் பாத்தவுடன் கிரகங்கள் அந்தந்த எல்லைகளில் சரிவர இருக்கிறதாவெனக் கவனித்தறிய வேண்டும். (கிரகமேட்டைக் குறிக்கும் சித்திரம் இதற்குமுன் வெளியாயிருக்கிறது.) கிரகங்கள் இடம் பேர்ந்தும் சிலருக்குக் காணப்படும்.

புதிதாய் ரேகை சாஸ்திரத்தில் பழகுவோருக்குக் கிரக நிலைகளை அறிந்து கொள்வது சற்று சிரமமாகவே இருக்கும். பலபேர் கைகளைப்பார்த்து நிதானிக்க வேண்டும். சில கைகளில் கிரக ஆதிக்கம் புலப்படாதிருக்கும். இதை அனுபவத்தில் கண்டு தெளியவேண்டும். கிரக நிலை எத்தகைய கையென்பதை உணர்த்தும். ஒவ்வொரு விரலுக்கு அடியில் ஒரு கிரகம் இருக்கிறது. தேசத்து சாஸ்திரப்படி ஒவ்வொரு கிரகமும் சிறு பந்து அல்லது தட்டையான சதைப்பற்றுகும். இதனுல் கிரக மேடுகள் உப்பலாய் (உயர்ந்து) தோன்றும். கையில் முதலாவது கிரக நிலைகளைச் சோதனை செய்து கிரக ஆதிக்கம் அல்லது ஆட்சியாதென ஆராயவேண்டும். கிரகங்களால் நன்மையுமுண்டு தீமையுமுண்டு. இரண்டு கிரகங்கள் ஓரளவில் அமையும். சில கிரகங்கள் அமைந்திராது. கிரக நிலை அளவுக்கு மிஞ்சிய நிலையிலும் இருக்கும். கிரகம் ஓரளவுக்குட்பட்டிருந்தால், நல்ல பலனைக் குறிக்கும். கிரக அமைப்பில்லாவிடில் விரோத பலனை சூசிப்பிக்கும். கிரக நிலை அளவுக்கு மிஞ்சினுல் விவகாரங்களத்தனையிலும் (சுகத்திலும் துக்கத்திலும்) அதீதப்பட்டிருக்கும். அதாவது நல்லவருக்கு அதிக நல்லவனுயும் கெட்டவனுக்கு மகா துஷ்டனுயும் இருப்பான். ஒவ்வொரு கிரக மேட்டிலும் பலாபலனைக் குறிப்பிட்டு ரேகைகள் அமைகின்றன. இந்த ரேகைக் குறிகள் கஷ்ட சுகத்தை அளந்து காட்டும். கிரகங்கள் இடம்விட்டு புரண்டுவிடும். அதாவது, இரண்டுவிரல்களுக்குமத்தியில் அல்லது அடுத்த கிரகத்தோடு சார்ந்தும் நிற்கும். உதாரணமாக ஆள்காட்டி விரலுக்கடியில் அந்த மேட்டுக்குள்ள குரு அடுத்த விரலுக்கடியிலுள்ள சனியோடும் சாரும். சனியும் குரு மேட்டில் சாய்ந்தும் அமையும். பார்வை தீக்ஷண்யங் குறைந்தவர்கள் பூதக் கண்ணுடி கொண்டு அறிவது நல்லது. கிரக மேட்டுக்குரிய ரேகைகள் மிக்க மெல்லியவை. சந்தியை முக்கியமாய் கவனிக்க வேண்டும். படத்திலுள்ள முக்கோணச் சந்தியைக் கவனியுங்கள். இம்மாதிரி விரலுக்கு நேரே அடியில் அமைந்திருக்க வேண்டும். கிரகமேடு உப்பலாய் சதைப் பற்றியிருந்து தொடுவதற்கு மிக்க மிருதுவாயிருந்தால், அந்தக் கிரக பலனை உபயோகப்படுத்திக்கொள்ளவில்லையென்பதை அறிவிக்கும்.

## குருமேடு


குருமேடு கிரமமாயிருந்தால் தற்பெருமையையும் ஆணவத்தையும் குறிக்கும். சனி மேட்டை நோக்கியிருந்தால் தன்னறிவோடிருப்பதைக் குறிக்கும். இருதய ரேகையை நோக்கியிருந்தால், பாசத்தில் பிடிவாதத்தைக் காட்டும். புத்தி ரேகையை நோக்கினுல் அசாத்திய ஞானத்தாலுண்டான கர்வத்தைக் குறிக்கும். ஆயுள் ரேகையை நோக்கினுல் குலப் பெருமையைக் காட்டும்.



கிரகம் என்பது முக்கோண சந்தி.

## சனி மேடு

சனிமேடு சரியாயமைந்திருந்தால் தனித்திருப்பதற்கே அளவற்ற அன்பு என்பதைக் குறிக்கும். குருமேட்டை நோக்கினுல் மதிமயக்கம் இருந்துவரும். சூரிய மேட்டை நோக்கினுல், பிரபஞ்சத் தோற்றத்தில் மயக்கமின்மையைக் காட்டும். இருதய ரேகையை நோக்கினுல் அன்பில் பற்றுள்ளவர் என்பதை விளக்கும்.




கிரமமாய் கிரஹங்கள் அமையவேண்டிய இடங்கள்.

1. குரு
2. சனி
3. சூரியன்
4. புதன்
5. சதுரம்
6. செவ்வாய் வெளி
7. முக்கோணம்
8. கீழ் செவ்வாய்
9. சுக்கிரன்
10. மேல் செவ்வாய்
11. மேல் } சந்திர
12. நடு } மேட்டின்
13. கீழ் } 3 பகுதி
14. சந்திரன்

## சூரிய மேடு

சூரியமேடு கிரமமாய் அமைந்திருந்தால் பொது மக்கள் சார்பாகப் பாசமுள்ளவராயிருப்பர். சனிமேட்டை நோக்கினுல் பேராசைத் தன்மையாகும். புதன்மேட்டை நோக்கினுல் வித்தியா தத்துவத்தில் கூர்மையான புத்தியுள்ளவராவர். இருதய ரேகையை நோக்கில் இரக்கமென்னும் அருங்குணம் பெற்றவராவர்.

## புதன்மேடு

புதன்மேடு கிரமமாயிருந்தால் தமாஷாய் பேசுவர். நல்ல வாக்கு சாதுர்யத்தைக் குறிக்கும். சூரிய மேட்டை நோக்கினுல் தொழில் நடத்துவதில் அன்பு மிகுந்தவராவர். இனிமையான வாக்குள்ளவர். ஒரு ரேகையைத் தாங்கிநின்றுல் தொழில் வெற்றி நிச்சயம். செவ்வாய் மேட்டை நோக்கியிருந்தால் சண்டையிட்டுத் தொழிலில் வெற்றி.

## மேல் செவ்வாய் மேடு

ரேகை தாங்கி நின்றுல் தவறுதலைக் குறிக்கும். உள்ளங்கையை நோக்கினுல் சச்சரவும் சஞ்சலமும் உண்டாகும். சந்திரமேட்டை நோக்கினுல் மனோவஸ்ய சக்திஉண்டாகும்.

## சந்திரமேடு


மேல் செவ்வாய் மேட்டை நோக்கினுல் மனக்கண்ணுல் நன்கு ஆராய்பவர். ஒற்றுமையில் அன்புள்ளவர். சங்கிதப் பிரியர். மணிக்கட்டை நோக்கில் அமைதியற்ற யோசனையுண்டாகும். சுக்கிர மேட்டை நோக்கினுல் அழுத்தமான யோசனை ஆவேசத்தில் மூழ்குவிக்கும். உள்ளங்கையைநோக்கினுல் சித்தவிருத்தி; கொடுமையான சக்தியை எழுப்பும்.

## சுக்கிர மேடு

சுக்கிரமேடு கட்டை விரலை நோக்கினுல் ஆவேசத்தால் புத்தி நிர்ணயம். மணிக்கட்டை நோக்கினுல் மிக்க உணர்வுடையவராவார். சந்திர மேட்டை நோக்கினுலும் இந்திரியக் கூர்மையைக் குறிக்கும். கட்டை விரலுக்கும் (ஆள் காட்டி) முதல் விரலுக்கும் மத்தியில் நோக்கினுல் இன்புறுவதில் அன்புடையவர்.

## கீழ் செவ்வாய் மேடு

சுக்கிரமேட்டை நோக்கினுல், பாசத்தைத் தாங்கும் சக்தி உண்டு. குருமேட்டை நோக்கினுல் கர்வத்தைத் தாங்கிநிற்கும் சக்தியையுடைய




குரு, சனி, சூரியன இம்மூன்றும் கிரமமாய் அமைந்திருக்கின்றன. புதன் பாதி சூரியனே நோக்குகிறது. (பூதக்கண்ணுடியினுல் பார்க்க வேண்டும்.)

வாரவர். கட்டை விரலே நோக்கினுல் அபார புத்தி பலத்தைத் தாங்கிநிற்கும் சக்தியையுடைய வாராவர்.

### கிரக மேடுகளில் நோய்க்குறிகள்

கிரகமேடு அதீதப்படுவதாலும், சிக்கலான சில ரேகைக் குறிகள் அமைவதாலும் நோய்களைக் குறிக்கும். கால சந்தர்ப்பத்தை யொட்டி வருமேயன்றி நோய் தொடர்ச்சியாயிராது.

குரு மேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால், தேகத்தில் ரத்தக் கொதிப்பும் சுவாசாசயத் தொந்திரவும் உண்டாகும்.

சனி மேட்டில் கிரகம் உச்சமானுல் நரம்புகளின் தொந்தரவுகள், கால்களில் வலி, காது, பற்கள் சம்பந்தமான நோய்களும் உண்டாகலாம். முட்டுப்பிடிப்பு, பாரிசவாயு, இன்னும் துர்க்கிருத்தியத் தாலும் நோய் உண்டாகக் கூடும்.

சூரிய மேட்டில் கிரகம்உச்சமாயின் சில சமயம் இருதயத் துடிப்பு அதிகரிக்கும். கண் நோய், பார்வையும் குறையும்.

புதன் உச்சமாயிருந்தால் பித்தாசய நோய், மஞ்சக் காமாலே இவைகளேக் குறிக்கும்.

மேல் செவ்வாய் மேட்டில் கிரகம் உச்சமாயின் தொண்டை நோய், இருமல் சம்பந்தமாய் வரக்கூடும்.

சந்திரமேட்டில் கிரகம் உச்சமாயின், மூத்திர கோசத்தில் நோய், மகோதரம், பார்வைக் குறைவு, சில சமயம் குருட்டுத் தன்மை, சோவை, பிடிப்பு, ஸ்திரீ சம்பந்த நோய்களேயும் குறிக்கும்.

சுக்கிரன் உச்சமாயின் மூத்திரேந்திரிய நோயைக் கொடுக்கும். கீழ் செவ்வாய்க்கும் சுக்கிரனுக்குணமேயாகும்.

### கிரகங்களின் விபரீதம்

குருமேட்டில் குருவினுல் எவ்விதமான ஆபத்தும் உண்டாகாது. குரு உச்சத்திலிருந்தால், அன்னோர் ஐம்புலனுக்கதீதமான வழியில் சிந்தை செலுத்துவர். சாஸ்திர ஆராய்ச்சி, ஆத்ம விசாரம், செய்வர். ஒருக்கால் அதிக கர்வங்கொண்டிருந்து அதற்கு பங்கமேற்படில், மனமாய்ந்து உடலே யொழிப்பரெனினும் இது அபூர்வம்.

சனி அதிதப்பட்டால் உயர்ந்த ஸ்தானங்களிலிருந்து தேகத்தைக் கீழே தள்ளுவர். விஷங்களாலும் முடிவைத் தேடுவர்.

மேல் செவ்வாய் அதிதமாயின் எப்பொழுதும் ஆயுதம் வைத்திருப்பர். அதனுல் திடீரென அதனுலேயே தங்களுக்கு முடிவைத் தேடுவர்.

புதன் அதிதமாயின் புதனைப்போல் விபரீதப்படாமல் விஷத்தைத் தேடுவர்.

சந்திரன் அதிதமானுல் தேக பாரம் தாங்க முடியாமல் ஜலத்தில் மூழ்குவர். சூரியனும் சுக்கிரனும் அதிதப்பட்டால் விபரித எண்ணமுண்டாகாது. உலகத்தில் சுகியாய் தானும் மற்றவர்களும் அவ்விதமேயிருக்க ஆசைப்படுவர். கஷ்ட காலத்தில் சுக்கிரன் சமாதானத்துக்கான பல வழிகளேயும் காட்டிக் கொடுப்பான்.


## சிறந்த கூந்தல் ஆகாரம்



உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப் புகழ்பெற்ற **காமினியா ஆயில்** (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10
வி. பி. சார்ஜ் தனி

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

## ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனே யூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும். ஆல்கஹால் கிடையாது.

**விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணு.**

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

**The Anglo Indian Drug & Chemical Co**
**BOMBAY 2.**





## ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜன மாத்திரை
## "பாலக்ஸ்" பேதி மாத்திரை
## "யூனிகான்" டானிக்

14 ஸச. அவுஸ், மாடுங்கா, பம்பாய்.



## வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்

# இந்தியத் தேத்தண்ணீரால்



## தேக திடத்தை விருத்தி செய்

சரீரம் ஆலயத்திற்கொப்பாக அடிக்கடி சொல்லப்படுகிறது. அதை நம்பி நாம் நம் சரீரத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் திடமாயும் வைத்துக் கொள்ள முயலுகிறோம். களைத்த சரீரமோ அல்லது சுறுசுறுப்பில்லாத மனமோ இயற்கையான நிலைமையிலிருப்பதில்லை. அவைகளை சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள ஆரோக்கியமான பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்.

நம்முடைய வீரியம் குறையாமல் ஒரே நிலைமையில் வைத்துக்கொண்டு வருவதற்கும் தேக திடத்தை விருத்தி செய்வதற்கும் தேத்தண்ணீரை வழக்கமாக அருந்துவதை விட சிலாக்கியமான வழி வேறொன்றுமில்லை.

இந்திய தேயிலை மிகவும் பரிசுத்தமானது. மனித சரீரத்திற்கு யாதொரு கெடுதலும் செய்யாதது.



**தேத்தண்ணீர் செய்யும் முறை**—சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. உலர்ந்த பாத்திரம் ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டு உடனே கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும் பெருமையும் –

### இந்திய தேயிலையே

IK 89

Regd. No. 2514



# கொபெய்சான்
# உங்களை கனோரியா என்னும் மேகவெள்ளை நோயிலிருந்து விடுவிக்கும்

எத்தகைய கடுமையான கனோரியாவையும் தீர்க்க வல்லது **கொபெய்சான்**
ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் குணமடைந்திருக்கின்றனர்;
நீங்களும் குணம் பெற்று, சுகித்து வாழலாம்.

இரண்டு அளவுகளில் எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

15 மாத்திரைகள் புட்டி 1-க்கு ரூ. 1. 50 மாத்திரைகள் புட்டி 1-க்கு ரூ. 3. (பாக்கிங் தபால் செலவு 6 அணா.)

## சோல் ஏஜண்டுகள்
## சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி
## 12, மன்ரோ தெரு, பார்க்டவுன் மதராஸ்

... lished by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadessmitran Power Press, Mount Road Madras—*Editor* C. R. Srinivasan, B.A.